www.padippakam.com




ஆண்டான் - அடிமைத் தத்துவம் :
தமிழகத்தில் அன்றும் இன்றும்

---

தேவை, புதிய தேடல்கள் -
அறிவியலிலும் ஆன்மீகத்திலும்

---

மற்றும் நூல் மதிப்புரைகள் -
மடல்கள் அறிக்கைகள்

---

# தமிழ்நேயம் - 3

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நேயம் - 3 முன்னுரை

உலகமயமாதல் நம்மைக் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கி இருக்கிறது. பேராசிரியர் பாண்டுரங்கன் அவர்கள் விளக்குவது போலத் தமிழகத்தில் உடையான உடமைத் தத்துவமாக இந்தப் போக்கு அன்றுமுதல் இன்று வரை செயல்படுகிறது. முதலாளியம் என்று தொடங்கி தீவிரப்பட்ட இந்தப் போக்கினால் தமிழும், தமிழ் இலக்கியமும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன. கம்யூனிச எதிர்ப்பை முன்பு முன்னிறுத்திய ஏகாதிபத்தியம், இன்று பழமரபை புதுப்பித்தல், தேசியவாதம் என்ற முறையில் நம்மை ஒடுக்குவதற்கு பதிலாக மரபு மற்றும் தேசியவாதத்தை ஊக்குவிக்கும் முறையில் நாம் செயல்படமுடியுமென்று நண்பர் பிரபாகரன் தன் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

உலகமயமாதலுக்கு ஒத்த முறையில் மதங்கள் செயல்படுவதை அஸ்கர் அலி (இன்ஜினியர்) மற்றும் தஸ்லிமா நஸ்ரீன் கருத்துக்களிலிருந்து அறிகிறோம். ஆதிக்கங்களை உள்வாங்கிச் செயல்படுகிற மதங்களின் உள்ளே மறைக்கப்பட்டுள்ள ஆன்மீகத்தை நம்மால் உயிர்ப்பிக்க முடியும். ஆன்மீத்தில் மட்டுமல்லாமல், அறிவியலினுள்ளும் நமக்குப் புதிய தேடல்கள் தேவை. சுதாகர், பட்டாபிராமன், கட்டுரைகள் இந்த உண்மையை வெளிப்படுத்துகின்றன.

பிரபஞ்சம் நமக்குள்ளும், வெளியிலும் இயங்குகிறது. இருவகை இயக்கத்தையும் இணைக்க முடியுமா என்பது கேள்வி. இணைக்க முடியாது என்பதனால் இதற்கப்பால் "மூன்றாம் வெளி" என்று பேசுகிறார் நண்பர் ஜீவஒளி. இலக்கியத்தோடு நாம் இன்று முடங்கி விட இயலாது. வரலாறென்றும், மெய்யியல் என்றும், அறிவியல் என்றும், ஆன்மீகம் என்றும் புதிய தடங்களில் நாம் பயணம் செய்ய வேண்டும்.

நண்பர்கள் நிறைய எழுதுகிறார்கள். அறிக்கைகளை அனுப்புகிறார்கள். கேள்விகள் எழுப்புகிறார்கள். தமிழ் மக்களின் ஆக்கம் கருதி இவற்றை அக்கறையோடு நாம் ஆய்வு செய்ய வேண்டும். இத்தகைய பணியை உறுதியாக மேற்கொள்கிற தமிழ்நேயத்திற்கு நண்பர்கள் எல்லாவகைகளிலும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

- தங்கள்

***ஞானி, 12.7.2001***

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளடக்கம்


பக்கம்

**கட்டுரைகள்**

அ) உடையான் - உடமைத் தத்துவம்
- ஆ. பாண்டுரங்கன் 3

ஆ) தமிழ் அரசியல் - ஞானி 10

இ) மரபும் தேசிய உணர்வும் - பிரபாகரன் 15

ஈ) உலகமயமாதலும் மதமும்
- அஸ்கர் அலி இன்ஜினியர் 19

உ) எழுதுகோள் என் ஆயுதம் - தஸ்லிமா நஸ்ரீன் 23

ஊ) தமிழில் நெடுப்புக் கவிதைகள் - ப. குணசேகர் 29

எ) ஆன்மீகம் புதிய தேடல்கள்
- மு. குமரவேல், சுதாகர் 34

ஏ) அறிவியலா, அதிகாரமா, ஆன்மீகமா
- ஆரூர் பட்டாபிராமன் 41

ஐ) திருமூலரும், ஐன்ஸ்டீனும் - ஜீவஒளி 52

ஒ) காற்றாய் புயலாய்
- இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் 61

**நூல் திறனாய்வுகள்** 67

அ) தடை ஓட்டம்

ஆ) தவிப்பு

இ) விதைச்சோளம்

ஈ) கொங்குச் சிறுகதைகள்

**தமிழ்நேயம் - அகமும் புறமும்** 75

**மடல்கள், அறிக்கைகள்** 81


அட்டைப்படத்தில் இயற்கை வேளாண் நிபுணர்
திரு. **கோ. நம்மாழ்வார்** உடன் Dr. **நடராஜன்**, திரு. **தங்கசாமி**,
சேந்தன்குடி, கற்பகசோலை

படிப்பகம்

www.padippakam.com

# கட்டுரைகள்

## தமிழ் இலக்கியத்தில் உடையான் - உடைமைத் தத்துவம்

*- டாக்டர் அ. பாண்டுரங்கன்*

சங்க இலக்கியத்திற்குப் பின்னர்த் தோன்றிய நீதி இலக்கியம் சமண சமயச் செல்வாக்கு மிக்குடையதாக விளங்குகின்றது. சமணரும் பௌத்தரும் புலனடக்கத்தையும், இன்ப மறுப்பையும் மக்களிடையே பரப்பிக் கொண்டிருந்தார்கள். காதல், வீரம், கொடை முதலிய உணர்ச்சிகளிலும், உலகியல் இன்பங்களிலும் ஈடுபட்டிருந்த தமிழ் மக்கள் உள்ளத்தில் இம்மை, மறுமை, ஊழ் என்னும் அறவியல் கோட்பாடுகள் இடம்பெறத் தொடங்கின. இத்தகையதொரு தத்துவத்தின் பின்னணியில் வாழ்க்கை, சிக்கல் நிறைந்த ஒன்றாகச் சித்திரிக்கப்பட்டது. வாழ்க்கையின் சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்குத் தீர்வாகத் துறவைச் சமணபௌத்த சமயங்கள் முன்வைத்தன; மாதவியும் மணிமேகலையும் துறவில் அமைதி காண்கின்றனர், கோவலன், கண்ணகி ஆகியோரின் தந்தையரான மாசாத்துவான், மாநாய்கன் துறவு பூணுகின்றனர். எண்மரை மணந்து எல்லா இன்பங்களையும் நுகர்ந்த சீவகன், இறுதியில் இன்பத்தின் நிலையாமையைத் தெளிந்து துறவு மேற்கொள்கின்றான்.

பக்தி இயக்கம் சமண - பௌத்தர்களுடைய கொல்லாமை, கர்மவினை போன்ற சில கொள்கைகளைத் தமக்குரியனவாக ஆக்கிக் கொண்டாலும், அது காட்டும் பரம்பொருள், சகுனப் பிரம்மாகக் காட்சியளிக்கின்றது. நாம் இயற்றும் ஒவ்வொரு வினைக்கும் உரிய பயனை நுகர்ந்தே ஆக வேண்டும் என்ற சமண, பௌத்தக் கோட்பாடுகளுக்கு எதிராக இறைவன் அருள்நோக்கு நம்மீது விழுமாயின், நாம் செய்த எந்தத் தீவினையும் நமமைத் தொடராது அவன் துணையிருக்கும்போது அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை என்று அப்பர் குரல் கொடுக்கிறார். உள்ளத்தில்இறை நினைவைப் பதித்துக்கொண்டு எத்தொழிலைச் செய்தாலும், எந்த நிலையில் இருந்தாலும், அவர் முக்தராகவே கருதப்படுவார் என்று பக்தி இயக்கம் வலியுறுத்தியது. பிறவித் தளைகளிலிருந்து விடுதலைபெற; பக்தர்கள் இறைவன் திருப்பெயரை நினைத்தால் போதும் துஞ்சும்போது அழைமின்; துயர்வரின் நினைமின்; துயரிலீர் சொல்லினும் நன்றாம்; நஞ்சுதான் கண்டீர் நம்முடை



படிப்பகம்

www.padippakam.com

வினைக்கு நாராயணா என்னும் நாமம் என்று ஆர்வத்தோடு பாடுகின்றார் திருமங்கை ஆழ்வார். இவ்வாறு எளிய வழிகளில் இறைவனை அடைய வழிகாட்டிய சைவ, வைணவ சமயங்கள், சமண, பௌத்தர்களைத் தோற்கடித்ததில் வியப்பொன்றும் இல்லை. தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆராய்ந்து எழுதிய அறிஞர்கள் அனைவரும், பக்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாகவே வருணிக்கின்றனர். பக்தி இயக்கம் வணிக வர்க்கத்திற்கும் நிலவுடமையாளருக்கும் இடையில் ஏற்பட்ட வர்க்கரீதியான முரண்பாடுதான் என்று டாக்டர் க. கைலாசபதி சுட்டிக் காட்டுகின்றார். வர்க்கப் போராட்டப் பின்னணியில் பக்தி இலக்கியத்தின் அடிப்படைக் கொள்கையாக உடையான் - உடமைத் தத்துவம் அமைந்துள்ளது.

சங்க இலக்கியத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளக்கூடிய அரசியல் நெறி யாது? மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் பேரரசு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் தங்களுக்குள் போராடிக் கொண்டே இருந்தார்கள்; தம்மினும் வலிமையில் குறைந்த குறுநில மன்னர்களையும் தலைவர்களையும் அடக்கி ஒடுக்கி வந்தனர். மூவேந்தரும் பாரியின் மீது படையெடுத்துப் பாரியைக் கொன்றதும், ஓரியைச் சேரனுக்காக மலையமான் அழித்ததும் இத்தகைய கொள்கைகளின் விளைவே ஆகும். தோற்றவர்களின் நிலம் வென்றவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசாள் நிலஉடமையாளனாக வளரத் தொடங்கினான். இவ்வாறு பிறர்நாட்டை வலியச் சென்று கைப்பற்றுவதைப் புலவர்கள் வஞ்சித்திணையாக இலக்கணம் செய்து புகழ்ந்து பாடினார்கள். போரிலே கைப்பற்றப்பட்ட நிலங்கள் "தண்ணடைநல்கள்" "மாராயம்" என்னும் பெயர்களில் போரில் ஈடுபட்ட வீரர்களுக்குப் பங்கிடப்பட்டுக் கொடுக்கப்பட்டன.

நாட்டின் பெரிய நில உடமையாளனாக அரசனே விளங்கினான்; அவனிடம் பெற்ற நிலங்களுக்கு இறுக்கப்படும் வரி குறித்துப் புறநானூறு குறிப்பிடுகின்றது. நிலவரியை வசூலிக்கும் அரசு அதிகாரிகள் கெடுபிடி செய்வது குறித்துப் பாண்டியன் அறிவுடை நம்பியிடம் புகார் செய்வது போன்று பிசிராந்தையாரின் பாட்டு புறநானூற்றில் அமைந்துள்ளது.

அரசனைத் தவிர கிராமங்களில் நிலச்சொந்தக்காரர்களாக இருந்தவர்களைக் "கிழார்" என்று சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. "உரிமை" என்ற பொருளைத் தரும் "கிழமை" என்னும் சொல்லிருந்து கிளைத்ததே "கிழார்" என்னும் சொல் ஆகும். சங்கப் புலவர்களில் பலர் இத்தகைய நில உடமையாளர்களான கிழார்களே என்பது



படிப்பகம்

www.padippakam.com

கோவூர் கிழார், மூலங்கிழார், ஆவூர் கிழார் என்னும் புலவர் பெயர்களிலிருந்து தெரிகின்றது.

இத்தகைய கிழார்களின் நிலங்களில் பண்ணைகளில் உழைத்துப் பாடுபட்ட பாட்டாளிகளைப் பற்றி, உழவர்களைப்பற்றி, பழைய இலக்கியங்களிலிருந்து செய்திகள் கிடைக்கவில்லை. பொதுவாக நிலவுடமையாளர் அனைவருமே சாகுபடியில் ஈடுபட்டுவிடவில்லை. பலர் தங்கள் நிலங்களில் மற்றவர்களைக் கொண்டு உழவு வேலைகளைச் செய்திருக்கின்றனர், நிலவுடமையாளரான வேளாளர்களை உழுதுண்போர், உழுவித்துண்போர் என இரு பிரிவுகளாக உரையாசிரியர்கள் குறித்திருப்பது நோக்கத்தக்கது. சிறு அளவில் நிலம் வைத்திருந்தோர் தாமே உழவுத் தொழிலில் ஈடுபட்டனர்; பெரிய நிலவுடமையாளர்கள் விவசாயக் கூலிகளைக் கொண்டு வேளாண்மையில் ஈடுபட்டனர்.

விவசாயக் கூலிகளாக, பண்ணையாட்களாக நிலத்தில் வேலை செய்தவர்களைப் பற்றி இங்கொன்றும் அங்கொன்றுமாகவே குறிப்புக்கள் கிடைக்கின்றன. தொல்காப்பியர் அடியோர், வினைவலர், ஏவல் மரபின் ஏனோர் என்று மூவகைப்பட்ட பாகுபாட்டைத் தருகின்றார். அடியோர் என்போர் ஒருவனிடம் தொடர்ந்து பணியாற்றும் உழைப்பாளிகளைக் குறிக்கும்: இன்றைய சொல்லில் கூறுவதாயின் அவர்களை அடிமைகள் என்று கூறலாம் வினைவலர் என்போர் தற்காலத்தில் கூறப்படுகின்ற skilled labour போன்ற கொல்லர், தச்சர் ஆகியோரைக் குறிக்கும். ஏவல் மரபின் ஏனோர் என்பது எத்தொழிலிலும் பயிற்சி இல்லாத, அனுபவம் இல்லாத Casual labour போன்ற தொழிலாளர்களைக் குறிக்கும்.

இத்தகைய தொழிலாளர்களின் சமூக நிலைமை என்ன என்று எண்ணுவோமாயின் அவர்கள் ஒரு தலைவனை அல்லது நிலவுடமையாளரைச் சார்ந்து அவனுக்காக வேலை செய்யும் தொழிலாளர் கூட்டம் என்பது தெளிவாகின்றது. மெகஸ்தனிஸ் குறிப்பிடுவது போன்று இந்தியாவில் அடிமை முறை இல்லை என்று நாம் சொல்லிக் கொண்டாலும், அடிமைகளே இல்லை என்று சொல்ல இயலவில்லை. கிரேக்க நாட்டில் போன்று அடிமைகளை விற்பதும் வாங்குவதும் இங்கு ஒரு அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கையாக இல்லாவிட்டாலும், ஒருவகையான அடிமைமுறை இருந்ததையே இலக்கியங்களும் பிற்காலக் கல்வெட்டுகளும் காட்டுகின்றன. "அடியுறை" என்று சங்க இலக்கியங்களிலும், "அடியோர்" என்று காப்பியங்களிலும் குறிக்கப்படுகின்ற சொற்கள் இத்தகைய அடிமைகளைக் குறிப்பதே ஆகும்.



படிப்பகம்

www.padippakam.com

அடிமைகளைப் பற்றிய குறிப்புக்கள் பக்தி இலக்கியங்களில் இடம்பெறுகின்றன. சுந்தரரைச் சிவபெருமான் தடுத்து ஆட்கொண்ட வரலாறு நாம் அறிந்ததே. வெண்ணெய்நல்லூர் வேதியராக வந்த சிவபெருமான் சுந்தரரைத் தம் அடிமை என்று வழக்காடி வெல்கிறார்; "ஆசில் அந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கு அடிமை ஆதல்பேச இன்று உன்னைக் கேட்டோம்" "மறையவர் அடிமை ஆதல் இந்த மாநிலத்தில் இல்லை" என வரும் பெரியபுராணத் தொடர்கள் அந்தணர்கள் அடிமைகளாவது இல்லை என்பதைச் சொல்வதோடு, மற்றவாகள் அடிமை ஆகலாம் என்பதைத் தெரிவிக்கின்றன. இவ்வாறு அடிமையாகின்றவர்கள் அடிமைச் சாசனம் எழுதிக் கொடுப்பார்கள் என்பதைச சுந்தரர் வரலாறே காட்டுகின்றது. சுந்தரரின் பாட்டனார் எழுதிக் கொடுத்த அடிமை ஓலையைச் சான்றாகக் காட்டியே வேதியராக வந்த சிவபெருமான் வழக்கில் வெற்றி பெறுகின்றார். வைணவ அடியாரான பெரியாழ்வார் பாசுரமும் நம் கருத்துக்குத் துணை செய்கின்றது. "எந்நாள் எம் பெருமான் உன்றனுக்கு அடியோம் என்று எழுத்துபபட்ட அந்நாளே அடியோர்கள் அடிக்குடில் வீடுபெற்று உய்ந்தது" என்னும் பாசுர அடிகள் இவ்வாறு அடிமைச் சாசனம் எழுதிக் கொடுப்பதை உறுதிப்படுத்துகின்றது.

இத்தகைய அடிமைகளுக்கு ஏதேனும் அடையாளங்கள் உடம்பில் பொறிக்கப்படுவது உண்டு. சிவனடியார்களில் தலைமை பெற்றவராகக் காட்சியளிககும் திருநாவுக்கரசர் சிவபெருமான் தன்னுடைய இலச்சினைய - தம்தோளில் பொறிக்க வேண்டும் என்று வேண்டுகின்றார்; மற்றெவரும் அறியாமல் வாகீசர் தோளில் சிவபெருமானுடைய சிவபூதம் மூவிலைச் சூல முத்திரையையும், விடையின் முத்திரையையும் பொறித்து விடுகின்றது. வைணவ அடியார்கள் தம்தோளில் சங்கு சக்கர முத்திரைகளைப் பொறிப்பது பற்றிப் பெரியாழ்வாரும் பேசுகின்றார். பிற்காலக் கல்வெட்டுகளில் சிவன் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்களின் எல்லைகளுக்குச் சூல முத்திரையும், திருமால் கோயில்களுக் விடப்பட்ட நிலங்களின் எல்லைகளுக்குச் சங்கு சக்கர முத்திரைகளும் பொறிக்கப்பட்டதை இதனுடன் இணைத்துப் பார்க்கும்பொழுது அடியார்கள், இறைவனின் அடிமைகள் என்பது தெளிவாகின்றது.

இத்தகைய அடியார்கள் பரம்பரையாக இறைவனுக்குத் தொண்டு செய்வதை ஆழ்வார் பாசுரங்களும், தேவாரப் பாடல்களும் புலப்படுத்துகின்றன "எந்தை தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்" என்று பாடுகிறார் பெரியாழ்வார்; அவருடைய திருமகளாரான ஆண்டாள் "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமே ஆவோம்;


படிப்பகம்

www.padippakam.com

உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று பெருமிதத்துடன் பாடுகின்றார். சிவபெருமானுக்கே முற்றிலும் ஆட்பட்டமையை அகப்பொருள் மரபில் தன்னை மறந்தாள்; தன் நாமங் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்று அப்பர்பெருமானும் பாடுகின்றார். இவை அனைத்தும் இறைவன் ஆண்டான், பக்தன் அடிமை என்கின்ற தத்துவக் கருத்தைத் தெளிவாக்குகின்றன.

ஆண்டான் - அடிமை என்னும் கருத்து இறைவன் - பக்தன் என்ற மேற்பூச்சில் ஏன்வெளிவர வேண்டும் என்பது நம் வினாவாகின்றது. இதற்கு விடைகாண முன்நோக்கிச் சோழர்கால வரலாற்றுக்கு நாம் செல்ல வேண்டும். சோழர் காலக் கல்வெட்டுக்களில் அடிமைபற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. மக்கள் கோவிலுக்கு அடிமைகளாக விற்கப்பட்ட செய்திகளைப் பல கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. சில சமயங்களில் இத்தகைய விற்பனை, அவர்களுடைய விருப்பத்தின்பேரில் செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. இரண்டு பெண்கள் தங்களையும், சுற்றத்தினரையும், மரபினரையும் கோவிலுக்கு விற்றுவிட்ட செய்தி தெரியவருகின்றது; இத்தகைய சந்தர்ப்பங்களில் சமய உணர்வின் மேலீட்டால் அவர்கள் இக்காரியத்தைச் செய்திருக்கக்கூடும் என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகின்றார். ஆனால், அதே ஆண்டில் அதே கோயிலுக்கு ஆறுபேரை, மற்றொருவர் பதின்மூன்று காசுகளுக்கு விற்றுவிட்ட செய்தியைக் காணும் போது, இத்தகைய விற்பனை அனைத்தும சமய உணர்ச்சியால் செய்யப்பட்டன அல்ல என்று உணரலாம். இராஜராஜசோழன் காலத்தில் இரண்டு அரசு அதிகாரிகள் பனிரண்டு மீனவர் குடும்பங்களைக் கோயிலுக்கு அடிமைப்படுத்திய செய்தி ஒன்று கிடக்கின்றது. அக்குடும்பங்கள் தங்கள் வருவாயிலிருந்து 3/4 கழஞ்சு பொன் கொடுக்க வேண்டும் என்று அவ்வதிகாரிகள் உத்தரவிடுகின்றனர். இதனை அடிமை விற்பனை எனச் சொல்ல முடியாவிட்டாலும் தங்கள் விருப்பத்திற்கு மாறாக இம்மீனவர் குடும்பங்கள் அரசு ஆணையினால் கட்டுப்படுத்தப்படுகின்றன என்பது தெளிவாகிறது. பாணபுரத்தைச் சேர்ந்த வில்லி ஒருவன் தன் குடும்பப் பெண்களைத் தேவரடியார்களாகக் கோயிலுக்குக் கொடுக்கின்றான். அவர்களின் தோளில் சூழ முத்திரை பொறிக்கப்படுகின்றது. தன் மனைவியர்க்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்ட அடிமைகளில் சில பெண்களை ஒருவன் கோவிலுக்கு விற்று விடுகின்றான்; அவர்களுக்குச் சூல முத்திரை இடப்படுகின்றது. சிறிது காலத்திற்குப் பின் இவ்வாறு விற்கபபட்ட அடிமைகள் தம் கடமையைச் செய்யாது எதிர்ப்புக் குரல் எழுப்பியதையும், அதனை சபை விசாரித்ததனையும் அக்கல்வெட்டு கூறுகின்றது. வறுமையிலிருந்து விடுபடுவதற்காகத் தங்களையோ தங்கள் குடும்பத்தினரையோ கோவிலுக்கு விற்றிருக்கின்ற செய்திகள்



படிப்பகம்

www.padippakam.com

நமக்குக் கிடைக்கின்றன. இவை அனைத்தும் ஆண்டான் அடிமை முறைக்கு உறுதியான சான்றுகளாக அமைகின்றன.

உடைமையாளர்களின் பட்டியலில் கோவில்களும் சேர்ந்து விடுவதைச் சோழர் வரலாறு காட்டுகின்றது. பக்தி இயக்க காலத்திலே சமண பௌத்த சமயங்களை வென்ற சைவ, வைணவ சமயங்கள் நாளடைவில் சிவன் கோயில்களையும் திருமால் கோவில்களையும் தங்கள் சமய வாழ்க்கையின் அடிப்படை ஆக்கின. எல்லாம் இறைவனுக்கே உடமை; அவன் உடையான்; நாம் அவனுடைய உடமைகள். இதனைத்தான் சைவ வைணவ பக்தி இலக்கியங்கள் விவரித்துப் பேசுகின்றன. அடியார்கள் இறைவனின் உடமைப்பொருள் என்பதால் தான் அவர்களின் மீது அவ்வச்சமய உடமைக்கு அடையாளமாகச் சின்னங்கள் பொறிக்கப்படுகின்றன. தன்னை இறைவனுடைய உடமை என்று கருதியதால் தான் மாணிக்கவாசகர் "இருந்து என்னை ஆண்டுகொள்; பெற்றுக்கொள்; ஒற்றிவை" என்று பேசுகின்றார்.

பல்லவர் கால இலக்கியங்களிலே மன்னரைக் கடவுளின் அம்சமாகக் கூறும் போக்கு காணப்படுகின்றது. "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று பாடுகிறார் நம்மாழ்வார். கலிங்கத்துப்பரணி, மூவருலா போன்ற சோழர் கால இலக்கியங்கள் குலோத்துங்க சோழனைத் திருமாலின் அவதாரமாகவே பாராட்டுகின்றன. இவை அனைத்திற்கும் முற்பட்ட திருக்குறளிலும் மன்னனைக் கடவுளாகக் கற்பனை செய்கின்றார் வள்ளுவர் "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்" என்பது குறள். மக்களுக்கு அரசன் இறைவன்; அரசனுடைய இல்லமும் கோவில்; கடவுளின் இல்லமும் கோவில். அரசனும், கடவுளும் ஒன்றுபடுத்தப்படுவதன் நோக்கம் தெளிவானது.

வணிகர்களுக்கும் நிலவுடமையாளரான வேளாளர்க்கும் இடையில் ஏற்பட்ட போட்டியில் நிலவுடமையாளர்கள் சைவ வைணவ சமயங்களின் பிரச்சாரப் பின்னணியில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளுகின்றனர். தங்களுடைய அரசியல் அதிகாரத்திற்கு எதிர்ப்பு வராமல் இருப்பதற்கும் அது என்றென்றும் தங்கள் வசம் இருப்பதற்கும் சமய எழுச்சியை உடமையாளர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். ஏனெனில் கடவுளே ஈஸ்வரன் எல்லா ஐஸ்வர்யங்களையும் உடையவன் அவனுடைய சந்நிதியில் எல்லாரும் சமம். அவன் நீதியை நிலைநிறுத்துபவன்; நல்லவர்களைக் காத்து தீயோர்களை அழிக்கின்றவன். அவனுடைய அடியார்களுக்கு எத்தனை சோதனைகள் ஏற்பட்டாலும் அவர்கள்


படிப்பகம்

www.padippakam.com

அவனைப் பற்றி நிற்கின்ற உறுதியிலிருந்து சிறிதும் பிறழக்கூடாது. திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், நந்தனார் போன்ற சிவனடியார்களின் வரலாறுகள் இதற்கு நல்ல சான்றுகள், சோதனைகளைத் தாங்கி, சிவன் திருவடிகளை மறவாத துணிவு பிறந்தால் அவர்கள் மறுமையில் சிவகதி பெறுவர். மாறி மாறி வரும் பிறவிச் சுழலினினின்று விடுதலை பெற்று ஆனந்த மயமான சிவலோகம் பெறுவர்.

இத்தகையதொரு அழகான வருணனையில் மயங்காதவர் யார்? இறைவன் திருவுள்ளத்தை யார் அறிவார்? அவன் அலகிலா விளையாட்டு உடையவன்; அவன் செயல் ஒவ்வொன்றும் நம்மால் புரிந்து கொள்ள முடியாத லீலை திருவிளையாடல். இத்தகைய தத்துவத்தின் முன்னர் சாமானிய மக்கள் என்ன செய்யக்கூடும்? எல்லாம் இறைவன் செயல்; அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற முடிவுக்கு வருகின்றனர். மறுமை உலகின் இனிய கனவுகளில் இம்மை உலகின் கொடிய துன்பங்களை மறக்கின்றனர். இவ்வாறு பக்தி இலக்கியங்கள் காட்டும் உடையான் - உடமைத் தத்துவம் ஆளும் வர்க்கத்தினருக்குச் சாதகமாக அமைகின்றது.

தமிழ் ஆய்வு மையத்தின் தொடக்க விழா கோவையில் சூலை 22-ம் நாள் நடைபெறுகிறது. பேராசிரியர். சந்திரசேகர் தலைமையில், பேராசிரியர் க.ப. அறவாணன், பேராசிரியர் துரை சீனிச்சாமி, பேராசிரியர் பூர்ணசந்திரன் ஆகிய அறிஞர்கள் - "தமிழியல் - ஆய்வுகள் இதுவரை மற்றும் இனி" என்ற பொருளில் ஆய்வுரை வழங்குகின்றனர். நண்பர்கள் கருத்துரைகள் வழங்குகின்றனர்.

ஆய்வுரைகள், கருத்துரைகள் அடுத்துவரும் தமிழ்நேயத்தில் விரிவாக இடம்பெறும். நண்பர்களின் வருகையைப் பெரிதும் வேண்டுறோம்.

இவண்

***ஜே. நாராயணசாமி, மருத்துவர் கோபி, கண. குறிஞ்சி, இரணியன், ஞானி, மா. நடராசன், முனைவர் சு. துரை, புலவர் ஆதி***



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் அரசியல்
# தமிழ்வழிக்கல்வி - தமிழ் இலக்கியம்

- ஞானி

I

கடந்த ஐம்பது ஆண்டுகளாக இங்கு நடைபெற்ற தமிழ் அரசியல் குறித்து இங்கு சொல்லவேண்டும். தமிழை வைத்து நடத்திய அரசியல் இது. தமிழின் பெருமை சொல்லி தமிழ் வரலாற்றின் தொன்மை, மேன்மை முதலியவற்றை ஓயாமல் எடுத்துரைத்து உலக நாகரிகத்தின் உச்சம் தமிழ் நாகரிகம் என்றெல்லாம் சொல்லி மேடை தோரணையில் அழகோடும், ஆர்ப்பாட்டத்தோடும் பேசித் தமிழ் மக்களை தன் வசப்படுத்தியது இந்த அரசியல். தமிழனுக்குச் சாதி இல்லை, மதம் இல்லை என்றெல்லாம் பகுத்தறிவுப் பார்வையைத் தமிழனுக்குள் உருவாக்கி இதற்குமேல் உலகளவில் அவன் பார்வை விரிவு பெறாமல் அவனை இறுகவைத்தது இந்த அரசியல். எங்களை நம்புங்கள் உங்களை வாழ்விக்கிறோம் என்று திரும்பத் திரும்பச் சொன்னதன் மூலம் மக்களின் மீது இந்த அரசியல்வாதிகள் ஏறி அமர்ந்தார்கள். இவர்களை நம்பிய மக்கள் செயலூக்கம் அற்றவர்களாய் அழிந்து போனார்கள்.

காதலும் வீரமும் தமிழினத்தின் இரு கண்கள் என்றும் கதைகள் சொல்லி தமிழனை இன்ப போதையில் இவர்கள் ஆழ்த்தினார்கள். இப்படி எவ்வளவோ செய்ததன் மூலம் தமிழ் மக்களிடமிருந்து அவர்களின் அறஉணர்வை ஆற்றலை இவர்கள் அழித்தார்கள். இப்பொழுது இவர்கள் தெய்வமாகி புரோகிதர்களை தொடர்ந்து உருவாக்கி மக்களை மயக்கத்தில் ஆழ்த்தியிருக்கிறார்கள். ஆங்கிலத்தின் அருமை பெருமைகளை இவர்கள்தான் எடுத்துரைத்தார்கள். இப்பொழுது கொஞ்சம் தமிழே போதும் என்பதும் இவர்கள்தான். தமிழ் மக்களை விடுதலைக்கு வழிவிடாது சிறைப்படுத்தி வைத்திருப்பதும் இவர்கள்தான். ஏகாதிபத்தியத்தைப் பேசமாட்டார்கள். பொறுக்கித்தனமான முதலாளியத்தோடு ஒத்துழைப்பார்கள். பார்ப்பனியத்தை எதிர்க்கிறோமென்று சொல்லிக் கொண்டே பார்ப்பனியத்தோடு ஒத்துழைப்பார்கள்.

ஏராளமான சொத்துக்களை இவர்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழனை எல்லா வகையிலும் வறுமைக்குள்ளாக்கியிருக்கிறார்கள். இன்னும்கூட அடிக்கடி தமிழன் மீது தமிழ் என்ற பன்னீர் தெளிக்கிறார்கள். இப்படி நடைபெறுகிறது, திராவிட இயக்கத்தின் தமிழ் அரசியல். தனித்தமிழ் இயக்கத்தினருக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு இல்லை. பொறுக்கித்தனமான முதலாளியத்தை இவர்கள் மறுப்பதும் இல்லை. பசுமைப்புரட்சி முதலியவை இவர்களுக்கும்


படிப்பகம்

www.padippakam.com

உடன்பாடுதான். அறிவு மற்றும் கலைத்துறைகள் தனித் தமிழில் இருந்தால் போதும் என்பது இவர்களின் அரசியல். இவர்கள் எல்லோரும் மார்க்சியத்தை பெரும்பகுதி மறுப்பவர்கள், சிலசமயம் மார்க்சியத்தை ஒப்புக் கொள்வதோடு சரி.

மார்க்சிய கட்சியினரும் இப்போது தமிழ் பற்றி அக்கறையோடு பேசுகிறார்கள் என்பது உண்மைதான். ஏகாதிபத்திய எதிர்ப்பு முதலியவற்றில் இவர்கள் முனைப்புக் கொள்வதில்லை. தமிழைத்தாய் என்று இவர்கள் சொல்லமாட்டார்கள். தமிழ் மரபிலிருந்து சமதர்மத்தை இவர்கள் வகுத்துக் கொள்ளமாட்டார்கள். தமிழ்மக்களை ஒரு தேசிய இனம் என்று இவர்கள் சொல்ல மாட்டார்கள். தமிழ் வாழ்க என்று இவர்களும்தான் சொல்லிக் கொள்கிறார்கள். தமிழ் இப்படி பலருக்கும் இன்று பயன்படுகிறது. தமிழை இவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மக்களின் விடுதலை என்பதோடு இவர்கள் தமிழை இணைத்துப் பார்ப்பதில்லை.

காலனி ஆதிக்கம் நம்மைக் கடுமையாகத்தான் பாதித்திருக்கிறது என்பதற்கு இந்தத் தமிழ் அரசியலும் தக்கச் சான்றாகிறது. மெட்ரிக் பள்ளிகள் தேவை என்று கருதுபவர்களுக்குள்ளும் செயல்படுவது இந்தக் காலனிய மனப்பான்மை. சந்தைப் பொருளாதாரம் முதலிய பல்வகைப் போக்குகளையும் நமக்குளிருந்து கலைந்து கொள்வதன் மூலம்தான் அடித்தள மக்களின் வாழ்வை நோக்கி நாம் நெருங்கிச் செல்ல முடியும். தமிழ்வழிக் கல்வி என்று பேசுவதன் ஆழ்ந்த அர்த்தம் இதுவாகத்தான் இருக்கமுடியும். தமிழ் வாழ்ந்தால் போதும் என்று கருதுகிற தமிழ் அரசியலும் சந்தைப் பொருளாதாரம் முதலியவற்றோடு வெளிப்படையாக ஒத்துழைக்கிற ஆங்கில வழிக்கல்வியும் சந்திக்கிற இடம் இதுதான்.

## II

இப்பொழுது தமிழ் இலக்கியவாதிகள் குறித்துப் பேசமுடியும். தமிழுக்குக் கடுமையான நெருக்கடி நேர்ந்திருக்கிற இன்றைய நிலையில் தமிழ்வழிக்கல்வி தேவை என்று ஒரு சில இலக்கியவாதிகள் தான் பேசுகின்றனர். ஆங்கிலமே இருக்கட்டும் என்று இரண்டொரு இலக்கியவாதிகள் வெளிப்படையாகப் பேசுகின்றனர். தமிழை நுட்பமாக கையாள்வதன் மூலம் தமிழின் ஆற்றலை மேம்படுத்தும் இவர்கள் தமிழ்வழிக் கல்வியை வெளிப்படையாக ஆதரிப்பது இல்லை என்பது நமக்கு வருத்தம் தருகிறது. இவர்களைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இவர்களைத் தமிழ்ப் பற்று இல்லாதவர்கள் என்றெல்லாம் இகழ்ந்து கூறிவிட முடியாது. நேரிடையாக இவர்கள் தமிழ் வாழ்வின் இன்றைய நெருக்கடிகள் குறித்துப் பேசுவதில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பு இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இல்லை. முதலாளியம் நமக்குள் செய்யும் சீர்குலைவுகள் குறித்து இவர்களுக்கு அக்கறை இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

பசுமைப்புரட்சியின் கேடு குறித்து இவர்கள் அறியமாட்டார்கள். அணுண்டு வெடிப்பு குறித்தெல்லாம் இவர்களுக்கு எந்தக் கருத்தும் இல்லை.

காலனி ஆதிக்கம், முதலாளியம் எத்தனையோ வடிவங்களில் தமிழ் மக்களின் வாழ்வுக்குள் ஊடுருவித் தமிழ் மக்களைத் தகர்த்துள்ளது. நாளுக்கு நாள் தற்கொலைகள் அதிகரித்துவருகின்றன. மனநோயாளிகள் பெருகி வருகின்றனர். விபத்துக்கள் அதிகரிக்கின்றன. நீரும், நிலமும், காற்றும் மாசுபடுவதன் காரணமாக கொடிய பல நோய்கள் நம்மைத் தாக்குகின்றன. ஊழல் இல்லாமல் வாழ முடியவில்லை. இவ்வகைத் தீமைகளில் பாதிப்புக்குள்ளாகாத மனிதர் ஒருவரும் இல்லை.

குடும்பங்களுக்குள் ஏற்படும் சிக்கல்கள் தனிமனிதனுக்குள் ஏற்படும் மனச்சிதைவுகள். இவற்றின் மூலம் தேடி ஆராய்ந்தால் உலகளவிலான பொருளியல் முதலிய சிக்கல்களுக்குள் நாம் செல்ல நேரும். தனிமனித அளவில் அல்லது குடும்ப அளவில் அல்லது நிறுவன அளவில் சில சிக்கல்களைத் தற்காலிகமாக தீர்த்துக் கொள்ளமுடியும் என்பதும் உண்மைதான். அன்பு செய்தல், விட்டுக் கொடுத்தல், மறத்தல், மன்னித்தல் என்ற மனிதப் பண்புகளுக்கு எப்பொழுதும் தேவை இருக்கிறது. எனினும் இதனால் வாழ்வின் நெருக்கடிகள் தீர்வதில்லை. நெருக்கடிகள் வரலாறு அளவில் விரிந்துள்ளன. தத்துவப் பார்வை என ஒன்று இல்லாமல் நமக்குள் மனித ஆளுமை விரிவும், ஆழமும் பெறமுடியாது.

நம் இலக்கியவாதிகளுக்கு இவை பற்றியெல்லாம் அக்கறை இல்லை. விதிவிலக்காக ஒரு சிலரைத்தான் பார்க்கிறோம். அண்மையில் அமரந்தா அவர்கள் மொழிபெயர்த்த "சிலுவையில் தொங்கும் சாத்தான்" நாவலைப் படிக்கும்பொழுது, தமிழகச் சூழலில் இப்படி ஒரு நாவல் இல்லை என்ற வருத்தம் ஏற்படுகிறது. 1980 வாக்கில் கென்யா மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள், நேர்ந்த வேதனைகள் அவ்வளவும் இங்கு நமக்கிருக்கின்றன. தேடிப் பார்த்தால் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில படைப்பாளிகளின் நாவல்களில் இப்படிச் சில இழைகளை மட்டுமே நாம் பார்க்கிறோம். அண்மையில் வெளிவந்த எம்.ஜி. சுரேஷ் எழுதிய இரண்டு நாவல்களை இங்கு குறிப்பிட முடியும்.

தமிழில் அற்புதமான படைப்புக்கள் தொடர்ந்து வெளிவருகின்றன என்ற உண்மையை நாம் மறுக்கவில்லை. டால்ஸ்டாய் இல்லையே, தாஸ்தாவெஸ்கி இங்கில்லையே என்று வருத்தப்படுகிற நாம், இவர்களின் படைப்புக்களுக்குள் நாம் காணும் ஆழங்களும், அகலங்களும் தமிழில் வெளிவரும் படைப்புகளில் ஏன் இல்லை என்று சிந்திக்கிறபோது நமக்குத் தென்படுகிற உண்மை இதுதான். காலனிய மனப்பான்மை நம் எழுத்தாளர்களை முடக்கி வைத்திருக்கிறது. அரசியலை அதன் நேர்முகத்தில் இவர்கள் அணுகுவதில்லை. இந்திய / தமிழகச் சூழலில் அரசியல் ஒரு சாக்கடையாகிவிட்டது என்பது உண்மைதான். ஒதுங்கி


படிப்பகம்

www.padippakam.com

இருப்பதன் மூலம் நம்மை நாமே புனிதப்படுத்திக் கொள்ள முடியாது. ஒதுங்கியிருப்பதன் மூலமே சாக்கடையிலிருந்து தொடர்ந்து வரும் தொற்றுநோய்களிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளமுடியாது.

ஒவ்வொரு நாளும் உலகம் நமக்குள் உள்புகுந்து ஏற்படுத்தும் அதிர்வுகளை வெறும் கவிதை அல்லது இலக்கியம் என்று எழுதி சமணப்படுத்திக் கொள்ளமுடியாது. பெரும்பாலான இலக்கியவாதிகள் நடுத்தரக் குடும்பங்களிலிருந்தும், நகர்ப்புறங்களிலிருந்தும் வருபவர்கள். அடித்தள மக்களிடமிருந்து இவர்கள் விலகி வாழ்கிறார்கள். அடித்தள மக்களின் மீதுதான் இவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்ற உண்மை இவர்களுக்கு தெரியாமல் இல்லை. முதலாளியத்தோடும், அரசு அதிகாரத்தோடும் இவர்கள் ஒத்துழைப்பதும் இவர்களுக்குத் தெரியும்.

திராவிட இயக்கமோ, மார்க்சிய இயக்கமோ இவர்களின் புனிதப் பார்வைக்கு மாசுகளாகத் தான் தெரிகின்றன. தம்மைச் சுற்றிலும் ஒரு கனமான போர்வையை இவர்கள் போர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மனித வாழ்க்கை தான் இலக்கியத்தின் கருப்பொருளாக இருக்கமுடியும். யதார்த்த வாழ்க்கையிலிருந்து எந்த மனிதனும் தன்னை முற்றாக விடுவித்துக் கொள்வது என்றைக்கும் சாத்தியமில்லை. என்னதான் புதிய உத்திகள் என்றும், புதிய பார்வைகள் என்று பேசினாலும் யதார்த்தத்தை எப்படி அணுகுவது, மாற்றியமைப்பது என்பதற்குத்தான் இவை வழிவிட வேண்டும். யதார்த்தத்தின் இயக்கத்தை இவற்றால் அடக்க இயலாது.

மனித வாழ்க்கையில் விடுதலை என்பதுதான் உயர்ந்த இலக்காக இருக்கமுடியும். இலக்கியத்திற்கு மட்டுமல்லாமல் திறனாய்வுக்கும் இதுதான் இலக்கு. சந்தைப் பொருளாதாரம் முதலிய நெருக்கடிகளிலிருந்து மனித வாழ்க்கை விடுதலை பெறவேண்டும். இந்த இலக்கை மனத்தில் வைத்துக் கொண்டு எழுத்தாளர்கள் படைக்க வேண்டும். அடித்தள மக்களின் விடுதலையில்தான் தன் விடுதலையும் இருக்கிறது என்று நம்புகிற எழுத்தாளன், தமிழில்தான் கல்வி இருக்க வேணடுமென்று வெளிப்படையாக இன்று உரத்துப் பேசவேண்டும். இப்படிப் பேசாத எழுத்தாளன் எந்த தளத்தில் யாரோடு சேர்ந்திருக்கிறான என்றெல்லாம் இன்று புரிந்து கொள்ளவும் முடியும். ஏகாதிபத்திய எதிர்ப்பும், பொறுக்கித்தனமான முதலாளிய எதிர்ப்பும், ஆங்கிலவழிக் கல்விக்கான எதிர்ப்பும் தமிழ்மொழிக் கல்விக்கான ஆதரவும் இன்று ஒரு புள்ளியில் இணைய முடியும். தமிழ் முதலாளிய அரசியலுக்கும் இதுவே மாற்றாக முடியும். தமிழ்த்தேசிய அரசியலுக்கும் இதுவே உள்ளடக்கமாகத் திகழமுடியும்.

தமிழ் இலக்கியம் நவீனமாகி வருகிறது. நவீனத்துவம் என்ற புதிய போக்கும், தமிழ் இலக்கியத்தில் ஆற்றலோடு செயல்படுகிறது. நவீன



படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கை குறித்து இவர்களிடம் நாம் அதிகம் எதிர்பார்க்கிறோம். தமிழ் மக்களின் மீது செயல்படும் அரசியல் குறித்து இவர்கள் இனியும் எதிர்மறைப் பார்வை கொள்வதில் அர்த்தம் இல்லை. மார்க்சிய இலக்கியவாதிகள் மற்றும் திறனாய்வாளர்கள் உட்பட அனைத்துத் தமிழ் இலக்கியவாதிகளுக்குள்ளும் இவர்கள் தீவிர பாதிப்புக்களை தூண்ட இயலும். தமிழ் மக்களின் விடுதலைக்கு இவர்களும் தமக்குரிய பங்கைச் செலுத்த வேண்டும்.

அரசியல் உணர்வு அல்லது இயக்கச் சார்பு தமக்கு வேண்டாமென்று கருதி இலக்கியத்தில் மட்டுமே தன்னை குவித்துக் கொண்ட நவீன இலக்கியவாதிகள் பற்றி நாம் சிலவற்றைச் சொல்ல வேண்டும். திராவிட இயக்கத்தையோ, மார்க்சிய இயக்கத்தையோ இவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. மணிக்கொடி காலம் முதலே அரசியலுக்கு எதிரான உணர்வு இவர்களுக்குள் பதிந்துள்ளதை நாம் பார்க்கலாம். காந்திய அரசியலில் சிலர் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தபோதிலும் அனேகமாக இவர்கள் காந்தியத்தை மேன்மைபடுத்தும் நோக்கில் "பாடநூல்கள்" தான் எழுதினார்கள். ஒன்றை மேம்படுத்தி இன்னொன்றைத் தாழ்த்தினாகள். இவற்றைப் பிரச்சார இலக்கியம் என்று சொல்வதில் தவறில்லை. மனித வாழ்வின் நுட்பங்கள் பிரச்சார நோக்கிலான இலக்கியங்களுக்குள் அகப்படுவதில்லை.

மார்க்சியர் வழக்கமாகவே தம் அரசியலை முன்னிலைப்படுத்துவதற்காகவே எழுதினார்கள். திராவிட இயக்கம் அல்லது மார்க்சிய இயக்கம் நம் காலத்தில் எப்படி எல்லாம் நெருக்கடிகளை எதிர்கொள்ளாமல் தமக்குள் சிதைந்தது என்று இவர்கள், கண்டு இருக்கமுடியும். இலக்கியம் மனித வாழ்வை அதன் ஆழம் தேடி உள் குடைந்து செல்ல வேண்டும், வரலாற்றில் நிலைகொள்ள வேண்டும். பிரபஞ்சத்தைத் தனககுள் ஊடுருவ இடம் தரவேண்டும். மனிதனின் நிம்மதியைக் குலைக்க வேண்டும். கடவுள் உட்பட மனிதனுக்குள் இயங்கும் எத்தனையோ அற்புதங்களைச் சொல்ல வேண்டும். பிரபஞ்சம் மட்டுமல்லாமல் மனித வாழ்வினுள் இயங்கும் புதிர்கள் குறித்துச் சொல்ல வேண்டும். மனித வாழ்க்கையைத் தட்டையாக ஒற்றைப் பரிமாணத்தில் சொல்லும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் ஆகமுடியாது.

இவ்வாறெல்லாம் மனித வாழ்வின் நுட்பங்கள் கண்டு மனித விடுதலைக்கானவை இலக்கியங்கள் என்று காண்பவர்களுக்கு மொழி குறித்துத் தீவிரமான அக்கறை இயல்பாகவே இருந்திருக்க முடியும். இத்தகைய நவீன இலக்கியவாதிகள் தமிழ் வழிக் கல்வியிலும், தமிழ் மக்கள் விடுதலையிலும நாட்டம் கொள்வதன் மூலம் தான் இவர்கள் சரியான மற்றும் தீவிரமான இலக்கிய இயக்கத்தினுள் செயல்பட முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

# மரபும் தேசிய உணர்வும்

- *செ. பிரபாகரன்* (லக்னோ)

பல இந்திய எழுத்தாளர்கள் - குறிப்பாய் இந்தோ ஆங்கில எழுத்தாளர்கள் - தங்கள் பேனாமுனையை கூர்மைப்படுத்திக் கொண்டு, தங்கள் படைப்புகளுக்கு மேலும் மேலும் பட்டை தீட்டி மெருகு ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். பல கற்று அறிவு பெருத்துப் போன மேற்கத்திய பிதாமர்கள் அடங்கிய சபைகளில் தங்கள் படைப்புகளிலுள்ள மூன்றாம் நாட்டு மரபுகளையும், தேசிய மரபுணர்வுகளையும், கிழக்கத்திய அடையாளங்களையும் நிராகரிக்க முடியாதபடி நிரூபித்து பாராட்டும் சம்பாத்தியமும் பெறுவதையே குறிக்கோளாய் கொண்டு அவர்கள் அனுதினமும் திரிகிறார்கள்.

திடீரென இந்த 'இந்திய மரபு', 'கிழக்கத்தியம்' மூன்றாம் நாடுகளின் தேசியஉணர்வு போன்ற பதங்கள் அளவுக்கு அதிகமான அழுத்தத்துடன் உச்சரிக்கப்படுவதும், அவற்றிற்கு கொடுக்கப்படும் தேவைக்கு அதிகமான முக்கியத்துவமும், உக்கிரமான இலக்கிய விமர்சனங்களில் கவனம் செலுத்தும் வாசகர்களுக்கு சந்தேகத்தை கிளப்பியுள்ளது.

நமது மரபு, கிழக்கத்திய கலாச்சாரம், மூன்றாம் உலகின் தேசிய உணர்வு போன்ற தேசிய அடையாளங்கள், காலனியாதிக்கத்தின் போது நாம் பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிராக வீறு கொண்டு எழுவதற்கு உந்து சக்தியாக இருந்தன என்பதை யாரும் இன்றும் மறுப்பதற்கு இல்லை. ஆனால் நாம் சுதந்திரம் அடைந்த பிறகு, மேற்படி தேசிய உணர்வுகளுக்கு அவசியம் குன்றியதால், அவை மங்கி, நவீனத்துவமும் பின்-நவீனத்துவம் நம் வாழ்க்கையை கவ்விப் பிடித்துள்ளன. விளைவாய் நமது மண்டல இலக்கியங்களும் நவீன, பின்-நவீன வழிமுறையில் பீடு நடை போட்டு வளர்ந்துள்ளன. இதனால்தான் தேசிய பாரம்பரியத்தில் பிறந்து வளர்ந்த பாரதியின் மரபில் பல நவீன புதுமைப்பித்தன்களும், பாரதிதாசன்களும், ஜெயகாந்தன்களும், தோன்றினார்கள். பகுத்தறிவு பிரச்சாரங்களும், பிற்போக்கு சமூக சக்திகளுக்கு எதிரான முற்போக்கு பிரச்சாரங்களும், சமூக சீர்திருத்த குரலும் மிகவும் உக்கிரமாய் இக்காலக் கட்டத்தில்தான் ஒலித்தன. மொத்தததில் பழைய தேசியவாதத்திற்கு ஒரு தொய்வு ஏற்பட்டது. அதற்காக வரலாறு பழைய தேசியவாதத்தை ஆண்மை இழந்ததாக கருதி குப்பைத் தொட்டியில் வீசிவிட்டது என பொருள் கொள்ளக்கூடாது.


படிப்பகம்

ஏகாதிபத்தியம் இருக்கும் வரை தேசிய இயக்கமும் தேசிய உணர்வும் இருக்கத்தான் செய்யும். தேசிய இயக்கத்தின் தேவையின்மை ஏகாதிபத்தியத்தின் மரணத்துடன்தான் நடந்தேறும். அதற்காக தேசியவாதம்தான் இங்குள்ள அனைத்து சமூக நோய்களுக்கும், சர்வரோக நிவாரணி மாதிரி நினைத்து நாம் துதி பாட ஆரம்பித்தால், அது தவிர்க்க முடியாதபடி நம்மை படுபாதாளத்தில் இட்டுச் செல்லும்.

தேசிய உணர்வு அதற்கே உரிய அத்தனை அபத்தங்களுடனும், பயங்கர போக்குகளுடனும் இன்றுவரை இருந்து வந்திருக்கின்றது. தொடர்ந்து இருக்கின்றது. 1905 ஆம் ஆண்டு வங்கப் பிரிவினைக்கு எதிராக நின்ற தேசிய உணர்வு, 1947-இல் பிரிவினைக்கு துணை நின்றது. பின்னால் காந்தி இரக்கமின்றி சுட்டுக் கொலை செய்யப்படுவதற்கு கூட காரணமாய் இருந்தது.

மிகவும் உணர்ச்சிபூர்வமான இந்த தேசிய உணர்வு சரியான முறையில் கையாளப்பட வேண்டும். நாம் நமது தேசிய உணர்வுகளை, நமது வசதிக்கு தகுந்தாற்போல் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்கு சக்தி படைத்தவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் ஏகாதிபத்தியமோ, நமது தேசிய உணர்வுகளுக்கு தவறான வடிகால் அமைத்து, நமது தேசிய உணர்வுகள் மூலம் தங்களது கிழக்கத்திய நலன்களை காப்பாற்ற அடித்தளம் அமைக்க முனைந்து கொண்டிருக்கிறது.

நமது மரபு, கிழக்கத்திய கலாச்சாரம், மூன்றாம் உலக உணர்வு போன்ற தன்மைகள் நம்மிடையே வலுவிழந்து விடக்கூடாது என்பதில் தற்போது நம்மைக் காட்டிலும், ஏகாதிபத்தியம் ரொம்ப கறாராய் இருக்கிறது. நமது மத, இன, சாதி சகிப்பின்மைகள் வலுவாக இருந்தால்தானே ஏகாதிபத்தியங்கள் தங்கள் நலன்களை எவ்விதச் சிரமமும் இன்றி இங்கே காப்பாற்ற முடியும்?

மூன்றாம் நாடுகளின் மரபும், தேசிய உணர்வுகளும் காப்பாற்ற படவேண்டும் என ஏகாதிபத்தியங்கள் மரண கூக்குரல் கிளப்புகின்றன. மூன்றாம் நாடுகளின் மரபு பழக்கவழக்கங்கள், உணர்வு நிலைகள் எதுவும் மாற்றப்படாமல் - குறிப்பாய் மேற்கத்திய உலகநிலை போல மாற்றப்படாமல் - தொடர்ந்து கிழக்கத்திய உணர்வாகவே இருக்க வைக்க ஏகாதிபத்தியங்கள் 'ஓவர்டைம்' வேலைப் பார்க்கின்றன.

இரண்டு உலகப் போர்களில் ஈடுபட்ட ஏகாதிபத்தியம் தங்களது காலனிகள் பலவற்றையும் பறிகொடுத்து நின்றது. கூடவே இரண்டு உலகப் போர்களும், மேற்கத்திய உலகின் இலக்கிய ஏகபோகத்தையும் முடிவுக்கு கொண்டு வந்துள்ளன. மூன்றாம் உலக இலக்கியங்களும், மேற்கத்திய இலக்கியங்களுக்கு ஈடாக போட்டிப் போட்டு கொண்டு வளர்ந்தன.


படிப்பகம்

www.padippakam.com

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத மேற்கத்திய ஏகபோக இலக்கியவாதிகள், வளர்ச்சியடையாத அல்லது வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் நாடுகளில் இருந்து வரும் இலக்கியங்களை, மேற்கத்திய இலக்கியங்களிலிருந்து தனிமைப்படுத்த, பலப்பல புதுபுதுபதங்களை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி பணிகளில் ஈடுபட்டனர். அப்படி அவர்கள் கண்டுபிடித்த தொடர்கள்தான் 'காமன்வெல்த் இலக்கியங்கள்', 'கிழக்கத்திய இலக்கியங்கள்', 'மூன்றாம் நாட்டு இலக்கியங்கள்' போன்றவை.

நமது இலக்கியங்களுக்கு மேற்படி வியாக்கியானங்களால் பிரச்சினை ஒன்றும் வந்து விடப்போவதில்லை. மேற்படி சிறைப்படுத்தும் சுவர்களை இடித்து தகர்த்து வளரும் வல்லமை நமது இலக்கியங்களுக்கு ஏற்கனவே வந்துவிட்டது. உண்மையை சொன்னால் இந்த மாதிரியான தரப்பிரிவினை ஒருவகையில் நமக்கு வசதிதான். நமது இலக்கியத்தை நாமே புரிந்து கொள்ள ஒரு ஒப்பீட்டு புள்ளி வேண்டுமல்லவா? மேற்கத்திய இலக்கியம் கிழக்கத்திய இலக்கியத்திற்கும், கிழக்கத்திய இலக்கியம் மேற்கத்திய இலக்கியத்திற்கும் ஒப்பீட்டு புள்ளியாக இருந்து விட்டு போகட்டுமே!

மேற்படி போக்குகள் நமது இலக்கியங்களில் ஒரு புதிய வேதியியல் மாற்றத்தை உருவாக்கியது. நமது இலக்கியங்கள் தம் சுயத்தன்மையையும் காத்துக் கொண்டு, அதேசமயம் பல மேற்கத்திய மரபுகளையும் சுவீகரித்துக் கொண்டு, நவீன மற்றும் பின்-நவீன காலக் கட்டத்திற்குள் நுழைந்தன.

அப்படி பிறந்த நவீன, பின்-நவீனவாதிகளின் தலையாய முழக்கம் 'வித்தியாசம்'. எதிலும், எப்போதும், வித்தியாசம். அணுகணமும் படைக்கப்படுவதில் இருந்து வித்தியாசப்பட்டு, அதினிலும் உயர்நிலையை படைத்து வளர்ப்பது என்பதுதான் நவீனவாதிகளின் உத்தி. நவீனம் என்பது முந்தைய மரபிலிருந்து கற்றதிலிருந்து, அதிலும் மாறுபட்ட புதிய மரபை படைக்க முயல்வது, மொத்தத்தில் இந்த நவீனவாதிகளின் பணி எங்கும் எதிலும் இயக்கத்தை ஏற்படுத்துவது. ஒவ்வொரு கணமும் சலசலக்க வைப்பது.

இந்த இயக்கமும் சலசலப்பும்தான் ஏகாதிபத்திய பண்பாட்டு பாதுகாவலர்களை பயமுறுத்துகிறது. உடனே அவர்கள் மூன்றாம் உலகின் பழைய மரபுகளை எந்தவித மாற்றத்திற்கும் உட்படுத்தாமல் அவைகளை அப்படியே காப்பாற்ற வேண்டும் என கூக்குரலிட ஆரம்பித்து விட்டார்கள. அவர்கள் தற்போது கோருவது எல்லாம், கிழக்கத்தியம் மேற்கத்தியத்திலிருந்து வேறுபட்டது என்பதுவும், அதை தொடர்ந்து எந்தவித மாற்றமும் அடையவிடாமல் - முடிந்தால் அதன் பழைய நிலைக்கே அதை தள்ளி - அப்படியே அதை பேணிக் காப்பாற்ற வேண்டும் என்பதும்தான்.


படிப்பகம்

www.padippakam.com

1987 குளிர்காலத்தில், 'டெடாலஸ்' என்ற அமெரிக்க பத்திரிக்கையில், கதலீன் டி மெக்கார்தே என்பவர் தான் எழுதிய கட்டுரையில், 1950 முதல் 1980 வரை "போர்ட் பௌண்டேஷன்" செய்த கலாச்சார திருப்பணியை பற்றி விளக்கியுள்ளார். 1967 வரை கம்யூனிச எதிர்ப்பையே பண்பாட்டு பணியாக செய்துவந்த போர்ட் பௌண்டேஷன், அதன் பின்பு தனது பண்பாட்டு கொள்கையில் ஒரு பெரும் மாற்றத்தை செய்ய ஆரம்பித்து விட்டது. நவீனவாதத்திற்கு பதிலாக பழைய மரபுகளையும் தேசிய உணர்வுகளையும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் காப்பாற்றுவதையே தனது 'பண்பாட்டு மேம்பாட்டு' பணியாக போர்ட் பௌண்டேஷன் செய்ய ஆரம்பித்து விட்டதாம். இதன் உள்ளர்த்தம். 'பண்பாட்டு மேம்பாடு' என்ற போர்வையில், நமது பழைய பிற்போக்கு தன்மைகளையும், நமது பழைய சாதி, சமய, இன பாகுபாடுகளையும், நமது மந்த தன்மையையும் அதே உக்கிரத்துடன் அப்படியே பாதுகாக்க வேண்டும் என்பதுதான்.

தற்போது நமது மரபு பற்றியும், கிழக்கததிய கலாச்சாரம் பற்றியும், மூன்றாம் நாட்டு தேசிய அடையாளங்கள் பற்றியும் காத்திரமாக பேசும் தற்போதைய இந்தோ-ஆங்கில எழுத்தாளர்களுக்கு கிடைக்கும் பணம் மரியாதை யாவும், மேற்படி திட்டச் செயற்பாட்டின் ஒரு அங்மாக இயங்குவதற்கான கையூட்டு என்பதை காத்திரமான ஐரோப்பிய இலக்கிய அசைவுகளை அவதானிப்பவர்களால் எளிதில் இனம் காணமுடியும். சலமான் ருஷ்டியிலிருந்து விக்ரம் சேத்தில் இருந்து, அருந்ததிராய் மற்றும் அனிதா தேசாய் ஈறாக தற்போது ஆங்கிலத்தில் எழுதிக் குவிக்கும் வீர வீராங்கனைகளை அப்படிப்பட்ட மரபைக் காப்பாற்றும் எழுத்துப் படையின் அங்கமாகக்க பல முயற்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

மொத்தத்தில் நமது இலக்கியப் படைப்பாளிகளிடம் முன் உள்ள கேள்வி என்னவென்றால், நாம் நமது மரபுகளையும் தேசிய உணர்வுகளையும் பேண வேண்டுமா? இதற்கான பதில் 'ஆம்' என்பதுதான் சரியாக இருக்கும். ஆம் என்றால் எந்த திசையில் வளர்த்தெடுப்பது.

நாம் நமது முன்னேற்றத்திற்கு சாதகமான மரபுகளையும், தேசிய உணர்வுகளையும் போற்றுவோம். நமது பண்பாட்டு பரப்பில் வெற்றிடங்கள் கிடந்தால், அதை மேற்கிலிருந்து ஏன் உலகம் முழுவதிலிருந்து உள்வாங்கிய விசயங்களை வைத்து சீரணித்து நிரப்புவோம்.

அதேநேரத்தில் உலகமயமாக்கல் உற்பத்தி செய்யும் முதலாளித்துவ பொதுப்பண்பாடு என்ற மாயவலைக்குள் விழுந்து விடாமல், அதற்கு எதிரான பாட்டாளி வர்க்க பண்பாட்டு தளத்தினை உருவாக்குவோம்.



படிப்பகம்

www.padippakam.com

# உலகமயமாதலும் மதமும்

*- அஸ்கர் அலி இன்ஜினியர்*

முதலாளித்துவத்திற்கு மாற்றுக் கண்ட மார்ஸ் ஒருபுறம் அதன் அறிவியல் வளர்ச்சிக்காக வரவேற்றார். மறுபுறம் அதன் பொருளாதார, சமூகக் கேடுகளுக்காகச் சாடினார். அதுபோலவே உலகமயமாதலுக்கும் இரு முகங்கள் உண்டு.

ஒரு தகவலை அறிய நீண்ட தூரப் பயணம், நெடுநாள் காத்திருப்பு என்ற காலம் மாறி அமர்ந்த இடத்திலேயே பிரிட்டீஸ் நூலகத்தைப் புரட்டிப் பார்த்து விடலாம். இன்று அதே வேளையில் சமூக நீதியற்ற அநீதிகளை மலிந்த உருவாக்குகிறது இந்த உலகமயமாதல்.

19-ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய நாடுகளின் காலனியாதிக்கப் பயணம் நாடுபிடித்தல்கூட அன்றைய உலகமயமே. உலகமயம் என்பது இதுவரை பெரும்பாலும் மூலப்பொருளை வாங்கவும், உற்பத்தியை விற்கச் சந்தையையும் தேடியதே. வணிகச் சூதாட்டத்தில் அடிமைப்பட்ட நாடுகள் தங்களது பாரம்பரிய தொழில் நுட்பங்களை, திறமைளை இழந்தன. அல்லது அழிக்கப்பட்டன. மான்செஸ்டர் இயந்திரங்கள் குவிந்து, துணிகளுக்காக டாக்கா மஸ்லின் அழிக்கப்பட்டது. ஒவ்வொரு அடிமைப்படுத்திய நாட்டிலும் நடந்த இத்தகைய சுரண்டலுக்கு எதிராகவே விடுதலைப் போராட்டங்கள் எழுந்தன.

ஆனால் இன்றைய உலகமயம் சில நாடுகள் அல்லது கம்பெனிகளின் கொள்ளை லாபத்திற்காக, அரசியல் மேலாண்மைக்கு வழிவகுக்கிறது. இதற்கான உரிமையை சட்டப்பூர்வமாக உறுதிசெய்ய விரும்புகிறது. இந்த ஏதேச்சகாரத்தை பாதுகாத்துக் கொள்ள மதத்தைக் கூட இவர்கள் பயன்படுத்துவார்கள்.

பிரிட்டிஸ் வியாபாரிகள் இந்தியா வந்தபோது இந்திய மதங்களை ஒன்றுடன் ஒன்று மோதவிட்டனர் அதன் பலனை அவர்கள் போய் 50 ஆண்டுகள் கழித்தும் நாம் அனுபவித்து வருகிறோம். இதற்கு உதாரணம் ஜின்னா. பாகிஸ்தானின் தந்தை என்று போற்றப்பட்ட அவர் மத நம்பிக்கையற்றவர், மதஒழுங்குகள் எதையும் கடைபிடிக்காதவர், தொழுகை செய்யாதவர்.

இன்று உலகெங்கும் வளர்ந்துவரும் வன்முறை இயக்கங்களுக்கு ஆயுதங்கள் வழங்கி வருவது அமெரிக்காதான். போஸ்னியாவிலும், செர்பியாவிலும் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் இஸ்லாமியர்கள், மத வெறியற்றவர்களாக, பல இன மக்களுடன் கலந்து வாழ்ந்த அவர்கள், இன்று திடீரென பகை, வெறுப்பு வளர்த்து மோதிக் கொள்வது யாரால்? யார் அவர்களுக்கு ஆயுதம் தந்தது?



படிப்பகம்

www.padippakam.com

ஆப்கானிஸ்தானத்தில் ருஷ்ய ஆதரவு அரசை ஒழிக்க அமெரிக்காவால் வளர்க்கப்பட்டது தான் தாலிபான். தாலிபான் என்றால் மாணவர்கள் என்று பொருள். அவர்களுக்கு மதம் பற்றி என்ன ஆழமான உணர்வு இருந்துவிட முடியும்? அவர்களிடம் ஆயுதம் கொடுத்து மதவெறியைத் தூண்டியது அமெரிக்கா.

ரஷ்யா - ஈரான் உறவை முறிக்க அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட CIA ஏஜெண்ட் பின்லெடன், காரியம் முடிந்தபின் மதவெறியன் என்று பட்டம் கட்டப்பட்டார். இப்படி தமது பொருளாதார அரசியல் நிலைபாடுகளை உறுதி செய்ய மதவாதம் வளர்க்கப்படுகிறது.

ஜின்னாவுக் மாறாக மத நல்லிணக்கத்தின் பிரதிநிதியாக இருந்தவர்கள் காந்தியும், மௌலானா அபுல்கலாம் ஆசாத். அவர்கள் பிரிவினையை ஏற்கவில்லை. ஒற்றுமைக்காக உயிர்கொடுத்தார் மகாத்மா. விடுதலைக்குப்பிறகு உத்தரபிரதேசத்தில் ராம்பூரில் போட்டியிட ஆசாத்தை வேண்டியது காங்கிரஸ். அது இஸ்லாமியர் பெரும்பான்மை உள்ள தொகுதி அதனால் எளிதில் வெல்லலாம் என்றனர். முட்டாள்தனம் என அதை புறக்கணித்த ஆசாத் "நான் ஒரு இந்தியனாகப் போட்டியிட விரும்புகிறேன். இஸ்லாமியனாக அல்ல என்று மறுத்தார்". பின்னர் ஹரியானாவில் போட்டியிட்டு வென்றார். இப்படி இன்று ஒரு அரசியல் கட்சி உண்டா? தலைவர் உண்டா? நம்மிடம் மத உணர்வு சாதி உணர்வு வளர்ந்து வெறியாகி வருவதைப் பார்க்கிறோம். பணவெறி, பதவி வெறி இவற்றின் காரணமாக மதவெறி, ஜாதி வெறி வளர்க்கப்படுகிறது. சமத்துவமற்ற ஏற்றதாழ்வு மிக்க சமூக அமைப்பு மதவெறியின் வளர்ச்சிக்கான சிறந்த விளைநிலம். மனித உரிமைகளை மதிக்கும் சமூக, நீதியை நிலைநாட்டும், சமத்துவ சமுதாயத்தை அமைப்பதன் மூலமே மத நல்லிணக்கத்தை நாம் வலிமை பெறச் செய்யமுடியும்.

விடுதலைக்கு முன் உத்தரபிரதேசம், பீஹாரில் முஸ்லீம்கள் 25% இருந்தனர். அவர்கள் நிலவுடமைச் சமுதாயம் சார்ந்தவர்களாக இருந்தனர். அவர்களில் கல்வியறிவு பெற்றோர் 25% ராணுவத்தில் 28% காவல்துறையில் 22% என அதிக அளவு இடங்களைப் பெற்றிருந்தனர். ஆனால் விடுதலையின் பின் இந்துகளின் பெரும்பான்மையால் தமக்குக் கிடைத்த இந்த வாய்ப்புக்களை இழந்து விடுவோம் என்ற பயம் பரவியது. இந்த பயத்தை ஜின்னா பிரிவினைக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

சுதந்திரம் பெற்றால் நாடாளுமன்றத்தில் முஸ்லிம்களுக்கு 33% இடம் ஒதுக்கப்படவேண்டும் என்றார் ஜின்னா. 25% ஆன முஸ்லீம்களுக்கு 33% இடம் கேட்பது சனநாயகத்திற்குப் புறம்பானது. ஆனாலும் எதையும் சட்டமாக இந்த 33% உறுப்பினர்கள் ஒப்புதல் இல்லாது செய்ய முடியாது எனவே முஸ்லீம்களுக்கு இந்த ஒதுக்கீடே பாதுகாப்பு என வாதாடினார் ஜின்னா.



படிப்பகம்

www.padippakam.com

இதற்கு முன்னோடியாக 1937 தேர்தலில் 425 இடங்களில் போட்டியிட்ட முஸ்லிம்லீக் 110 இடங்களை வென்றது. காங்கிரஸ் வாக்களித்தபடி அவர்களுக்கு இரண்டு அமைச்சர் பதவி தர வேண்டியதை தரமறுத்தது. இது இஸ்லாமியரிடம் காங்கிரஸ் மீதான அவ நம்பிக்கையை வளர்க்க உதவியது. இதை காங்கிரஸின் ஏமாற்று என்று கூறாமல் இந்து மோசடி என்று கூறி அரசியல் போட்டியை மதப்பிரச்சனையாக்கினார் ஜின்னா.

ஒரு மதவாதம் மற்றொரு மதவாதத்தைத் தூண்டுகிறது. வளர்க்கிறது. இது வரலாறு. 15% மான மேல்ஜாதியினரே 80% பதவிகளையும், அரசு சலுகைகளையும் அனுபவித்தனர். விடுதலையின் பின் 9 ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்தபின்னும் பட்டினி, அறியாமை, அடிமைத்தனம் தொடர்கிறது. மாநிலங்களிடையே மட்டும் ஏற்றதாழ்வு என்பதன்றி - மாநிலங்களுக்கு உள்ளும் ஒருபகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் ஏற்றதாழ்வு. மகாராஷ்டிரத்தில் விதர்பா பகுதி, குஜராத்தின் டாவ், கட்ச் பகுதிகள் தாங்கள் புறக்கணிக்கப்பட்டதாக குறைபடுகின்றன. அஸ்ஸாமில் 4000 வங்காள முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் இந்தியர்களாகிய நீங்கள் எங்களை புறக்கணித்தீர்கள் என்கின்றனர். அவர்கள் தங்களை இந்தியர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. "50 ஆண்டுகால விடுதலைக்குப்பின் எங்கள் எண்ணையை எடுத்துக் கொள்ள அரசு, கம்பெனி துவங்கியது. அது தவிர எங்கள் மூங்கிலை வெட்டிக் காகிதமாக்க டாடாவின் தொழிற்சாலை. இவை தவிர என்ன வளர்ச்சி எங்களுக்கு வந்தது" என்று போர் கொடி உயர்த்துகின்றனர். மேல் சாதி இந்துக்களைக் கொண்ட உல்பா தீவிரவாதிகள் இன்று மிசோ சட்டமன்ற வேட்பாளர்களைச் சுட்டுக் கொல்கிறார்கள். காஷ்மீர் பிரச்சனை கூட மதப்பிரச்சனை அல்ல. அது இனப்பிரச்சனையே. ஜிலானி மட்டுமே அதை மதப்பிரச்சனையாகக் காட்டுகிறார்.

சங்பரிவாரம் முஸ்லீம்களையும், கிருஸ்துவர்களையும் தமது தாக்குதலுக்கு குறியாக வைத்துள்ளனர். ஹிந்து ராஷ்டிரம், அதிலே மேல்ஜாதியினரின் ஆதிக்கம் இதுதான் அவர்கள் குறிக்கோள். முஸ்லீம்களை அயலவர், பாக் உளவாளிகள், வன்முறையாளர்கள் என்ற பிரச்சாரத்தைக் கட்டுப்பாடாகப் பரப்பி வருபவர்கள். இந்தியாவின் எத்தனை முஸ்லீம்கள் வெளிநாட்டினர்? முஸ்லீம்களில் 98% தலித்துகள். இவர்கள் இஸ்லாமுக்கு ஏன் மாறினர்? எது காரணம்?

ஒருவர் மதம் மாற 3 காரணங்கள் இருக்கக் கூடும். பிற மதக்கோட்பாடுகளைப் படித்து மனத்தளவில் அது சிறந்தது எனக் கருதி ஏற்பது (CONVICTION) 2. தமது வசதிகளுக்காக, சூழல் காரணமாக மதம் மாறுவது (CONVERSION) 3. அச்சுறுத்தல் காரணமாக



படிப்பகம்

www.padippakam.com

மதம் மாறுவது (COMPULSION) இதில் வசதிகள், சூழ்நிலைகள் காரணமாக மதம் மாறியோரே பெரும்பான்மை.

மீனாட்சிபுரத்தில் 1981ல் என்ன நடந்தது? ஒரு தலித் இளைஞன் கிராமத்தில் மேல் ஜாதியினர் தெருவில் மேல் சட்டையுடன், செருப்பு அணிந்து சென்றான். அவற்றைக் கழற்றி நடக்க வற்புறுத்தினர். அவன் ஓரளவு படித்தவன். அவனது சகோதரி டாக்டர். எனவே சுயமரியாதை காரணமாக மறுத்தான். அதில் ஏற்பட்ட வன்முறைத் தாக்குதல், காரணமாக அப்பகுதியின் பல தலித் குடும்பங்கள் இஸ்லாமுக்கு மாறினர். கிருஸ்துவ மதம் போல மதமாற்றம் செய்வதை கடமையாக ஏற்றுக் கொண்ட மதமல்ல இஸ்லாம். இஸ்லாமின் தாராள மனப்பிரிவினரான சூபிக்கள் சமூகத்தில் பெறும் மதிப்பைப் பெற்றிருந்தனர். அடித்தட்டு மக்களிடமும் அன்புடன் பழகிய அவர்களின் தன்மையாலேயே பல தலித்துக்கள் இஸ்லாமுக்கு மாறினர். ஒருவரை கத்திமுனையில் மாற்றலாம் ஆனால் அவர் அந்த மதத்திற்கு எப்படி உண்மையானவராகத் தொடர்ந்து வாழமுடியும்?

மேலும் இந்தியஅரசியல் சட்டம் 25-வது பிரிவு இந்தியக்குடி மக்கள் எவரும் தாம் விரும்பிய மதத்தை ஏற்கவும், பிரச்சாரம் செய்வும், மாறிக் கொள்ளவுமான உரிமையைத் தந்துள்ளது. இதை மறுப்பது இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிரான சனநாயகத்து எதிரான பாசிசப்போக்கே. மகாத்மா காந்தி ஒரு நல்ல இந்துவாக, நல்ல ஆன்மீகவாதியாக இருந்தார்.

ஔரங்கசீப்பின் படையில், அக்பர் காலத்தில் இருந்த ரஜபுத்திரவீரர்களை விடவும் அதிக அளவில் இருந்தனர். சிவாஜியை எதிர்த்துப் போரிட ஒரு ரஜபுத்திரத் தளபதியையே ஔரங்கசீப் அனுப்பினார். ரஜபுத்திர வீரர்களின் மீது அத்தகைய நம்பிக்கை கொண்டிருந்தார். சில கோவில்கள் இடிக்கப்பட்டன. காசி விஸ்வநாதர் கோவில் இடிக்கப்பட்டது. ஆனால் காசியில் உள்ள மற்றொரு பெரிய கோவிலாக ஜெய் கம்பினி கோவில் இடிக்கப்படவில்லை. மாறாக ஔரங்கசீப்பின் ஜாகிர் உதவி பெற்றது. உஜ்ஜைனி மஹாகாளி கோவிலுக்கு நெய் விளக்கு ஏற்ற ஔரங்கசீப் வழங்கிய கொடை இன்றும் உள்ளது.

இன்னும் 100 ஆண்டுகளுக்குப் பின் ஒரு சார்புள்ள சரித்திர ஆசிரியர் 1983-ல் இந்திரா காந்தி அமிர்தசரஸ் பொற்கோவில் மீது நடத்திய தாக்குதல் சீக்கிய எதிர்ப்பு வெறியால் நடந்தது என எழுதினால் எப்படி சரியாகும்? பொற்கோவில் மீதான ராணுவ நடவடிக்கைக்கு ஒரு சீக்கியத் தளபதிதான் தலைமை ஏற்றார் என்பதை வரலாறு எப்படி மறைக்க முடியும், இந்திராகாந்தி பொற்கோவிலுக்குள் ராணுவத்தை அனுப்பியதும், பின் மூன்று மாதங்களில் அங்கு சென்று தலைகுனிந்து மன்னிப்புக் கேட்டார் என்பதும் மத நடவடிக்கைகள் அல்ல அவை அரசியல் நடவடிக்கைகளே.

(2.5.2001, கோவையில் ஆற்றிய உரை)

தொகுப்பு : *டாக்டர் ஜீவா*


படிப்பகம்

www.padippakam.com

# எழுதுகோல் என் ஆயுதம்

## - தஸ்லீமா நஸ்ரீன் நேர்காணல்

*முன்னுரையும் மொழியாக்கமும் - டாக்டர் ஜீவா*

தஸ்லீமா நஸ்ரீன் 1993-ல் இந்துத்துவவாதிகளால் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது வங்க தேசத்தில் இஸ்லாமிய அடிப்படை வாதிகளால் இந்துக்களுக்கு நேர்ந்த கொடுமைகளைக் கதையாக்கினார். 'லஜ்ஜா'வை எதிர்த்தனர் பழமைவாதிகள். உயிர்காக்கும் மருத்துவரான இவரது உயிருக்கு விலை வைக்கப்பட்டது. சொந்த மண்ணில் வாழ முடியாத சுதந்திர அனாதையாக நாடுநாடாக வாழ்ந்து வருகிறார். மதங்களை மீறி மனிதர்களை நேசிக்கும் ஒரு படைப்பாளியின் உணர்வுகளைக் காட்டும் நேர்காணல்.

நன்றி : Communalism Combat

❋ 7 ஆண்டுகளுக்கு முன் உங்கள் மீது வெறுப்புத் தீ வீசப்பட்டதன் காரணம் என்ன?

என் எழுத்துக்கள் வெளிவரத் துவங்கிய காலம் முதலே பழமை வாதிகள் என்னை எதிர்க்கத் துவங்கினர். மதம் பெண்ணை அடக்கி அடிமைப்படுத்தும் ஆயுதமாகப் பழமைவாதிகள் பயன்படுத்தியுதைச் சாடினேன். இதை அவர்களால் சகிக்கமுடியவில்லை. முற்போக்கு எண்ணம் கொண்டோரும், புதுமை வேண்டும் மதம் சார்ந்த நல்லோரும் என்னை ஆதரித்தனர். குரானும் ஹிதித்தும்கூட பெண்ணை அடிமைப்படுத்தத் துணை நிற்கின்றன என்றேன். அதற்கான ஆதாரங்களைக் காட்டினேன். அவர்கள் என் புத்தகத்தை எரித்தார்கள். ஏடுகளில் நான் எழுதிய சிந்தனைச் சிதறல்கள் அவர்களுக்கு எரிச்சல் மூட்டின. லஜ்ஜா வங்க அரசால் தடைசெய்யப்பட்டது.

லஜ்ஜாவில் - இந்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வங்கத்தின் சிறுபான்மை இந்துக்கள் தாக்கப்பட்டதையும், அவர்களின் கோவில்கள் இடிக்கப்பட்டதையும் எழுதினேன். வெளிவந்து 3 மாதங்கள் வரை எதிர்ப்பு ஏதும் இல்லை. பின் நான் ஐரோப்பா சென்று வரும் வழியில் கல்கத்தாவின் ஸ்டேட்ஸ்மேன் இதழுக்குத் தந்த பேட்டியில் நேர்ந்த தவறு என் மீதான பெரும் எதிர்ப்பை உருவாக்கியது. நான் குரானில் உள்ளவற்றை மறுபரிசீலனை செய்து திரும்ப எழுதப்பட வேண்டும் என்று சொன்னதாக அப்பத்திரிக்கை வெளியிட்டது. ஆனால் நான் "குரானை நம்பவிலலை. மத நூல்கள் யாவும் தமது இடத்தை இழந்து நிற்கும் காலம் இது.



படிப்பகம்

www.padippakam.com

எனவே நான் குரானைத் திருத்தி எழுதச் சொன்னால் என்ன பயன் தரும்."

என்னைப் பொறுத்தவரை ஷரியத் சட்டத்தை மாற்றி, ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமான நீதிதரும் புதிய விதி எழுதப்பட வேண்டும். அவர்கள் எந்த நியாயத்தையும் காணத் தயாராக இல்லை. பழமைவாதிகள் அனைவரும் என்னை எதிர்ப்பதில் ஒன்றாகிப் போயினர். எனக்கு எதிரான கோஷங்களுடன் லட்சக்கணக்கான மக்களை டாக்கா நகர வீதிகளில் குவித்தனர். என்னைக் கைது செய்ய உத்தரவிட்டனர். எனக்கு எதிராக பழமைவாதிகளும், அரசும் கைகோர்த்து நின்றன.

அந்த பைத்தியகாரர்கள் என்னை எதிர்த்து பொது வேலை நிறுத்தம் செய்தனர். நாட்கணக்கில் கடைகளை மூடவைத்தார்கள். திறந்தவர்களைத் தாக்கினார்கள். 6 பேர் இறந்தார்கள் என்னையும் கொல்ல முயன்றார்கள. நான் தலைமறைவானேன். பழமைவாதிகளின் கையாளான காவல் துறையின் கைகளில் சிக்கிக் கைதானால் நான் உயிருடன் வரமுடியாது என்பது எனக்குத் தெரியும். என்னைக் கொன்றால் சொர்க்கம் கிடைக்கும் என்று நம்பும் மூடர்கள் அவர்கள். எனக்குப் புகலிடம் கொடுக்க எல்லோரும் அஞ்சினர். தினம் ஒரு இடம். இரவிலே ரகசியமாக ஓடுவது. 15 பேர் கொண்ட குடும்பத்தின் சிறுவீட்டில் ஒருநாள் 4 நாட்கள் உணவின்றி பட்டினி. உறக்கமற்ற இரவுகள். குடலை புரட்டும் பயம் இப்படி நாட்கள் ஓடின.

இருள் விலகும் வெளிச்சம் வரும் என்ற நம்பிக்கை மட்டும் சாகவில்லை. ஒண்ணரை மாதம் மூளையைக் கசக்கிய பின் என் வழக்கறிஞர்கள் என்னைக் காப்பாற்ற சட்டத்தில் ஏதும் வழியில்லை என்று கைகளை விரித்தனர். நிலமை மோசமாகிக் கொண்டே போனது. இனி நாட்டை விட்டு ஓடுவது தவிர வேறு வழியில்லை என்றாகிப் போனது. பழமைவாதிகள் வெறிகொண்டு உலவினர். தடுக்கும் சக்தியோ, மனமோ அரசுக்கு இல்லை.

அதேவேளையில் உலகின் பிறபகுதிகளில் இந்த ஜனநாயகத்திற்கு எதிரான குரல்கள் எழுந்தன. மேலை நாடுகள் என்னை விடுவிக்க நிர்பந்தித்தன. இரண்டு மாதங்கள் போராட்டத்தின் பின் என்னை ஸ்வீடனுக்கு அனுப்ப ஒப்பியது அரசு. ஸ்வீடன் நாட்டின் சிறப்புக் காவலர்கள் என்னை விமான நிலையத்திற்குப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். ஆனால் மரணத்தின நிழலில் வாழ்ந்த அந்த 60 நாட்கள் என்னை இப்போதும் கலங்கச் செய்கின்றன. நான் எப்படித் தப்பித்தேன்?


படிப்பகம்

www.padippakam.com

★ இதைப்பற்றி எழுதியுள்ளீர்களா?

இந்த பயங்கர அனுபவத்தை புத்தகமாக எழுது. வெளியிடுகிறேன் என்று பலர் முன்வந்தனர். சில நாட்கள் ஒருபக்கம், 2 பக்கம், 5 பக்கம் அதற்குமேல் எத்தனைமுறை முயன்றும் ஓடவில்லை. அந்த பயங்கரம் என்மீது ஒட்டிக் கொண்டுள்ளது. பின் ஒரு காலத்தில் எழுத முடியுமா என்னவோ?

★ இத்தகைய துயரங்களுக்கும் காரணமான உங்கள் கருத்து தவறு என வருந்துகிறீர்களா?

இல்லை. இல்லவே இல்லை.

★ உங்கள் தாய்நாட்டைப் பிரிந்த துயரம் . . .

6 ஆண்டுகள் ஆகிவிட்டன. என் நாட்டை நான் பிரிந்து என் நாட்டின் பிரிவு 3 ஆண்டுகள் என்னை செயலிழக்கச் செய்துவிட்டன. இப்போது மெல்ல மெல்ல மீண்டு வருகிறேன்.

★ நீங்கள் இப்போது என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?

"என் குழந்தைப் பருவம்" இதை இப்போது எழுதி முடித்துள்ளேன். பிரென்ச், ஜெர்மன் போன்ற மொழிகளில் வெட்டேதுமின்றி பிரசுரமாகி உள்ளது. பள்ளியில் படித்த அறிவியல் - குரானில் படித்த மதநெறி எல்லாம் முரணாகப்பட்டது எனக்கு. மதம் சொன்னது அர்த்தமற்றதாகவும், மனிதாபிமானம் அற்றதாகவும் எனக்குப்பட்டது. இவை பற்றிய பகுதிகள் எல்லாம் தணிக்கை செய்யப்பட்டன.

நான் மிகுந்த கூச்ச சுபாவம் உள்ளவள் என் தந்தை என்னை அடிப்பார். நான் அமைதியாக தாங்கிக் கொள்வேன். ஆனால் மனத்துக்குள் வலி. என்றாவது ஒருநாள் இந்த வேதனையை எழுத்தில் வடிக்க வேண்டும் என நினைப்பேன். மதம் சொல்வது சரியில்லை என்பதை உணர எனக்குப் பல சந்தர்ப்பங்கள் வாய்த்தன. எல்லா மதங்களின் கதையும் இதுதான். எதுவும் விதிவிலக்கில்லை. நான் இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்தவள். அதனால் எனது எதிர்ப்பு இஸ்லாமின் மீது பாய்ந்தது. ஆனால் ஒவ்வொரு மதமும் பெண்ணை ஒடுக்குகிறது.

★ பெண்ணிய நிலைப்பாடு - சிறுபான்மையினர் பிரச்சனை இவை பற்றித் தங்கள் கருத்து என்ன?

பொதுவாக பெண்களும், சிறுபான்மையினரும், ஏழைகளும் அடக்குமுறைக்கு ஆளாகின்றனர். மதம் அதற்குத் துணை புரிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இதை எதிர்த்து ஒடுக்கப்பட்டவர் பக்கமாக எனது எழுத்து என்றும் இருக்கும்.

★ உங்கள் எழுத்தே உங்களது எதிர்ப்பின் குரல். உங்கள் படைப்புகள் எந்த அளவு ஒடுக்கப்பட்டவரின் எழுச்சிக்குப் பயன்பட்டுள்ளன? உங்கள் எழுத்துக்கள் மூலம் மாற்றம் வரும் எனக் கருதுகிறீர்களா?

நாட்டில் 80 விழுக்காட்டினர் கல்வியற்றவர்கள். இவர்கள் கிராமங்களில் உள்ளனர். படித்தவர்கள் நகரங்களில் உள்ள நடுத்தர வர்க்கத்தினரே. பின் எப்படி ஒரு படைப்பாளி அந்த மக்களைச் சென்றடைய முடியும்? ஆனாலும் நான் எழுதியதைப் படித்த பல சாதாரணப் பெண்கள். உன் எழுத்து என்னையே படம்பிடித்துள்ளது. எழுதுவதை நிறுத்திவிடாதே என்பார்கள்.அவர்கள் என்னை மௌனமாக ஆதரித்தனர். என் எழுத்தைப் படித்தபின் வலுக்கட்டாயமாக நிறுத்தப்பட்ட படிப்பைத் தான் தொடர்ந்ததாகச் சொன்னாள் ஒரு பெண். வேலைக்குப் போகாதே என்று தடுத்தவர்களை மீறி வேலைக்குச் செல்லும் தைரியம் தந்தது என் எழுத்து எனச் சில பெண்கள் சொன்னார்கள். இத்தகைய பெண்கள் என் எழுத்தால் உத்வேகம் பெற்றனர். ஆனால் இவர்கள் மிகச்சிலர். என் எல்லைக்கு அப்பால் ஏராளமானோர். அவர்கள் படிக்கத் தெரியாதவர்கள். எழுதத் தெரியாதவர்கள். ஆனாலும் நான் அவர்களுக்காகச் சிந்திக்கிறேன்.

இதனால் பழமைவாதிகள் என்னை எதிர்க்கின்றனர். அவமதிக்கின்றனர். கல்லால் அடிக்கவும் செய்தனர். என்னால் கிராமத்து மக்களை எட்ட முடியவில்லை. என் அறைக்குள் சுருங்கிப் போக நேர்ந்தது. நான் காதல் கவிதைகளை வடித்துக் கொண்டிருந்தவரை அவர்களுக்குக் கவலை இல்லை. என் எழுத்து சமூகத்தைப் பார்த்து, அதன் பிரச்சனைகளைத் தொடத் துவங்கியதும் (1995) பெண்களின் அவலத்தை எழுதத் துவங்கியதும் பிரச்சனை எழுந்தது. இருப்பு நிலையை மாற்றும் சிந்தனைகள் எப்போதும் நில்லாதவை; வளர்பவை. அதில் எனக்கு நம்பிக்கை உள்ளது. கல்கத்தாவில் வெளியான வங்காள பதிப்பும், காளி வெளியிட்ட ஆங்கில பதிப்பும் தணிக்கைக்குப் பின்னரே வெளியாகின. அடுத்து என் இளமை பற்றி எழுதிக் கொண்டுள்ளேன்.

★ வங்க தேச விடுதலைப் போரை ஒட்டிய காலம் பற்றி?

1962-ல் நான் பிறந்தேன். 71-ல் விடுதலைப் போர். வங்க மக்கள் தங்கள் மொழி உரிமைக்காக பாகிஸ்தானிடம் கடுமையாகப் போராடினர். வீதிகள் போர்களங்களானதைப் பார்த்தேன். மதத்தால்



படிப்பகம்

www.padippakam.com

மக்களை ஒற்றுமைப்படுத்த முடியும் என்ற தவறான நம்பிக்கை தகர்க்கப்பட்டது. மதரீதியாக இந்தியா பிரிக்கப்பட்டது தவறு என்பது நிரூபணமானது. விடுதலை வங்கம் மத சார்பற்றதாகவே அமைந்தது. ஏனெனில் மதச்சார்பின்மைக்காகவே போராடினோம். 1975 வரை அரசியலில் மதம் நுழையத் தடை விதிக்கப்பட்டது. பின் அரசியல் தலைவர்கள் பதவி வெறியர்களானார்கள். வங்கத்தந்தை முஜீப் படுகொலை செய்யப்பட்டார். ராணுவம் தன் சுயநலத்திற்காக மதத்தைப் பயன்படுத்தியது. மதச்சார்பின்மை புறம் தள்ளப்பட்டது. மதவெறியர்களின் ஆளுகை ஓங்கியது.

ஜமாது இஸ்லாமி போன்ற தீவிர மதவாத அமைப்புகள் விடுதலைப் போரின்போது பாகிஸ்தானிகள் பக்கம் நின்று வங்கதேசத்திற்கு துரோகம் செய்தனர். பாகிஸ்தானிகளுடன் சேர்ந்து எம் மக்களைக் கொன்றனர். முஜிபின் மரணத்தின் பின் இந்த துரோகிகள் மீதான தடைநீக்கப்பட்டது. அவர்களின் கை ஓங்கியது. மதச்சார்பின்மை பலியானது. சுதந்திரமாக இயங்கிய பல தொண்டு நிறுவனங்கள் தாக்கப்பட்டன. 120 பெண்கள் பள்ளிகளை பழமைவாதிகள் எரித்தனர். இதற்கு இஸ்லாமியப் பெண்களை கிறிஸ்துவர்களாக மதமாற்றம் செய்கிறார்கள் என்ற போலிக் காரணத்தைக் கூறுப் பெண் கல்வியை ஒழிக்க முயன்றனர். அரசும் துணைபோனது. பலமிழந்த தொண்டு நிறுவனங்கள் தீவிரவாதிகளை திருப்திப்படுத்த மதரசாக்களை நடத்தத் துவங்கினர். தொண்டு நிறுவனத்தில் வேலை செய்த பெண்கள் மிரட்டப்பட்டனர். அவர்கள் கணவன்மார் அவர்களை விவாகரத்து செய்யவேண்டும் அல்லது மத எதிரிகள் என தண்டிக்கப்படுவர் என பயமுறுத்தினர்.

★ தங்களது கடவுள் மறுப்புக் கொள்கை எப்படி உருப்பெற்றது?

நான் மத நூல்களை ஆழமாகப் படித்தேன். அதுபோதாதா? எனது 13 வயதில் வங்கமொழி குரானை படிக்கத் துவங்கினேன். தாயாரிடம் வாசகங்களுக்கு விளக்கம் கேட்பேன். "சும்மா படி அர்த்தமெல்லாம் எதற்கு அது தேவையுமில்லை" என்று என்னை அடக்குவார். சலித்துப் போய் அவர் தரும் விளக்கம் எதுவும் எனக்கு திருப்தி தரவில்லை. நான் பள்ளியில் படித்தவற்றிற்கும் குரான் சொன்னதற்கும் பெரும் முரண்பாடு எனக்குப்பட்டது. பெண் கீழானவள், ஆண் மேலானவன். ஆண் சம்பாதிப்பவன் பெண் ஆணின் கட்டளைப்படி நடக்காவிட்டால் அடிக்கலாம். ஒரு புனித நூல் எப்படி இப்படியெல்லாம் கூறலாம் என ஆச்சரியப்பட்டேன். மதத்தின் பெயரால் சமூகத்தில் என்ன என்ன கொடுமைகள் எல்லாம் நடக்கின்றன என்பதைப் பார்த்தேன்.

www.padippakam.com

★ சமூகத்தில் சமூக மாற்றத்தில் படைப்பாளியின் பங்கு என்ன?

நான் ஒரு மருத்துவர். மனிதர்களின் உடல்நோய்க்கு மருந்து தருவதுபோல, சமூக நோய்க்கு மருந்திடுவது என் கடமை. நான் எழுத்தாளியாக வேண்டும் என விரும்பியதில்லை. முயன்றதில்லை. நான் எந்த பெண்கள் இயக்கத்தின் உறுப்பினரும் அல்ல நான் ஒரு தனித்த படைப்பாளி. அவள் தெருவுக்கு வருவதில்லை. போராடுவதில்லை. எந்த அமைப்பின் உறுப்பினரும் இல்லை. பின் எப்படி பெண்ணியப் போராளியாக முடியும் என்கின்றனர். எங்கள் இயக்கத்தில் சேரு உன்னைக் காப்பாற்றுகிறோம் என்கிறார்கள். நான் தனிமனித சக்தியை நம்புகிறவள். எனது சிந்தனை சரியாக இருந்தால் அது வெல்லும். பல இயக்கங்கள் அரசு அமைப்புடன் இணைந்து செல்பவை. எனக்கு எதிரான நிலைபாடுகளுக்குத் துணை போபவர்களும் உண்டு.

நிச்சயமாக நான் ஒரு தெருப் போராளியல்ல. எனது கோபமும் எதிர்ப்பும் எழுத்தில்தான் வெளிப்படும்.

★ வங்க தேசமும் - மேற்கு வங்மும் வங்காளி என்ற முறையில் ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தை முன்பு வெளிப்படுத்தியுள்ளீர்கள். அதுபற்றி இப்போது தங்கள் கருத்து என்ன?

சிக்கலான கேள்வி. நாம் பேசுவது போல் அத்தனை எளிதானதல்ல. வங்கதேசமும் இதை விரும்பவில்லை. மேற்கு வங்கமும் இந்தியாவுடன் இணைந்து இருப்பதையே விரும்புகிறது. ஒரு பெரிய நாட்டின் அங்கமாக, அதன் குடிமகனாக இருப்பதில பல அனுகூலங்கள் உண்டு. வங்கம் ஒரு ஏழைநாடு சிறிய நாடு. பணக்கார நாடாக இருந்திருக்குமானால் வேறு சிந்தனை உண்டாக வழியுண்டு. வங்கத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மை. மேற்கு வங்கத்தின் பெரும்பான்மை இந்துக்கள் வங்கத்துடன் இணைந்து சிறுபான்மையினராவதை விரும்பமாட்டார்கள்.

எழுத்தாளர், மதச்சார்பற்றவர் என்ற வகையில் நான் இதை விரும்பக்கூடும். நான் நாட்டு எல்லைக் கோடுகளை, பிரிவினைகளை மதிப்பவள் அல்ல என்னும் போது என்னை தேச துரோகி என்கிறார்கள். எனக்கு ஒரு கனவு உண்டு. 100, 200 ஆண்டுகள்பின் உலகின் தேச எல்லைகள் யாவும் பொருளற்று, மறைந்து போகக் கூடும். பிரிவினைகள் வான எல்லைக்குள் தூக்கி வீசப்படும். உலகம் ஒன்றாகும். மனிதகுலம் ஒன்றாகும். மதங்கள் பொருளற்றுப் போகும். பிரிவினைகள் மறைந்து போகும். 200 ஆண்டுகளில், 500 ஆண்டுகளின் பின்கூட இது நிகழக்கூடும்.


படிப்பகம்

www.padippakam.com

# தமிழில் நெடுப்புக் கவிதைகள்

கோவை வட்டாரத்தில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் உணர்வும், பகுத்தறிவும் கவிதை ஆர்வமும் கொண்டவராக இடைவிடாமல் செயல்பட்டு வருபவர். நண்பர் ப. குணசேகர் அவர்கள். குழந்தைகளுக்காகவும், முதியவர்களுக்காகவும் நல்ல சில நூல்கள் எழுதியதோடு கண்ணதாசன் என்றும், இராபர்ட் பிராஸ்ட் என்றும், பாப்லோ நெருடா என்றும் அக்கறையோடு இவர் பேசுகிறார். ஆங்கிலத்திலிருந்து நல்ல தமிழில் கவிதைகளை மொழி பெயர்க்கிறார். அண்மையில் இவர் அமெரிக்காவிற்குச் சென்று திரும்பிய பொழுது, தமிழ் மக்களுக்கு இவர் கொண்டு வந்த கலைச் செல்வம் இராபர்டோ ஜீவராஸ் என்பவரின் அற்புதக் கவிதைகள். இவர் அர்ஜென்டைனாவில் வாழ்கிறார். 12 தொகுப்புக்களுக்கு மேல் வெளியிட்டுள்ளார். அவரது கவிதைகளிலிருந்து சுமார் 100 கவிதைகளை இவர் தமிழில் வடித்திருக்கிறார்.

இந்தக் கவிதைகள் தமிழுக்கு முற்றிலும் வித்தியாசமானவை. கவித்துவச் செறிவு மிக்கவை. தென் அமெரிக்க நாடுகளின் வரலாற்று விந்தைகள் சில குறித்தேனும் நாம் அறிவோம். மிகமிக தொன்மையான நாகரிகம் கொண்டவை இந்த நாடுகள்.

ஐரோப்பிய அநாகரிகர்களால் என்னதான் கொள்ளை இடப்பட்டாலும், நாட்டு மக்களின் தத்துவச் செல்வத்தை இவர்களால் அபகரிக்க முடியவில்லை. தொன்மையான எந்த நாகரிகத்திற்கும் உரியது என நம்மால் காணப்படுகின்ற தத்துவ வளத்தை இக்கவிதைகளில் நாம் காணமுடியும். தமிழின் ஆழ்ந்த மரபோடு ஒத்து இயங்குகிறவர்களுக்கு இந்தக் கவிதைகளின் அற்புதம் புரியும்.

கவிஞர் இவற்றை நெடுப்புக் கவிதை (Vertical Poems) என்று குறிப்பிடுகிறார். நெடுப்புக் கவிதைகள் என குணசேகர் சொல்லுகிறார். நெடுமியக் கவிதைகள் என்று நண்பர் சொல்வதைக் குறிப்பிடுகிறார். கவிஞர் கனல் மைந்தன் முன்னுரை தந்துள்ளார். கவிஞர் குணசேகரும் விரிவாக எழுதியிருக்கிறார். இக்கவிதைகளின் தத்துவச் சாரம் கருதி தமிழ்ப் புதுக்கவிதையாளர்கள் இவற்றை அக்கறையோடு கற்கமுடியும்.

கற்றது கை மண்ணளவு என்ற உணர்வு இக்கவிதைகளைப் படிக்கும்பொழுது நமக்கு இயல்பாகவே ஏற்படுகிறது. இன்றைய உலகப் பெருங்கவிஞர்களில் ஒருவராகத் திகழ்கிறார் இராபர்டோ ஜீவராஸ்.

***அறிமுகம் - ஞானி***

நூல் : மொழியின் ஒளித்துளி
ஆசிரியர் : ப. குணசேகர், 28 சரசுவதி அடுக்கு மாடி, 3-வது தெரு, கணபதி, கோவை - 6. விலை ரூ. 20.00



படிப்பகம்

www.padippakam.com

# முதுகு

ஆம்.
எதற்கும் ஒரு பின்பக்கம்
உண்டு
ஆனால் எல்லாப்
பொருட்களுக்கும்
பின்பக்கத்திற்கு
அப்பால் ஏதோ ஒன்று
உண்டு
எல்லாவற்றுக்கும் ஒரு
முதுகு உண்டு
ஆனால்
எல்லாவற்றின் முதுகிற்கு
அப்பாலும்
ஏதோ ஒன்று உண்டு
பின்பக்கம் திரும்பிய
முகங்களால் ஆன
ஓரிடம் உண்டு.
அந்த இடத்தில்
காலடிச்சுவடுகள்
உண்டு
காலடிச்சுவடுகள் அல்லது
காலடிச் சுவடுகளுக்காகக்
காத்து இருக்கும்
காலடிச்சுவடுகள்

அது
கண்குருடாகிப்
போனவனின்
கவிதை வாசிப்பு
பிரெயில் எழுத்து இன்றி
அல்லது செத்துப்போன
மனிதனின்
உதடுகளில் இருந்து
ஒரு செவிடனின் வாசிப்பு
ஆம்
எல்லாவற்றுக்கும் ஒரு
முதுகு உண்டு
ஆனால் இந்த இடம் அடுத்த
பக்கம் தொடங்கும் இடம்
அதற்குச் சமமாக இதோ
இந்த ஒன்று
இந்த ஒன்று திரும்பத்
திரும்பச்
சொல்லப்பட்டு இருக்கலாம்
இந்த ஒன்றும் அதன்
இரட்டிப்பும்
தற்போது


படிப்பகம்

www.padippakam.com

## சாவுக்கண்ணாடி

சாவு சந்திக்காது
கண்ணாடிகளை
அவற்றை அழித்துத்
துடைத்து விடுவோம்
அல்லது உடைத்து விடுவோம்
என்று
அச்சம்கொண்டு.
அதைவிட அழிந்துவிடநேரும்
உடைந்திட நேரும் என்று
அதிக அச்சம் மிகுதியும்
கொண்டு
இரண்டும் ஒன்றே.
எப்போதும் ஒரு கண்ணாடி
மீதம் இருக்கும்
இறப்பில் தன்னைக்
கவனித்துக் கொண்டு
இருக்கும் என்றே.
ஏதோ இறப்பு என்பது
ஒரு -
கண்ணாடிகளின்
கண்ணாடிதான்
ஒரு கண்ணாடி மற்றொரு
கண்ணாடியை எதிர்கொண்டு
ஒரு கண்ணாடி மற்றொரு
கண்ணாடியைப் பார்த்தபடி
இடையில் எதுவும்
இப்போது இல்லை.

## சில காலங்கள் உண்டு

சில காலங்கள் உண்டு
என்னை நான்
நகர்த்தமுடியாமல்.
நான் நகர முடியாமல்
போனது உண்டு
சிலவேளைகளில்
நான் உணர்ந்தேன்
எனது வேர்களை
எல்லா இடங்களிலும்
எல்லாமும் என்னுள்ளே
இருந்து பிறந்தது போலே
எல்லாவற்றிலும் இருந்து
நான் தோன்றியது போலே
அங்கே நான் செய்ய
முடிந்ததெல்லாம்
அசையாமல் நிலைத்து
நிற்றலே
பிறப்பின்போது
இரட்டைமுகங்களோடு
திறந்த கண்களோடு
ஒரு கையில் கொஞ்சம்
அன்போடு
மற்றொன்றில் குளிர்
வெறுப்போடு
என்னைக் கடந்து
செல்வோருக்கு
என்னால் தரமுடிந்ததெல்லாம்
அசைவிலாப் பிரிவின் உறவே
அவருள்ளும் இருந்தது அவ்
வேரே.


படிப்பகம்

www.padippakam.com

## நமது கைகளும் கூட உறங்குவது

நமது கைகளும் கூட
நம்மை ஏமாற்றலாம்
உண்மை என்னவெனில்
நமக்குக் கரங்கள் ஏதும்
கிடையாது
அதனால்தான்
அனைத்தையும்
இழக்கிறோம்
கல்லாயினும்
உயிராயினும்
நமக்குக் கரங்கள் ஏதும்
கிடையாது
அந்த விளங்காத
இயற்கையின் எச்சங்களை
மறைப்பதற்கு இடம்
இல்லை.
மிதக்கும் கோலில் நாம்
வழிந்து போகிறோம்
அதனின்று அனைத்தும்
வழிந்து ஓடலாம்.

உன்னை ஒதுக்கிவிட்டு
உறங்குவது சாத்தியமில்லை
உன்னை எழுப்ப இயலாது
ஒரு குரலால்
உன்னை ஒதுக்கிவிட்டு
உறங்குவது சாத்தியமில்லை
உன்னை எழுப்ப
உனது சொந்தக்குரல்
அருகில் இன்றி
அந்தப் பொழுதில் விழிக்காமல்
உறங்குவது
சாத்தியமில்லை.
அந்தப் பொழுதில் எழுப்பாமல்
உறங்குவது சாத்தியமில்லை
அந்த நொடிப்பொழுதில்
தூக்கம் திறந்த கண்களைத்
தீண்டும் வேளையில்
உறங்குவது சாத்தியமில்லை
அந்தக் கண்களுக்கு
உறக்கம் இனி எப்போதும்
தேவை இல்லை.

www.padippakam.com

## ஒவ்வொன்றும் கைகளை

உருவாக்கும் தனக்காக
உதாரணத்திற்கு மரம்
காற்றைப் பிரிக்க
ஒவ்வொன்றும் கால்களை
உருவாக்கும் தனக்காக
உதாரணத்திற்கு வீடு
யாரையோ பின்தொடர
ஒவ்வொன்றும் கண்களை
உருவாக்கும் தனக்காக
சான்றாக அம்பு
சரியான இலக்கைத்தாக்க.
ஒவ்வொன்றும்
நாக்கை
உருவாக்கும் தனக்காக
உதாரணத்திற்கு
கிண்ணம்
மதுவோடு உரையாட
ஒவ்வொன்றும் கதை ஒன்றை
உருவாக்கும் தனக்காக
உதாரணத்திற்குத்
தண்ணீர்
தூய்மைப்படுத்த
ஆனால் அதே வேளையில்
மனிதன்
விலக்குகிறான்
தன்மைகளை
தன்கைகளை
தன் கண்களை
தனது நாக்கை
தனது கதையை
எதற்காக!
மற்றொரு மனிதனை
உருவாக்க
முன்பின் கேள்விப்படாத
ஊர்வலத்தைத் தொடர்ந்து
தலைமை தாங்கி நடத்த
இந்தவட்ட வளைய
மாற்றுச் சுழற்சியினை
அதன்
மையமும் விலக்கும்.

## எனது பார்வை

எனது பார்வை
எனக்காகக் காத்து
இருக்கும்
பலவற்றில்
அவற்றின்மூலம்
என்னைப்
பார்க்க பிறகு
எனது பார்வையை
என்னிடமிருந்து
எடுத்துச் செல்ல
எனது நினைவு எனக்காகக்
காத்திருக்கும் பலவற்றில்
மறதி என்பது கிடையாது
என்று என்
மனத்திற்கு உணர்த்த
எல்லாமும்
என்னைச் சார்ந்தே இருக்கும்
எனக்குவேர் என்று
எதுவுமே இல்லாதது
போல
அவற்றுக்கும்
வேர் எதுவும் இல்லாதது
போல
அவையும்
எனக்குள் எனக்காகக்
காத்து இருக்குமா?
எல்லாமும் அவற்றுக்
வெளியே
காத்து இருக்குமா?
எனது கரங்கள்
இறுதியில்
என்னைத்தழுவ
திறந்து விரிந்து
இருக்குமா?


படிப்பகம்

www.padippakam.com

# ஆன்மீகம் - புதிய தேடல்கள்

திண்டுக்கல்லில் அடைக்கல மாதா அன்னையர் அமைப்பின் சகோதரிகள் 23.6.2001-ல் வெளியிட்ட நூல், "ஆன்மீகம் - உண்மையும் போலியும்"

நூல் வெளியீட்டுக்காக நான் சென்றிருந்தேன். சரோஜினி புதியவன் நூலைப் பெற்றுக் கொண்டார். நூலைச் சிறப்பிக்கும் முறையில் பேராசிரியர் மா.பா. குருசாமி, சேவியர், மாரிமுத்து, அழகு பாண்டியன் முதலியவர்கள் சிறப்பாக எடுத்துரைத்தனர். கிறித்துவ திருச்சபை முன்வைக்கும் ஆன்மீகம் பழமைவாத ஆன்மீகம். விடுதலைக்காகப் போராடும் இயேசு முன்வைக்கும் ஆன்மீகம் எல்லாவகை அடிமைத் தளைகளையும் உடைத்து நொறுக்குவதன் மூலம் மனித விடுதலையை முன்நகர்த்தும் ஆன்மீகம். இதுதான் உண்மையான ஆன்மீகம்.

நூலின் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு பலரும் இந்த நூல் குறித்து அற்புதமாகப் பேசினார்கள். இரண்டு கட்டுரைகளை இங்கு தருகிறோம். நூலின் விலை ரூ. 25.00. தொடர்புக்கு அடைக்கலமாதா சகோதரிகள் இல்லம், நல்லம நாயக்கன்பட்டி, திண்டுக்கல் - 624 003.

- *ஞானி*

ஆன்மீகம் பற்றிய புதிய விளக்கங்களைக் கூறும் நூல். இயேசு அழைக்கிறார் நற்செய்திக் கூட்டங்கள் என்று மூடநம்பிக்கைக்குச் சாமரம் வீசிக் கொண்டிருக்கும் காலத்தில் புதிய ஒளியைக் கொண்டு வந்துள்ளது இந்நூல். ஆன்மீகத்திற்கு நூறு வகையான விளக்கங்களைக் கூறுகிறது.

நடப்பிலுள்ள பெரும்பாலான மத அமைப்புகள் கூறும் ஆன்மீகத்தை பழைமைவாத ஆன்மீகம் என்று இந்த நூல் விளக்குகிறது. இயேசு என்கிற தனிமனிதன் "இவ்வுலகிலுள்ள மனிதர்களின் துன்பங்கள் அனைத்தையும் போக்குவதற்கே பிறந்தார்; அவர்மூலமே மனிதகுலம் அழிவிலிருந்தும் பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் மீட்கப்பட்டது" என்கிற வாதத்தைப் புதுமைவகை ஆன்மீகம் சாடுகிறது. இவ்வுலகச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு மார்க்சியம் முன்வைக்கும் தீர்வுகளையே உண்மையான ஆன்மீகமும் கூறுகிறது.

"மனித வாழ்வு சூழலால் கட்டமைக்கப்படுகிறது. அதுபோலவே


படிப்பகம்

www.padippakam.com

சூழலை மாற்றக் கூடியதாகவும் மனிதன் விளங்குகிறான். வரலாற்றின் பேராற்றல்கள் மனிதனிடம் உறைந்துள்ளன. ஆதிகாலத்திலிருந்தே கருவிகளை / பொருட்களைப் படைப்பதன் மூலம் மனிதன் தன்னையும் படைத்துக் கொள்கிறான். தன்னைப் படைத்துக் கொள்கிறபோதே மனிதன் உலகத்தையும் புதிதாகப் படைக்கிறான்." பரிணமிக்கும் ஆன்மீகத்தின் மேற்கண்ட கருத்துக்கள் மார்க்சியமேயன்றி வேறல்ல.

பொருளியல் சூழலால் வாழ்க்கையிலிருந்து அயன்மைப்பட்டு நிற்கின்றோரின் குரலாக இறப்பின் ஆன்மீகம் சொல்கிறது.

"பொருளுக்கு அடிமைப்படும் மனிதன் பொருளாகி விடுகிறான். பொருள் உயிர்பெற்று இவனை ஆள்கிறது. இவனோ சவமாகிறான்" ஆன்மீகம் என்ற பெயரில் மக்களை மேலும் துயரத்தில் தள்ளிக் கொண்டுள்ள இன்றைய நிலையில் இத்தகைய கருத்துக்கள் போலிகளின் முகத்திரையைக் கிழிக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

ஏசுவின் வாழ்வைப் புதிய முறையில் பொருள்படுத்துகிற இயேசுவின் ஆன்மீகம் மக்களுக்கு மிக நெருக்கமாக ஏசுவை ஆக்கியுள்ளது. ஏசுவின் வாழ்க்கையை விடுதலை நோக்கில் பொருள்படுத்துகிற ஆன்மீகம் இன்றைய வரலாற்றுத் தேவை. இலஞ்சமும் ஊழலும், மனித உரிமை மீறல்களும், அடக்குமுறையும் ஒடுக்குமுறையும், குடிநாயக விரோதப் போக்குகளும் தலை விரித்தாடுகின்ற இன்றைய நிலையில் இத்தகைய பார்வை மெய்யான நியாய உணர்வுகொண்ட கிறித்தவர்களை இயேசுவின் ஆன்மீகம் கவர்ந்திழுக்கும்.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் மார்க்சியத்தோடு மிக நெருக்கமாக இருக்கிறது தமிழ்த்தேசிய ஆன்மீகம். தமிழ்த்தேசிய ஆன்மீகத்தைக் கருத்தியல் ரீதியாக வளர்த்தெடுக்கும் முறையில் பல்வேறு துறைகளில் ஆய்வுகள், நடத்தப்படல் வேண்டும். தமிழ்த்தேசிய ஆன்மீகத்தின் நடைமுறைகள், செயல்பாடுகளும் திட்டமிடப்படல் வேண்டும்.

பல்வேறுவகை ஆன்மீகங்களைப் பற்றிய சுருக்க வரலாறாகவே இந்த நூல் இருக்கிறது. குறிப்பிட்ட ஒவ்வொரு துறைவாரியாக விரிந்த அளவில் நூல்கள் வரவேண்டும்.

புத்தரின் வாழ்க்கை இன்றளவும் நம்மை ஒட்டுமொத்த விடுதலைக்காக உழைக்கத் தூண்டும் கலங்கரை விளக்கமாக


படிப்பகம்

www.padippakam.com

ஒளிர்கிறது. 2500 ஆண்டுகளுக்கு முந்தைய அவரது சிந்தனைகள் இன்றும் நடைமுறை வாழ்விற்கு வழிகாட்டுவதாக அமைந்திருக்கின்றன. நுகர்வெறி திணிக்கப்படுகிற நிலையில் எளிய வாழ்க்கை, அனைவருக்குமான வாழ்வு பற்றிய புத்தரின் கருத்துக்கள் முக்கியமானவை. இயற்கைச் சூழல் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இன்றைய நிலையில் சூழலியல் பற்றிய புதிய விளக்கங்களைப் புத்தரின் கோட்பாடுகளிலிருந்து உருவாக்க முடியும்.

பல்வேறு வகைப்பட்ட ஆன்மீகங்களைச் சுருக்கமாக விளக்கியுள்ள இந்த நூலில் இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் அவசியமான சுற்றுச்சூழல் ஆன்மீகம் பற்றியும் பேசவேண்டும். புவிச்சூழலை நாசப்படுத்துவதன்மூலம் மக்களை வறியவர்களாக மாற்றி வருகிற ஆதிக்க அரசியல் போக்குகள் சூழலியல் ஆன்மீகத்தின் விமர்சனத்திற்குள்ளாக வேண்டும்.

விடுதலை என்பது மூன்றாம் உலகத்திற்கு மட்டுமல்ல. முதல் இரண்டு உலகங்களுக்கும் சேர்த்துப் பெறப்படவேண்டும். அப்போதுதான் அந்த விடுதலை நிலையானதாக இருக்கும். உலகளாவிய சிந்தனையை மனத்தில் நிறுத்தி நம் நாட்டு விடுதலையை முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் உலகநாடுகளிலுள்ள விடுதலையின்மீது நாட்டங்கொண்டோர் நம்மை ஆதரிப்பர்.

மத அடிப்படைவாத சக்திகள் நாளும் வளர்ந்துவரும் சூழலில் மத அமைப்புக்குள்ளிலிருந்து இத்தகைய நூல் வெளிவந்திருப்பது மகிழ்ச்சிக்கு உரியது. இத்தகைய சிந்தனை கொண்ட பிற மதத்திலுள்ளோரையும் ஒருங்கிணைத்து பொதுவான விடுதலை இறையியல் முழக்கத்தை முன்வைக்க முடியுமானால் அது ஆதிக்கத்திற்கெதிரான போர் முழக்கமாக அமையும்.

- *மு. குமரவேல்*

## இன்றைய தேவை - புதிய ஆன்மீகம்

2500 ஆண்டுகட்கு முன்பு புத்தரால் ஆன்மீகத்தின் அடிப்படைகளைக் கேள்விக்குள்ளாக்க முடிந்தது. 'ஆன்மா' என்று ஒன்று இருக்க முடியாது என்கிறபொழுது ஆன்மீகம் என்பதும் பயனற்ற சொல்லாகிவிடுகிறது. 'ஆன்மா' என்கிற மறுவுலகு சார்ந்த அருவமான ஒன்றை புத்தர் நிராகரித்ததில் வியப்பேதும் இல்லை. அதற்குப் பதிலாக மனம் என்ற சொல்லே மனித வாழ்வின் நுண்ணிய


படிப்பகம்

www.padippakam.com

உணர்வலைகளை விளக்கப் போதுமானது என்கிறார். இன்று, புத்தரைப் பின்பற்றிப் பலரும் ஆன்மீகம் என்ற சொல்லைக் கைவிடுகின்றனர். மனவளக்கலை, உள்ளொளி, உயிரியக்கம், தரிசனம் போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றனர். இவற்றில், உயிரியக்கம் என்ற சொல் மிகவும் புதுமையானதாகவும், இடைவிடாத தேடலில் நாமிருப்பதையும் உணர்த்துவதாயுள்ளது.

வறண்ட கோட்பாடுகள், அதிகார நிறுவனங்கள், புரோகிதம் வளர்க்கும் மடங்கள், வெற்றுச் சடங்குகள், கண்மூடித்தனமான பழக்கவழக்கங்கள் மனித வாழ்வில் தேக்கத்தையும், திசைகளற்ற போக்கையும், இறுக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளன. மனிதன் தன்னை உணர்ந்து கொள்வதற்கும், விடுவித்துக் கொள்வதற்கும் இவை தடைகளாகிவிட்டன. பெரும் சுமைகளாக மாறியுள்ளன. புரோகிதக் கூடாரங்கள் முன்னிறுத்தும் செபங்கள், தபங்கள், நோன்புகள் மனிதனை விடுவிக்கவில்லை.

இன்றைய ஆன்மீகத்தில் உயிரில்லை. உயிர்களுக்கு மரியாதை இல்லை. இசையாசு, மோயீசன், இயேசு, நபிகள், புத்தர் போன்றோர் இறந்தவற்றோடு மாரடிக்கவில்லை. உயிரின் ஆழத்தில் பயணித்தனர். சமயக் கோட்பாடுகளால் நடைப்பிணமாக்கப்பட்ட மனித வாழ்வை உயிர்ப்பித்தனர். இவர்களைப் பின்பற்றிய சூபிகள், சித்தர்கள், அசிசிகள் முட்டாள்களாய்க் கருதப்பட்டனர். இதயத்திற்கு இடமில்லாமல், மூளைக்கு மட்டும் வேலை கொடுத்தனர். இதனால், சங்கரர்களும், தாமஸ் அக்குயினாசுகளும் சமயத் தளங்களை ஆக்கிரமிக்க முடிந்தது.

தத்துவம் கோட்பாடு என்றெல்லாம் இறையியல் தளத்தில் முன்னிறுத்தப்படுபவை இன்று கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன. கேள்விகளை அங்கீகரிக்காத, பதில்களை மட்டுமே அதிகாரத்தோடு திணித்துக் கொண்டிருக்கிற நிலை விமர்சனத்திற்குள்ளாகிறது. 'எமக்குத் தேவை பதில்கள் அல்ல; கேள்விகள்' என்கிற குரல் உரத்து ஒலிக்கிறது.

ஆன்மீகத்தில் போலி முகங்கள், பொய்யான அடையாளங்கள் கழன்று வீழ்கின்றன. சமூக நெருக்கடிகளை விட்டு ஓடி ஒளிவது, எதிர்கொள்ளத் திராணியின்றி தப்பித்துச் செல்வது, பிச்சைக்காரர்களைப் போல யாசிப்பது, மண்ணுக்குரியவற்றை, உடல் சார்ந்தவைகளைக் கீழானதாகவும், இழிவானதாகவும் கருதுவது, தூய்மை, புனிதம், ஒழுங்கு என்ற பெயர்களில் மக்களிடம் வன்முறையைத் திணிப்பது, கடவுளின் பெயரால் மனிதனின் சுதந்திரச் சிறகுகளை முறித்துப் போடுவது


படிப்பகம்

www.padippakam.com

போன்றவற்றிற்கு இன்றைய மனிதன் முற்றுப் புள்ளியிடவே விரும்புகிறான். கனவுகளையும், இலட்சியங்களையும், புதுமைகளையும் நேசிக்கிறவனுக்கு இறுகிய மதக்கோட்பாடுகள் அருவருப்பாயுள்ளன. சக்கைகளையே சத்தானவை என்று சித்தரித்துக் கொண்டிருக்கிற ஆன்மீகத்திற்கு அவசர சிகிச்சை செய்யவே விரும்புகிறான்.

கொல்லாமையைப் போதித்த புத்தனைப் பின்பற்றுகிறவன், கையில் துப்பாக்கியோடு அலைகிறான். ஆப்பிரிக்கப் பழங்குடியினரைக் கொல்வதற்குக் கத்தோலிக்க கன்னியரில் சிலர் தமது மடத்திலிருந்து பெட்ரோல் வருவித்துத் தருகின்றனர். நபிகளின் சகோதரத்துவம் தலீபான்களைத் தொடவில்லை. மசூதியை இடித்த இந்துமத வெறியர்கள் கைகளில் ஏந்திய சூலாயுதங்களை இன்னும் எறிந்துவிடவில்லை. அல்லேலூயா இரைச்சல்களும், வேதாத்திரி விற்பனைகளும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. நம் காலத்தில் ஏற்பட்டுள்ள ஆன்மீக வீழ்ச்சி இது.

அன்றைய யூத சமூகத்தில் உற்பத்தியில் ஈடுபடாத குருக்கள் 20,000 பேர் இருந்தனர். சமூகம் இவர்களுக்கும் சேர்த்தே உழைக்க வேண்டியிருந்தது. இன்று, உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கக் குருக்களின் எண்ணிக்கை 15 இலட்சம். உலகின் பெரும் பணக்காரர்கள் அமெரிக்காவில், அரபு நாடுகளிலிருப்பதாகக் கூறுகின்றனர். அவர்களையெல்லாம் விஞ்சுகிற விதத்தில் உலகின் முதல்பெரும் பணக்காரராய்த் திருத்தந்தை விளங்குகின்றார். இரண்டு ஆடைகள் வைத்திருந்தால்கூட ஒன்றை இல்லாதவனோடு பகிர்ந்து கொள் என்கிற இயேசுவின் அதிகாரப்பூர்வ வாரிசுதாரராகத் திருத்தந்தை இருப்பது எத்தகைய முரண்பாடு!

மகாவீரரிடம் என்ன கேள்வி கேட்டாலும் ஏழு பதில்களைச் சொல்வதை வழக்கமாய்க் கொண்டிருந்தார். கடவுள் இருக்கிறாரா என்று வினவினால், கடவுள் இருக்கிறார், கடவுள் இல்லை, கடவுள் இருக்கிறார் - இல்லை, இரண்டுமே கிடையாது போன்று ஏழு பதில்கள் கூறுவார். இந்தக் கேள்விக்கு இதுவே பதில் என்று கறாரான, இறுகிய போக்கினை அதிகார பீடங்கள் முன்னிறுத்துகின்றன. கேள்விக்குப் பதில் இதுவாக இருக்கலாம், அதுவாயிருக்கலாம், இன்னொன்றாகவும் இருக்கலாம் என்கிற பன்முகத் தேடல், இறுக்கங்களைப் போக்கும். புதிய திசைகளைக் கண்டறிய உதவும்.

மானுடத்தின் கால்களை ஊனமாக்கிவிட்ட மதப்போலிகளின் பிடியிலிருந்து நம்மை விடுவித்து கொள்ளத்தான் வேண்டும். சமயம் மனிதனைப் பக்குவப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அந்நியப்படுத்திவிட்டது. ஒதுங்கு - ஒதுக்கு - ஒடுக்கு என்கிற


படிப்பகம்

www.padippakam.com

ரீதியிலான சமயம், மக்களை கீழ்மைப்படுத்தவே செய்யும். சமத்துவமும், சனநாயகமும் சமயத்திற்குள்ளும் வந்தாக வேண்டும் உண்மையான ஆன்மீகமே எதிர்காலத்தை உய்விக்கும். அரசியல் ரீதியாக மக்களை அணிதிரட்டும்போது கலக வெடிப்புகள் பீறிட்டுக் கிளம்பும். ஆன்மீக மனிதன் எனப்படுபவன் முழு அளவில் தன்னை மாற்றங்களுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். அவனது அக்கறை அவனது விடுதலை மட்டுமல்ல. அகிலத்தின விடுதலையுமாகவே இருக்கமுடியும். புத்தர் கூறியவாறு, 'உனக்கு நீயே விளக்காயிரு' என்பதிலிருந்து தொடங்குகிற ஆன்மீகம் எதிர்கால உலகினை வெளிச்சமாக்கும்.

குடிசை மக்கள் கோயிலுக்கு வந்து கொண்டிருக்கும் கதைகளுக்கு முற்றுப்புள்ளியிட வேண்டும். குடிசைகளுக்குக் கடவுளர்கள் வந்தாக வேண்டும். சிறைச்சாலைக்குத் திருப்பலிகள் வரவேண்டும். சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில், சோசலிசப் பாதைக்குத் திரும்புவதில் உண்மை ஆன்மீகம் பணியாற்ற முடியும். போலி ஆன்மீகம் முதலாளியத்தைத் தாங்கிப் பிடிக்கையில், உண்மை ஆன்மீகம் பொதுமை நோக்கி நகர முடியும்.

மனுக்குலத்திற்கு வரும் அபாயங்களை எதிர்கொள்வதே உண்மை ஆன்மீகம். 1963 ஜுன் 11 அன்று தீச் குவாங் டக் என்னும் புத்த துறவி வியட்நாம் மக்கள் படும் துயரங்களின் மீது உலகின் கவனத்தைக் கொண்டு வரவும், அரசின் ஏதேச்சதிகாரப் போக்கினைக் கண்டித்தும் தனது உடம்பிறகுத் தீயிட்டுக் கொண்டார். அவரைத் தொடர்ந்து ஏராளமான துறவிகள் அமைதி வேண்டி தீயில் மாய்ந்தனர்.

1965-ல், மார்ட்டின் லூதர்கிங்கிற்கு தீச் நாட் ஹன் என்னும் புத்த துறவி கடிதம் எழுதினார். அதில் தீட்சை பெறும் ஒவ்வொரு புத்த துறவியும் மக்களின் துயரத்தைக் கணக்கில் கொண்டு தங்களின் உடம்பில் ஒரு பகுதியைச் சுட்டிப் பொசுககுவதைச் சுட்டிக் காட்டி, தனது உடலுக்குத் தானே தீயிடுவது என்பது எரியும் பிரச்சினையைத் தீர்த்திட வேண்டுமென்கிற பேராவலின் உச்சக்கட்ட வெளிப்பாடு என்று குறிப்பிட்டுள்ளார்.

கலக ஆன்மீகம் :- இயேசுவிடம் மற்றொரு வகையான ஆன்மீகம் வெளிப்படுகிறது. தன்னை அழிக்க முனைவோனை அழிக்காமல் அழிந்து போவது கோழைத்தனமானது எனக் கருதுகின்றார்.

கயவர்களிடத்தில் தான் சிக்கிக் கொள்ள நேரிடும் என்பதை ஊகித்தறிந்த இயேசு தனது சீடர்களை எச்சரிக்க வேண்டி, ஆடையை விற்றேனும் வாள் வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறார். சாட்டையும்,


படிப்பகம்

www.padippakam.com

வாளும் இயேசுவின் கலக ஆன்மீகத்திலிருந்து விலக்கப்பட்டவை அல்ல. ஆள்வோர் அக்கிரமங்கள் புரிவார் எனில், அவர்களை எதிர்த்துப் போர்புரிவதைத் தவிர வேறுவழியில் நீதியை நிலைநாட்ட முடியாது என்று திடமாய் நம்பினார்.

அமைதிக்காகப் போராடுபவனே ஆன்மீகவாதி. அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்தெறிய ஆயுதம் ஏந்துகிறவனே உண்மையின் தேடலை உள்வாங்கியவன். சூழலுக்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்வது என்பதுகூட சூழலோடு ஒத்திசைந்து வாழ்வதற்கல்ல. சூழலை மாற்றியமைப்பதற்குத்தான்.

ஊசிபோட்டு மரண தண்டனைக் குற்றவாளியைக் கொல்வதற்கு அமெரிக்காவில் கடும் எதிர்ப்பு கிளம்பியது, மரண தண்டனைக்குரிய குற்றவாளி புஷ்தான் என்று முழக்கமிட்டனர். வன்முறையின் இன்னொரு பக்கத்தைப் புரட்டிப் பார்ப்பதற்கு அமெரிக்க சனநாயகத்தில் இடமிருக்கிறது இங்கு இல்லை.

மனித வாழ்வைவிடக் கடவுளோ, சமயமோ, வழிபாடுகளோ பெரிதாகிவிட முடியாது. இவற்றுக்கு அதிகமாக இடம் தரும்போது, மனித வாழ்வு சிதைக்கப்படுகிறது, ஒடுக்கப்படுகிறது.

வாழ்வு மைய ஆன்மீகம் நோக்கி மனிதகுலம் தன்னை முன்நகர்த்த வேண்டும். கதைகளும், பாடல்களும், விளையாடல்களும் நிறைந்த வாழ்வைப் போலிகளுக்கு ஒருக்காலும் தாரைவார்க்க முடியாது. மகிழ்ச்சியான வாழ்வை மனிதர்கள் தமக்குள்ளும், வெளியிலும் படைத்துக் கொள்ளவே வேண்டும். ஒன்றைப் புதிதாகப் படைப்பவன், உருவாக்குவன் உண்மை ஆன்மீகத்திற்கு நெருக்கமாயிருக்கிறான். நம்மைப் படைப்பாளிகளாய் உருவாக்கிக் கொள்ளும்போதுதான், மாயைகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள முடியும்.

உலகம் மோசமாகிவிட்டது. சமூகம் சீரழிந்து விட்டது என்றெல்லாம் கூறுகிறோம். அதற்குக் காரணம் மனிதன் மோசமாகிவிட்டான். மனிதன் பிரச்சினையாகிவிட்டான். பிரபஞ்ச இயக்கத்திலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டான். மனிதன் தன்னைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். இதையே உண்மை ஆன்மீகம் என்போம். ஆம், புதிய உலகம் புதிய மனிதனின்றி உருவாக முடியாது. இன்று புதிதாய்ப் பிறப்போம். என்றும் புதுமையில் திளைப்போம். இறுகிப் போகாத நெகிழ்வு வாழ்வை ஆன்மீகமெனக் கொண்டாடுவோம்.

*- சுதாகர்*

www.padippakam.com

# அறிவியலா? ஆன்மீகமா? - இல்லை அதிகாரமா?

- ஆரூர் பட்டாபிராமன்

நிகழ் இதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பாக 'அறிவியல் அதிகாரம் ஆன்மீகம்' வெளிவந்துள்ளது. தோழர் கோவை ஞானி தொகுத்து உள்ளார். சிங்கராயர், ரவிசீனுவாஸ், பிரமீள், பூர்ணசந்திரன், ஜீவஒளி ஆகியோர் பெரும்பான்மையான கட்டுரைகளைத் தந்துள்ளனர். அகிலன், அசோக், துரைமடங்கன், கட்டுரைகளும் தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளன. எரிக் ஃப்ராம், ஆபிரஹாம் மாஸ்லோ, ஜாக்வஸ் எலுவின் (அல்ஜெனி) ஜெரேமி, ரிப்கின் போன்ற சிந்தனையாளர்கள் எளிய முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். டார்வின், ப்ராய்டு விவாதிக்கப்படுகின்றனர். சூழலியல் பற்றிய கவலை அக்கறையோடு வெளிப்படுகிறது. சுஜாதாவின் விஞ்ஞானப் பார்வை பற்றி பிரமீளும், பிரமீளின் பார்வை பற்றி ரவிசீனுவாஸும், ஜீவ ஒளியும் விவாதிக்கின்றனர்.

இத்தொப்பு அறிவியல் தொழில் நுட்பத்தின் இயக்கவியலை விவாதிக்கின்றது. முரண்களை முன் வைக்கின்றது. அறிவியல் குணங்கள் என்பதன் மீதான நம்பிக்கையை கேள்விக்கு உட்படுத்துகின்றனர் கட்டுரையாளர்கள். விருப்பு வெறுப்பற்றது; துல்லியமானது; உண்மைக்கு மிக நெருக்கமானது; சோதிப்பதற்கு கதவுகளை திறந்தே வைத்திருப்பது என்பதாக அறிவியலின் பண்புகள் போற்றப்படுகின்றன. அறிவியல் தொழில்நுட்பம் மக்களுக்கு பூமியில் சொர்க்கத்தைப் படைத்து விட்டதா? என விமர்சிக்கின்றனர். அறிவியல் தொழில் நுட்பத்தில் ஆதிக்கம் நுழைந்து தங்கிவிட்டது. ஆதிக்கவுணர்வு பற்றிய குற்றவுணர்வு அதற்கில்லை. இயறகையை பண்டமாக சரக்காக மாற்றுகிறது. நவீன அறிவியல் தொழில் நுட்பத்தால் நடைமுறையில் பெரும் கேடுகளே விளைந்துள்ளன. முதலாளித்துவ அமைப்பில் மட்டுமல்ல, சோசலிச அமைப்பிலும் இதே அனுபவம் தான் கிடைத்தது. நிலம், காற்று நஞ்சாகிவிட்டது. மரபுவழி வித்துக்கள் மறைந்துபோகின்றன. நிலத்தடி நீர்வளம் குறைகிறது. உவர்தன்மை மிகுந்து வேளாண்மை கெட்டுப்போகிறது. நோய்ப்பெருக்கம் மிகுகிறது. உடல்நலத்திற்காக மருந்து என்பது போய் மருந்துகளைச் சார்ந்ததாக உடல்நலம் மாற்றப்படுகிறது. மேற்கூறிய கருத்தாக்கங்கள் கட்டுரைகளினூடாக விவாதிக்கப்படுகின்றன. பல



படிப்பகம்

www.padippakam.com

கிடைத்தற்கரிய கருத்துச் சுரங்கங்களாக அமையப்பெறும் செய்திகளை ஒரு சேரத் தருவது தமிழ் உலகத்திற்கு ஞானி ஆற்றும் பெரும் சேவை. தமிழ் சமூகம் ஓரளவிற்காவது புதியனவற்றை உள்வாங்கும்போது தனது சொந்த சூழலையே மாற்றிக் கொள்ளும். விவாதம் நிரம்பிய கேள்வி கேட்டுப் போராடும் ஆற்றல் உள்ள அறிவுச் சமூகமாக தமிழுலகம் மாறும்போது தீவிர அரசியல் மாற்றங்களுக்கான முரசு அதிரும்.

## II

கட்டுரையாளர்கள் விவாதத்தின் ஊடாக பல கருதுகோள்களை முன்நகர்த்துகின்றனர்.

- டார்வினியம் முதலாளிய உலக கோட்பாடுதான் என்கிறார் ரிப்கின். போட்டி எனில் அதற்கான வன்முறை இருக்கத்தான் செய்யும் என்பதை டார்வினியம் நியாயப்படுத்துகிறது. புதிய முதலாளிகளின் சாயலாகவே இயற்கை உள்ளது என்பது போல் டார்வினியம் புரிந்து கொள்கிறது - "பயனுள்ளது நல்லது" என்ற பெயரில் "தகவமைவதே பயனுள்ளது" என்றாக்குகிறது - நல்லவன் வாழ்வான் என்பதல்ல; வாழ்பவனே நல்லவன் என்ற சித்திரத்தை உருவாக்குவது.

- சாடிசம் பற்றி பொருத்தமான விளக்கத்தைத் தருகிறார்கள். மற்றவர் மீது தான் செலுத்தும் சக்தியிலிருந்து ஏற்படும் இன்பம் அது. மற்ற மனிதனை சாடிஸ்ட், ஜடமாக்கி விடுகிறான் என்று தீர்ப்பிடுகிறார் அசோக்.

- மாஸ்லோவின் 'சமாதி' நிலை கருத்து இந்திய சிந்தனையில் கொண்டாடப்படும் மரபுடன் ஒத்துப் போகிறது. உலகை வெறும் அறிவு பூர்வமாக அறிவதற்குப் பதிலாக - நம்முள் உலகம் புக, உலகை நோக்கி நாம் மிதக்க உருவாகும் எல்லையற்ற நிலை படைப்புச் செயல் அனுபவத்துடன் தொடர்பு கொண்ட நிலை.

அறிவியல் முறை - கலை, இலக்கியம் பிற துறைகளைவிட மேம்பட்டது. அது வளர்திசையில் தான் செல்லும் என்ற மாயை தகர்ப்பை 'அறிவியல் அதிகாரம் ஆன்மீகம்' நடத்துகிறது. எந்த அறிவியல் கொள்கையும் தற்காலிகமானதுதான். அது தவறென்று நிரூபிக்கப்படாதவரை ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அறிவியலின் சிறப்பு அதன் நம்பகத் தன்மையில் இல்லை. சாத்தியபாட்டில் தான் சாரமாகிறது என்றார் கார்ல் பாப்பர். தொழில்நுட்ப பார்வையின் தன்னாட்சியில் மனிதன் குறுக்கப்படுகிறான். தொழில்நுட்பம் தன்னை

www.padippakam.com

வழிபடக்கூடிய கும்பல்களை உருவாக்கிவிடுகிறது. மனித அறிவாற்றலை அளத்தல் என்ற கார்டிசிய பார்வைக்கு சமூகநீதி தெரியாது. அளக்கப்படும் அறிவாற்றலை நிர்ணயிப்பது யார் என்பது அதிகாரம் குறித்த கேள்வியாக எழுகிறது. நுழைவுத் தேர்வில் வடிகட்டப்படும் பலர் வாழ்விலிருந்தே வடிகட்டப்பட வேண்டும் என்ற அடையாளத்தை 'அதிரடி அறிவு தர்பார்' வழங்குகிறது. கணினி மனிதனை தகவலாக சுருக்கி அவனையும் மற்றுமொரு 'icon' ஆக்கிவிடுகிறது. அறிவியல் ஒளிவுமறைவற்றது என்ற 'தூக்கிவைப்பு' நடைமுறையில் நிகழ்கிறது. விஞ்ஞானிகள் எந்த அளவு வெளிப்படையானவர்கள் என்பதை நாம் அறிவோம். அவர்கள் தங்களுடைய ஆய்வுகளை எவ்வாறு இரகசியமாகப் பாதுகாக்கின்றனர். வடிவக் காப்புரிமை பெறுகின்றனர். இதில் அதிகாரம் எதிரும் இணையுமாக பங்காற்றல் நடத்துவதை நாம் அறிவோம். இன்றும் கோகோ கோலா கலவை 'சிதம்பர ரகசியமாக' இல்லையா? நியூட்டன் வாழ்க்கையின் கசப்பான பின்னணியையும் லீப்னிட்சுடன் அவருக்கிருந்த சர்ச்சையில் அவருடைய தந்திரங்களையும் ரவிஸ்ரீனுவாசன் வெளிக்கொணர்கிறார். இயற்பியலாளர்களின் தராசு நியாயத்தராசா இருக்க வேண்டியதில்லை என்கிறார். உலகின் விஞ்ஞானிகளில் பெரும்பான்மையோர் இராணுவத் தொடர்புடைய ஆய்வுகளில் ஈடுபட்டிருப்பதை எவ்வாறு கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியும்?

சுஜாதாவின் 'விஞ்ஞானப் பார்வையிலிருந்து' என்ற நூல் நவீன பௌதீக இயலுக்கும் சனாதன கருத்துக்களுக்கும் முடிச்சுப்போடும் முயற்சி - இந்துமதம் விஞ்ஞானத்திற்கும் சமூக தர்மத்திற்கும் விரோதமாக உள்ளஎதையும்அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்கிறார் பிரமீள். அறிவியலுக்கும் ஆன்மீகத்திற்கும் விளக்கங்களைத் தேடுகிறார் பிரமீள். விஞ்ஞானத்தின் கருவி புலன்களைச் சார்ந்து, ஒருவரினால் இன்னொருவருக்குப் புகட்டப்படக்கூடிய அறிவு. ஆன்மீகத்தின் கருவியோ புலன்களைத் தாண்டியது . . . புகட்டப்பட முடியாத சுயதரிசனமானது. ஆன்மவியல் பரிபூரணமான மன அடக்கத்தினை அஸ்திவாரமாகக் கொண்டது. ஆன்மதரிசனம் அறியாமல் அறியும் நிலை. இயக்கம் யாவும் ஓய்வடையும்போது மனித அறிவையும் தாண்டி பிறப்பது அது. மிகவும் ஆழ்ந்த சில இடங்களில் மட்டுமே விஞ்ஞானியும் ஆன்மதரிசியும் எதிரும் புதிருமாகச் சந்தித்து உடனே பிரிகின்றனர். விஞ்ஞானி அறிவை கௌரவித்து பேணி வளர்த்து சேகரித்து உறுதிப்படுத்துகிறவன். ஆன்மதரிசி அறிவை மௌனமாக்கி மீறிவிடுகிறவன். விஞ்ஞானம் மனிதனது உச்சகட்ட முயற்சியின் விளைவு - ஆன்மீகம் மனித முயற்சிகளைத் துறந்த


படிப்பகம்

www.padippakam.com

ஆழமான செயலின்மையின் விளைவு. நமக்கு மிகவும் இந்தியச் சூழலில் பழகிப்போன வரையறுப்பு தான். ஆன்மீக புளகாங்கிதத்தை தான் பிரமீள் பொங்கப் பொங்க நமக்குத் தருகிறார்.

வேதாந்தம் நவீன வாழ்விற்குத் தேவை என்று கூறும் சுவாமி ரங்கநாதனந்தாவும் இந்தியா அணுகுண்டு தயாரிக்கலாம் என்றுகூறும் ராஜாராமண்ணாக்களும் எந்தவித முரண்பாடுமின்றி ஒரே மேடையில் அமர்ந்து பேசமுடியும். இங்கு மத அதிகார அமைப்பும், விஞ்ஞான அதிகார அமைப்பும் ஒன்றை ஒன்றுஎதிர்ப்பவை அல்ல. ஆசீர்வதிப்பதாக உள்ளது என்ற மிக முக்கியமான கருதுகோளை ரவிசீனுவாஸ் முன்நகர்த்துகிறார்.

சந்திர - சூரிய கிரஹணம் பற்றி வகுப்பில் பாடம் எடுத்துவிட்டு வீட்டில் அன்று பீடை கழிய தர்ப்பண மந்திரமோதும் அறிவியல் பேராசிரியர்களை நாம் இன்றும் பார்க்கமுடியும். விஞ்ஞானியும், ஆன்மஞானியும் சுயதரிசனம் பெறுவதில் எங்கும் எவ்விதத்திலும் வேறுபாடு கொள்வதே இல்லை. இருவருக்கும் ஐம்புலன்கள்தான். ஆன்மீகவாதிக்கு அதிகப்படியாக ஆறு, ஏழு இல்லை என்று சாட்டை சொடுக்குகிறார் ஜீவஒளி.

## III

'அறிவியல் அதிகாரம் ஆன்மீகம்' என்ற இந்த நூலை அக்கறையோடு வாசிக்கும்பொழுது, இந்தச் சிக்கல் குறித்து இன்னும் பல அறிஞாகளும் ஆய்வாளர்களும் செய்துள்ள ஆய்வுகளை நாம் ஆழ்ந்து வாசிக்கும்படி தூண்டப்படுகிறோம். இம்முறையில் கார்ல் பாப்பர் முதற்கொண்டு குணதிலக உட்பட பலரது ஆய்வுகளை இங்கு சுருக்கமாக தொகுத்துக் கொள்கிறேன். அதன்பிறகு இந்தக் கட்டுரை நூல் குறித்து சில விமர்சனங்களையும், இறுதியில் தர விரும்புகிறேன். இக்கருத்துக்கள் மேலும் விரிவா வாசிப்புக்களுக்கு உரியவை.

கார்ல் பாப்பரின் மாணவரில் ஒருவர் நம்முடைய கே.ஆர். நாராயணன் - நமது குடியரசுத் தலைவர். கார்ல் பாப்பர் வேடிக்கையாகக் கூறுவாராம், "What is mind? - no matter; What is matter? never mind . . . " அறிவியல் கூட ஒருவகை இயற்கைதான் என்ற சிந்தனை கொண்டவர் நாராயணன். எதுவுமே ஏதுமில்லாததில் இருந்து வருவதில்லை. பொருள்கள் மாற்றப்படுகின்றன. தகவமைக்கப்படுகின்றன. அறிவியல் இதற்கு உதவுகிறது என்கிறார் நாராயணன். தகவல் தொழில் நுட்பக் காலத்தில் நாம் விவாதித்த பல


படிப்பகம்

www.padippakam.com

தத்துவக் கேள்விகள் இன்று நெருக்கடியைச் சந்திக்கின்றன. நினைவு எங்கிருந்து தொடங்குகிறது? மறைகிறது போன்ற சிந்தனையின் மர்ம முடிச்சுகளை அறிவியல் அவிழ்த்து விடுகிறது. இந்த நிலையில் பொருள் - ஆன்மா - சிந்தனை என்ற தத்துவப் பழம்பெரும் கேள்விகள் வழக்கற்றுப் போகும் நிலை உருவாகிறது என்கிறார் சிந்தனையாளர் அனில் ரஜூம்வாலே. வெக்டர், லீனியர் என்ற அளவில் இருந்த நாம் மரபணு பொறியியல், தனி கம்ப்யூட்டர்களில் நிற்கிறோம். யோசிக்கும் மனித உயிரிகள் என்பதற்கு இணையாக சிந்திக்கும் எந்திரங்கள் மனிதர்களாலேயே உருவாக்கப்படுகின்றன. புரோட்டான் நியூட்ரான் தாண்டி குவார்க்ஸ்கள் தெரிந்த காலம் நம்முடைய காலம். இதற்கப்பாலும் அண்டவெளியில் நமக்குத் தெரியாத இருண்ட பொருட்கள் 90 சதம் இருக்கலாம்.

பீகாரின் வெள்ளத்தை மட்டுமல்ல, சோமாலியாவின் பட்டினிச்சாவு மலையையும் நம் வீட்டுக் கூடத்திற்குள் கொணர்கிறது தொலைக்காட்சி. தொலைக்காட்சி, தொலைபேசி, கணிப்பொறி இணைந்து ஒருசேர் தொழில்நுட்பம் வருகிறது. செல்போனும், இணையமும் தகவலை வேண்டிய இடத்திலிருந்து வேண்டிய நேரத்திற்கு கொட்டுகின்றன. DNA-ன் நியூக்ளோடைட் மேப்பிங் மூலம் ஜீன் வேட்டை நடத்தலாம். இயற்கையாக அமைந்த உடல் உறுப்புகளை நீக்கிவிட்டு பண்படுத்தப்பட்ட உறுப்புகளை பொருத்திக் கொள்ளலாம். சோதனைக்குழாய் குழந்தை எனப்படுகின்ற 'இன்விட்ரோ ஃபெர்டிலைசேஷன்' முறையில் எதிர்காலத்தில் பிறக்கப் போகின்ற குழந்தை 'முகம் தெரியாத' ஒருவரின் விந்தணுவால் பிறக்கும். தந்தையாக இருப்பவர் அதன் உயிரியல் தந்தையாக இருப்பதில்லை. சமூகத் தந்தை - உயிரியல் தந்தை என்ற பிளவு நமக்கு புதிரானது. கணிப்பொறி வசதி வந்தபின் 90% மக்கள் ஏறத்தாழ ஒரேவகையிலான நோயால்தான் பாதிக்கப்படுகிறார்கள். ஒருலட்சம் பேருக்கு சராசரியாக வருடம் ஒன்றுக்கு சிறுநீரகம் மாற்று தேவைப்படுகிறது. ஆனால் இதில் 20% கூட கிடைப்பதில்லை. இன்றைய அறிவியல் பல புதிய கேள்விகளை எழுப்புகிறது. இறந்தவுடன் உடல் உறுப்புகளை தானம் செய்வது என்பது அறிவியல் - அறவியல் மனப்பாங்காக மாறுமா? நமது சமூகத்தில் உள்ள 'சாவு வீட்டு' உணர்வு தொடருமா? "க்ளோனிங்" முறைகளை நமது சமூகம் எப்படி எதிர்கொள்ளப் போகிறது? எய்ட்ஸ் 'HIV Zero Positivity' சோதனைக்கு மனிதர்கள் உள்ளாக்கப்படும்போது நமது தனிமனித ரகசியம் மீதான தாக்குதலாகப் புரிந்துகொள்ளலாமா? தகவல் தொழில்நுட்பமும், உயிரியல் தொழில்நுட்பமும் நமது குடும்ப முறையை - நாகரீகத்தை சமூக குழுக்களின் நடவடிக்கைகளை



படிப்பகம்

www.padippakam.com

மாற்றிவிடும். நம்பிக்கை... நமது நம்பிக்கையை சேதப்படுத்தும். புதிய சவால்க... ய நட்டுவைக்கும். மாறும் சமூகம் புதிய குழப்பங்களையும் ...ளயும் சந்திக்க வேண்டியிருக்கும்.

நமது விஞ்ஞானம் பெரும் வணிகமாகவே உள்ளது. கருணை மிக்க விஞ்ஞானம் எனப்படும் மருத்துவம்கூட பெரும் காசு பணத்திற்கான ஏற்பாடாக மாற்றப்பட்டுள்ளது. நவீன விஞ்ஞானம் நமது பல மரபுகளில் ஒன்று. பிறர் சிந்தனைகளை - கோட்பாடுகளை நாம் விமர்சனம் செய்வது போல் அறிவியலையும் நாம் விமர்சிக்க வேண்டும் என்கிறார் அஷிஷ் நந்தி. இஸ்லாமை விமர்சிக்க ஒருவர் முஸ்லீமாக இருக்க வேண்டியதில்லை என்பது சரியென்றால் விஞ்ஞானத்தை விமர்சிக்க ஒருவர் விஞ்ஞானியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை என்கிறார் நந்தி. இந்தியா உட்பட உலகின் பல நாடுகள் இன்றும் தொழில்நுட்ப காலனி ஆதிக்கத்திலேயே உள்ளன. பன்னாட்டு கம்பெனிகளை நம்பியே அவைகள் வாழுகின்றன. விஞ்ஞானத் தொழில்நுட்பம் சந்தைப் பொருளாக மதிப்புவிலை பெற்ற பொருளாக மாறியுள்ளது. ஃபாரடே மின்னோட்டம் பற்றிய தமது ஆய்வை பிரிட்டனில் முக்கியஸ்தர்கள் மத்தியில் விளக்கிக் கொண்டிருந்தபோது - நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கேட்டனர். "இதனால் என்ன பலன்?" ஃபாரடே புன்முறுவலோடு கூறினார். "உங்கள் அரசாங்கம் இதனால் வரிவசூலித்து கருவூலத்தை நிரப்பிக் கொள்ளலாம்" இன்றும் விஞ்ஞானிக்கும் அரசியல்வாதிக்கும் உள்ள உறவு இந்த நிலையில்தான் தொடர்கிறது.

காந்தி, "இந்திய மனப்பாங்கு என்பது மீட்டெடுப்பில் உள்ளது" என்றார். நேரு அதை கண்டுபிடிப்பு என்று மாற்றி நம்மை அழைத்துச் சென்றார். காந்தியின் தொழில் நுட்பக் கொள்கை "இராட்டை மரபு", சுதேசி, மனித பொருண்மை என்பதாக வெளிப்பட்டது. இராட்டை எளிய தொழில்நுட்பத்தையும் சுதேசி உள்நாட்டுத் தொழில்நுட்பத்தையும் மனித பொருண்மை பஞ்சாயத்து நிர்வாகம் - தலமட்ட முன்முயற்சி என்பதற்கான அடையாளமாக நாம் கொள்ளலாம். குடிசைத் தொழிலும் ஆலைத்தொழிலும் சமவாழ்வு கொள்ளும் ஒரு சமூகத்தில் ஒத்திசைவு இருக்குமா? என்று காந்தியிடம் கேட்டபோது காந்தி உறுதியாகச் சொன்னார், "கிராமங்களை செழித்திடச் செய்ய திட்டம் இருந்தால் ஒத்திசைவு காணலாம்" என்றார்.

ஐன்ஸ்டீன் அறவியல் இவ்வாறு சொல்கிறது. "எல்லாவித அறிவியல தொழில்நுட்ப முயற்சிகளிலும் மனித அக்கறையும் அவனின் விதியும் நமது தலையாய ஆர்வமாக அமையட்டும்" நமது மூளைத்



படிப்பகம்

www.padippakam.com

திறனும் படைப்புத் திறமையும் மக்களுக்கு வரமாக அமையட்டும். அது ஒருபோதும் சாபகமாகி விடக்கூடாது. பகிர்ந்தளித்தல் என்பதைத் தாண்டிய நியாயம் ஏதுமில்லை. பொருட்களின் மீதான விழைவு - துரத்தல் ஒருபோதும் ஓயப்போவதில்லை. முடிவில்லாத விழைவு ஓட்டத்தில் நமது சொந்த இறுதி முடிவே முடிவாக நிற்கும்.

## IV

அறிவியலை ஆன்மீகத்திற்குள்ளே அடக்கும் தந்திரங்கள் எல்லா நாடுகளிலும் நடந்துள்ளன. இன்றும் நடைமுறையில் உள்ளன. இந்தியா வேதகால கணிதம் என்றால் பாகிஸ்தான் குரான் அறிவியல் பேசும். சோதிடமும் பசுமூத்திரத்திலுள்ள வேதிபொருட்கள் பற்றியும் பாட புத்தகம் வந்தால் அதை படிக்கப்போவது பெரும்பான்மை வறுமை குடும்பங்களே. ஆள்வோர் குடும்பங்கள் மேற்கு உயர்கல்வி நிறுவனங்களில் தான் தயாரிக்கப்படுகின்றனர். இஸ்லாம் விஞ்ஞானம், இந்து விஞ்ஞானம் என்றெல்லாம் ஏதுமில்லை என்கிறார் நோபல் பரிசாளர் அப்துஸ் சமத். உலகம் தழுவிய விஞ்ஞானம் மானுட நாகரிகத்தின் பாரம்பரிய சொத்து என்கிறார். மத அடிப்படைவாதத்தை பயிரிட விரும்புவோர் எல்லாமே புனித நூல்களில் முன்பே சொல்லப்பட்டுவிட்டன என்ற நிலை எடுப்பர். மௌரிஸ் புனகல்லே - குரானிலிருந்து பல அறிவியல் கேள்விகளுக்கு மேற்கோள் காட்டுகிறார். நேம்குமார் ஜெயின் பகவத்கீதையிலிருந்து மேற்கோள்களை காட்டி இந்து அறிவியல் உச்சத்தை நிறுவ முயல்கிறார். தவறென கண்டவற்றை தள்ளிவைக்க, தூர வீச, விஞ்ஞானம் தயங்காது. ஆனால் ஆன்மீகம் தனதான எதையும் தவறென சொல்லி தள்ளிவைக்காது.

குணதிலகே போன்ற அறிவியல் தத்துவவாதிகள் 'மூன்றாம் உலக அறிவியல்' குறித்து பேசுகின்றனர். சொந்த தேசம் சாராத, படைப்புத் திறனற்ற, மேற்கிலிருந்து இறக்குமதியாகும் அறிவியலால் தொழிற்படும் சமூகம் தனது சொந்த மக்களைஅந்நியப்படுத்திவிடும் என்கிறார் குணதிலகே. காலனி நாடுகள் ஆவதற்கு முன்பிருந்த அந்த சொந்த சமூகத்தின் அறிவு, தத்துவச் சிந்தனைகள் திடீரென்று முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டு உறைய வைக்கப் பட்டு விடுகின்றன. அந்த அறிவுக் களஞ்சியத்தை மீட்டெடுத்தல் வளர்திசையில் முன்நகர்த்தல் அவசியம் என்கிறார். இதை பெர்வெஸ் ஹீத்பாய் என்ற அறிஞர் மறுத்துப் பேசுகிறார். மற்றுமொரு பழம்பெருமை வேட்கை என நிராகரிக்கிறார்.

வந்தனா சிவா அவர்களின் 'பசுமைப் புரட்சியின் வன்முறை' மிக முக்கியமாக நம் கவனத்தில பதிக்கவேண்டிய கருத்தாக்கங்களைக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டுள்ளது. குறுகிய கண்ணோட்டத்தில் 'அறிவியலும் தொழில் நுட்பமும்' அறிவியல் அறிஞர்களும் தொழில்நுட்பவாதிகளும் உருவாக்கும் ஒன்றாக ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது. அறிவியலும் தொழில்நுட்பமும் எதை உருவாக்குகிறதோ அதுதான் வளர்ச்சி என்றாகிறது. இதில் உள்ள ஜாலவித்தை, வளர்ச்சி = நவீனத்துவம் = மேற்கத்திய என்ற சமன்பாடுதான். நமது பலதரப்பட்ட மக்களை குறிப்பாக ஏழைகளை நாம் விலக்கி வைக்கும் பட்சத்தில் இதில் பிரச்சினையில்லை. சூழலியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பெரும்பான்மை மக்களுக்குப் பொருத்தமற்ற அறிவியல் தொழில்நுட்பம் வளர்ச்சிக்குப் பதிலாக வளர்ச்சியின்மைக்கு இட்டுச் செல்கிறது என்கிறார வந்தனா சிவா.

இன்று 'வலைப்பின்னல் சுதந்திரம்' பத்திரிக்கை சுதந்திரத்தை விட பன்மடங்கு ஆற்றலுடன் எழுந்துள்ளது. மானுட விரோத, உயர் இன கருத்தாக்கங்கள் ஆபாசமாக பின்னப்படுகின்றன. "பாசிசம் மீட்டல்" என்ற புத்தகத்தின் மூலம் ரோஜா ஈட்வெல் (பாத் பல்கலைக்கழகம்) பல செய்திகளை வெளிக் கொணர்கிறார். ஐரோப்பாவில் பல பாசிச அமைப்புகள் வெள்ளை இன புனித கோட்பாடுகளைப் பரப்ப வலைப்பின்னல்களை ஆக்கிரமித்துள்ளன. 'Creed of Eugenics' என்று சத்தமிடுகின்றன. 'குறைமனித ஒழிப்பு' என்ற கலகம் மீண்டும் துவங்கியுள்ளது. ஹிட்லர் காலத்தில் ஊனமுற்ற மக்கள் படுகொலை பற்றி செய்திகள் வந்தன. 1933-ல் நாஜிகள் இயற்றிய சட்டத்தால் நான்கு லட்சம் 'குறை உறுப்பு குழந்தைகள்' பாதிக்கப்பட்டனர். 'உதவாக்கரை உயிர்கள்' என்ற பெயரில் 70,000 சாகடிக்கப்பட்டனர்.

உயிரியல் தொழில்நுட்ப ஆய்வுகள் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா மக்கள் என்ற வேறுபாடெல்லாம் 'தோலளவே' என்று நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மானுட செல்லிலும் உள்ளடங்கிப் போயுள்ள 'உயிரியல் தாதுக்கள்' - குரோமோசோம்கள் மூன்று மில்லியன் வேதியல் அலவைகள் ஒன்றாகவே உள்ளன. வேதியல் அலவைகள் மட்டுமே மெல்லிய அளவில் மாறிப் போகின்றன என்கிறார்கள். எனவே மானிட உயிர்கள் 99 சதம் ஒத்தவர்களே.

மானுட உயிரிகள் ஜீன்களின் பண்பு தொகுப்பு மட்டுமல்ல - சூழலின் உருவாக்கமும் கூட. ஒரு சத வெளித்தோற்ற வேறுபாடுகளை முன்னிறுத்தி உலகம் எவ்வளவு படுகொலைகளை சந்தித்து விட்டது - பேரழிவுகளைத் தாங்கிக்கொண்டு விட்டது. இன்றுள்ள கேள்வி உயிரியல் தொழில்நுட்பம், மரபணு பொறியில் ஆகியவற்றுக்கு யார் முதலாளி அவர்களின் திட்டமென்ன என்பதே. இன புனித


படிப்பகம்

www.padippakam.com

கோட்பாடுகளைத் தொடர்ந்து முன்நிறுத்தி உயர்ரக ஜீன் உற்பத்தி - சூப்பர்மேன் உற்பத்தி என்ற கார்ப்பரேட் சதியை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம். அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி இது குறித்த ஆய்வு விழைவுகளை வெளிப்படுத்தத் துவங்கியுள்ளது. 'ஜெனோம்' திட்டத்தை தனியார் மயப்படுத்தி பன்னாட்டு நிறுவனங்களை முழுகட்டுப்பாட்டிற்கு கொண்டு போவதை எதிர்த்து கிளர்ச்சிகள் செய்வோம் என்கின்றனர். தொழிலாளர்களின் உயிரியல் திறன் தெரியாமல் வேலையில் சேர்க்கக் கூடாது என அமெரிக்க முதலாளிகள் பேசத் துவங்கியுள்ளனர். இந்த அறிவியல் சோதனைகளை தேசிய மயமாக்கிடுக என அமெரிக்கத் தொழிலாளர் போராட வேண்டும் என்கின்றது அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி. பாரத் டோக்ரா என்பவர் மரபணு பொறியியலை, உயர் தொழில் நுட்பவியலை அவசரடியாக வர்த்தகமயப்படுத்திவிடக்கூடாது என்கிறார். அமெரிக்காவில் கவலைப்படும் விஞ்ஞானிகள் மாநாடும் இதை வலியுறுத்தியது.

விவசாயத்திலும் நமது தற்சார்பை மரபணு பொறியியல் புதைத்துவிடும் என்கிறார் வந்தனா சிவா. பன்னாட்டு நிறுவனங்களின் மீதான நமது சார்பு மேலும் அதிகரிக்கும். பசுமைப் புரட்சியால் துவக்கப்பட்டு உயர் தொழில்நுட்பப் புரட்சியால் இழுத்துச் செல்லப்படும் வேளாண் திட்டங்கள் ஒருபுறம் பற்றாக்குறையையும் மறுபுறம் உபரியையும் உண்டாக்கி சமூக அரசியல் பொருளாதார நெருக்கடிகளை தீவிரப்படுத்தும் என்கிறார் வந்தனா. காந்தி ராட்டையை அடையாளப்படுத்தியது போல் நமது 'பழமையான பாரம்பரிய விதைகள் என்பதை விவசாயிகள் குறியீடாக்கிப் போராட வேண்டும் என்கிறார்.

## V

மார்க்சியம் குறித்த விமர்சனங்கள் இந்தக் கட்டுரைத் தொகுப்பில் ஆங்காங்கே வீசப்பட்டுள்ளன. அவற்றிற்குரிய எதிர்வினையை பிறிதொரு வாய்ப்பில நாம் முன் வைக்கலாம். மார்க்சியம் 'போலி அறிவியல்' என்பதற்கு கார்ல் பாப்பர் துணை கொள்ளப்படுகிறார். பிரமீள் முன்வைக்கும் விமர்சனம் வழக்கமானது தான்.

"தங்களைத் தாங்களே பிறரது ரட்சகர்களாக பிரகடனம் செய்கிற மார்க்சிய வெளிவட்டத்தனம் தங்களைப் பிறரது அறியாத்தனத்தின் மூலம் உயர்வாக்கிக் கொள்கிற பழைய உட்வட்டத்தனம்" - மார்க்சியர்கள் மீதான பாரபட்ச - பழுதான பார்வை தவிர இது வேறல்ல.


படிப்பகம்

www.padippakam.com

"இந்தியாவில் மார்க்சியம் பேசும் எவருக்கும் மனிதார்த்தத்தினைப் பற்றிய பார்வை ஏதும் கிடையாது. எல்லாருக்கும் வேலை - ஊதியம் என்பதையும் மீறி இவர்களால் வாழ்வையே கணிக்க முடியாத அளவு வறண்டது இவர்களது தத்துவம். இந்திய கம்யூனிச இயக்கம் மக்களிடையே அறிவு விலாசத்தைப் பெருக்குகிற திட்டத்தையோ தரிசனத்தையோ அடிப்படையாகக் கொண்ட ஒன்றல்ல. இந்திய ஜன சமூகத்தின் ருசிகளிலுள்ள மலினம் அதன் சாதியக் கட்டமைப்பில் உள்ள குரூரம், விஞ்ஞான புறம்பான நாலாந்தர நடத்தைகள் யாவற்றையும் களைவதற்கு செய்ய வேண்டிய அறிவியக்கப் பணிகள் எதற்கும் கம்யூனிஸ்ட்கள் உட்பட எவரிடமும் இந்தியாவில் எந்தத் திட்டமும் இல்லை."

மார்க்சியத்திற்கு வெளியேயிருந்து, கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு வெளியே இருந்து வரும் விமர்சனங்களுக்கு செவிமடுக்கக்கூடாது என்பதல்ல. நட்புணர்வுடன், தோழமையுடன் வரும் விமர்சனங்களை பொருட்படுத்தக்கூடியவர்கள் மார்க்சியர்கள். மார்க்சியர்களின் போதாமை குறித்து பேசும் அறிவு ஜீவிகள், அப்போதாமையுடன் மார்க்சியர்கள் எளிமையாக நடத்தும் இயக்கங்களைக் கூட புறந்தள்ளுபவர்களாக இருப்பது முரண். தங்கள் எழுத்துக்களில் மார்க்சியர்களின் குறைந்தபட்ச சமூக இயக்கங்களையும், செயல்பாடுகளையும், தியாகங்களையும் தெரிந்தே பதிவு செய்யாமல் ஏதுமே நடக்காத சூன்ய உலகமாக மார்க்சியர்களின் உலகத்தைக் காட்டுவதை ஏற்க முடிவதில்லை.

அறிவியல் குறித்த இடதுசாரிகளின் பார்வையை எளிய முறையில் விளங்க வைத்தவர் ரிச்சர்டு டெலின்ஸ். 'நமது சொந்த அறிவியல்' என்ற கட்டுரை மார்க்சியர்களிடம் போதுமான அளவு செல்லவில்லை என்பது உண்மையே. அவர் கட்டுரையின் சில அம்சங்களை இங்கே குறிப்பிடலாம். அறிவியல் என்பது சாதனைகளின் பட்டியலோ - தொகுப்போ அல்ல. விஞ்ஞானக் கேள்விகள் அரசியல் தளத்தில் இடரக் கூடியவைகளே. அறிவியலுக்கு சமூக நோக்கைத் தரவேண்டிய போராட்டத்தை மார்க்சியர்கள் நடத்தியாக வேண்டும். அவ்வப்போது வரும் அறிவியல் பிரச்சனைகளை நிகழ்ச்சி நிரலில் ஏற்றிக் கொள்ளாத மார்க்சியம் வளராது. முதலாளித்துவ சூழல் என்ற நிர்ப்பந்த எல்லைக்குள் விஞ்ஞான கேள்விகளை நமக்கானதாக ஆக்குவதற்கு மார்க்சியர்கள் கற்றிடவேண்டும். அறிவியல் தொழிற்பாடு என்பதின் புரிதல் தேவை. 'விஞ்ஞான பூர்வமானது' என்பதை தொல் நம்பிக்கையுடன் மட்டும் அணுகக் கூடாது. விஞ்ஞானத்தை பிரச்சனையே இல்லாத

www.padippakam.com

வளர்திசையில் மட்டுமே செல்லக்கூடிய மானுட விடுதலைக்கான கருவி என்ற வழிபடும் ஆன்மீகத் தன்மையில் அணுகுதல் கூடாது. எவ்வாறு விஞ்ஞானம் முதலாளித்துவத்துடன் கூடவே வளர்கிறது - அதன் முரண்கள் என்ன - முரண்களை விடுவித்து விஞ்ஞான வளர்ச்சியை பெரும்பான்மை மக்களுக்கான சாதனமாக மாற்றுவது எப்படி என்ற இயக்கவியல் பார்வை தேவைப்படுகிறது. ஜனநாயம் என்ற பதாகையை முதலாளித்துவம் பிடித்ததுபோல் விஞ்ஞானத் தொழில்நுட்பம் என்ற பதாகையும் அது பிடித்துக் கொண்டுள்ளது.

விஞ்ஞானம் - தத்துவம் என்ற இரட்டைகளை எதிர்களாக நிறுத்துவதா - ஒத்திசைவை உருவாக்குவதா? விஞ்ஞானத்தை தத்துவப் புலனிலும், தத்துவத்தை விஞ்ஞானக் கருவிகளாலும் அளப்பதை மார்க்ஸ் மேற்கொண்டார். இரண்டிற்குமான ஒத்திசைவை உருவாக்கி புதிய அறிவுத் தளமாக்கினார். நடைமுறைக்கு வரும் சமூக அறிவியலாக வளர்த்தெடுத்தார். விஞ்ஞானத்திற்கும், பிற துறைகளுக்கும் வரலாற்றுப் பொருள்முதல்வாத பார்வையை உட்செலுத்தியது மார்க்சிசம் தான். ஒருநாட்டின் அரசாங்கக் கொள்கை அறிவிப்பில் அரசியல் உள்ளது. நமது அறிவியல் கொள்கை உயிர்களின், மக்களின் விடுதலை என்பதாகவே அமையும். அறிவியல் என்பது அறைக்குள் நடக்கும் சோதனை அல்ல. அது சமூகத் தொடர்புகளாலானது. அறிவியல், தொழில்நுட்பம் என்பதையே நிராகரிப்பதல்ல. பொருள் சார்ந்த உலகில் தேவையை நிறைவேற்றும் வகையில் மனிதர் செலுத்தும் விழிப்பான செயல்பாடுதான் தொழில்நுட்பம். மாற்றுகளை உருவாக்குவது என்பது அரசியல் தத்துவப் போராட்டத்தின் மூலமே சாத்தியம். அறிவியல் உலகத்திற்குள்ளும் பரந்தவெளி சமூகத்திலும் இப்போராட்டம் நடைபெற வேண்டும்.

கோவையில் தமிழ் ஆய்வு மையம் என்ற அமைப்பை, நண்பர்களின் ஒத்துழைப்போடு தோற்றுவிக்கிறோம். இதற்கான நகல் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளோம். பெற விரும்புபவர்கள் அஞ்சலுக்கான கட்டணத்துடன் ரூபாய் 5.00 அனுப்புங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமூலரும், ஐன்ஸ்டீனும் - ஒரு புதிய பார்வை

வானம்பாடி இயக்கத்தில் ஒருவராக இருந்து பணியாற்றிய நண்பர் ஜீவஒளிக்குள் புதிய தேட்டங்கள் தோன்றின. கணிதம் என்றும், அறிவியல் என்றும், தத்துவம் என்றும் இடையறாது படித்தார். பிரபஞ்ச இயக்கம் குறித்து அறிஞர் முன் எவரும் முன்வைக்காத சித்தரிப்பை தான் கண்டு முன்வைக்க முடியும் என்று தனக்குள் 15 ஆண்டுகளுக்கு மேல் பயணம் செய்தார். வகைவகையான சாமியங்களை உருவாக்கினார். விண் நாயகன் இதழில் அறிஞர் சுஜாதா அவர்கள் நவீன அறிவியல், இயற்பியல், கணிதம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஆழமான கட்டுரைகள் பல எழுதினார். முடிவில் கடவுள் இருந்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். இதை மறுக்கும் முறையில் ஜீவஒளி இன்னும் பலவற்றைத் தேடித் தொகுத்து ஆராய்ந்தார். தன் கட்டுரை ஒன்றில் முன்வைத்தார்.

இக்கட்டுரைக்கு முன்பே அதுநாள் வரை செய்து வந்த ஆய்வுகளைத் தொகுத்துத் தனிநூல் ஒன்று வெளியிட முடிவு செய்தார். நூலின் பெயர் : மூன்றாவது வெளி, கணனி ஒளி அச்சுப் பதிவில் உள்ள இந்த நூலின் சில படிகள் தமிழகத்திலுள்ள சில அறிவியல் அறிஞர்களின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. இதுவரை அவர்களிடமிருந்து பதில் இல்லை. அந்தத் தனிநூலின் சில பகுதிகளை இங்கு வெளியிடுகிறோம். ஆர்வம் கொண்ட அறிஞர்கள் இவரோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

முகவரி : திரு. T.K. இலட்சுமணன் (ஜீவஒளி)
54, குமரன் நகர் 3-வது மெயின் ரோடு, பெருவள்ளூர்,
சென்னை - 600 082.

குறிப்பு : சுஜாதா அவர்களின் நூலுக்கு நண்பர் ஜீவஒளி எழுதிய நூலைப் பெற விரும்புவோர் ரூ. 20 அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

***

நாம் வரலாற்றில், குறிப்பாக தமிழ்ச் சிந்தனை வரலாற்றில், புலன்சார்ந்த வெளிகளுக்கும், புலன் சாரா வெளிக்கும் உள்ள தொடர்பு பற்றி நன்கு அறிந்து பேசிய திருமூலர் என்ற சித்தரைப் பற்றிச் சிந்திக்கத்தான் வேண்டும். இவர் கண்ட பிரபஞ்சத் தோற்றத்துடன் ஒப்பிடக்கூடிய வகையில் இதுவரை மேற்கத்திய, சிந்தனையில், பிரபஞ்ச வரைபடத்தை வரைந்து காட்டிய எவரும் சிந்தித்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எடுத்துக்காட்டாக

ஐன்ஸ்டீனையே இங்கு எடுத்துக் கொள்ளலாம். ஐன்ஸ்டீனின் பிரபஞ்சத்திற்குகோ, ஒளியின் வேகமே கைகொடுக்கும் ஆதாரம். ஆனால் திருமூலரின் பிரபஞ்சத்திற்கு மூன்றாவது வெளியே ஆதாரம். ஆனால் இருவருக்குமே பொதுவான தளமாக இருந்தது, புலன்சார்ந்த வெளிகளுக்கும், புலன் சாரா வெளிகளுக்கும் இடையில் உள்ள உறவு, என்ன என்ற கேள்விதான்!

இந்தக் கேள்விக்கு விடைகாண இருவருக்குமே, ஒரு சோதனைப் பொருள் வேண்டி இருந்தது; அந்த சோதனைப் பொருளும், புலன் சார்ந்த, சாராத உறவுகளைத் தனக்குள் கொண்டிருக்க வேண்டும் அந்த வகையில் திருமூலருக்கு எது சோதனைப் பொருளாக அமைந்ததோ அது ஐன்ஸ்டீனுக்குச் சோதனைப் பொருளாக இல்லை. திருமூலர், இதற்கு மனித உடலையே உகந்த சோதனைப் பொருளாக எடுத்துக் கொண்டார். ஆனால், ஐன்ஸ்டீன் மனிதனுக்கு வெளியே உள்ள உலகத்தையே தனது சோதனைக்குரிய அமைப்பாகத் தேர்வு செய்து கொண்டார். இதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை; மனித உடலுக்குள்ளேயே, எல்லா புலன்சார்ந்த வெளிகளும் உண்டு, புலன்சாரா வெளிகளும் உண்டு என்பது திருமூலரின் பார்வை. மனிதனுக்கு வெளியே உள்ள உலகில் உள்ள புலன்சார்ந்த வெளிகளும், புலன் சாரா வெளிகளுமே உண்மை என்பது ஐன்ஸ்டீனின் பார்வை. எனவே தத்தம் பார்வை என்ற அளவில் இருவரும் வேறுபடுகிறார்கள் என்றாலும், ஆய்வுக்காக இவர்கள் எடுத்துக் கொண்ட பொருளில் உண்மையில் வேறுபடவில்லை. புலன்சார்ந்த வெளியும், புலன்சாரா வெளியும் மனித உடலில் என்னவகையான தொடர்புகளைக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை அறிவதற்காகவே திருமூலர் மனித உடலைச் சோதனைப் பொருளாக எடுத்துக் கொண்டார். ஆனால் மனிதனுக்கு வெளியே அது போன்றதொரு உறவைக் காட்ட ஒரு பார்வையாளர் என்ற உலகம் மூலம் ஒரு சோதனைக் கூடத்தை நிர்மாணித்துக் கொண்டார் ஐன்ஸ்டீன். திருமூலரின் சோதனை உலகத்திற்குள், மனிதனின், புலன்சார்ந்த, சாராத உலகங்களை கவனிக்கும் பார்வையாளன் வெளியே இல்லை! மனிதனுக்குள்ளேயே அவன் இருப்பான்; இருந்தான்! ஆனால் ஐன்ஸ்டீனின் சோதனை உலகத்திற்குள் பார்வையாளன் வெளியேதான் இருந்தான்; இருக்கிறான்! ஒரு கட்டத்தில், திருமூலரின் பிரபஞ்ச வெளிக்குள் பயணம் செய்யும் பார்வையாளனும் பார்க்கப்படும் உலகங்களும் வேறு வேறாக இருந்தாலும், இன்னொரு கட்டத்தில் வேறு வேறாக இருக்கும் நிலைமாறி, ஒன்றாகி விடுகிறார்கள்! ஆனால் இந்த ஒன்றிப்பு என்பது ஐன்ஸ்டீனின் சோதனை உலகத்தில் நடப்பதில்லை! அதில் எப்போதும் பார்வையாளனும் பார்க்கப்படும் உலகங்களும்

www.padippakam.com

வேறு வேறுதான்! திருமூலர் பார்வையில், ஒன்றிணையும் உலகமே முடிவானது; ஆனால் ஐன்ஸ்டீனின் உலகில், வேறுபடுத்தும் நிலையே இறுதியானது! இணைப்பதற்கு திருமூலருக்கு உதவும் பொருள் முழுமையாக புலன் சார்ந்ததும் அல்ல; சாராததும் அல்ல; இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதோர் உலகம் அது! ஆனால் இப்படி ஒரு இடைப்பட்ட உலகம் ஐன்ஸ்டீனுக்குத் தேவைப்படவில்லை. ஏனென்றால், பார்வையாளனையும் பார்க்கப்படும் பொருளையும் பிரித்து வைக்கும் பொருளை அவர் வெளியிலேயே தேடினார்; இங்கு நல்லவேளையாக ஒளியின் வேகம் என்ற கற்பனைக் கூறு அவருக்கு உதவியது! இந்தக் காரணத்தாலேயே ஐன்ஸ்டீன் காட்டிய பிரபஞ்சம் மனிதனுக்கு வெளியே எல்லையில்லாமல், விரிவதாக இருந்தது; இதற்கு மாறாக, திருமூலரின் பிரபஞ்சமோ மனிதனுக்குள் ஒரு எல்லைக்குட்பட்டே இயங்கியது. சுருக்கமாகச் சொன்னால், திருமூலர் மனிதனுக்கு உள்ளே ஓர் பிரபஞ்ச இயக்கத்தைப் பார்த்தார்; ஐன்ஸ்டீன் மனிதனுக்கு வெளியே ஒரு பிரபஞ்சத்தை எல்லையின்றி விவரித்தார்.

திருமூலரின் பார்வை, தாம் எடுத்துக் கொண்ட சோதனைப் பொருள் மனிதனாக இருப்பதும், இதற்காக மனிதனுக்கு வெளியே அவர் எதையும் தேடிப் போகவில்லை என்பதும் உண்மைதான் என்றாலும், தம்மளவில் சோதனைக்காக தேர்வு செய்து கொண்ட பொருளில் வெற்றி கண்டதுபோல, சோதனையிலும் வெற்றியே பெற்றார் என்றுதான் சொல்லலாம். ஆனால், இந்த வகையில் ஐன்ஸ்டீன் தாம் எடுத்துக் கொண்ட சோதனைப் பொருளிலும் சரி, சோதனை நோக்கிலும் சரி, வெற்றி பெற்றாரா என்றால், நிச்சயம் இல்லை என்றுதான் சொல்ல முடியும். ஆனால் அவர் வெற்றி பெற்றுவிட்டதைப் போன்ற ஒரு தோற்றமே இப்பொழுது எங்கும் நிலவி வருகிறது. ஆனால், இது உண்மை அல்ல! ஐன்ஸ்டீனின் பிரபஞ்சக் கொள்கை இறுதியில் தோல்வியைத் தான் தழுவும் என்பதை நிச்சயம் வருங்காலம் நிரூபிக்கும்.

ஆனால், இந்தக் காரணங்களுக்காகவே, திருமூலர் தான் நமக்கு வேண்டும்; ஐன்ஸ்டீன் தேவையில்லை என்று யாரும் நினைக்கத் தேவையில்லை. ஐன்ஸ்டீனும் நமக்கு வேண்டும். திருமூலரும் நமக்கு வேண்டும். ஐன்ஸ்டீன் செய்யத் தவறியதை, திருமூலர் செய்தார்; ஆனால் திருமூலர் செய்யத் தவறியதை யார் செய்வது? திருமூலர் செய்யாமல் விட்டுவிட்டது என்ன? தன் சோதனைக்காக மனித உடலைத்தவிர, வேறு எதையும் அவர் ஏன் சோதனைப் பொருளாக எடுத்துக் கொள்ளவில்லை? மனிதனல்லாத எந்தப் பொருளும் தன் சோதனைக்கு உதவாது என்று அவர் கருதி

www.padippakam.com

இருப்பாரா? இல்லை, அத்தகைய சோதனை எதுவும் தனது ஆய்வுக்கு உதவாது என்று முடிவு செய்து கொண்டிருப்பாரா?

மனிதனுக்கு வெளியே உள்ள எந்தப் பொருளும், புலன் சார்ந்த, புலன் சாராத அனைத்து வெளிகளுடனும் தொடர்புடையவை தானே? பார்வையாளனுக்கும், பார்க்கும்பொருளுக்கும் இடையே இறுதிநிலையில் ஒன்றிப்பு நிகழ்வது உறுதி என்றால், இந்த ஒன்றிப்பின் மூலம் புலப்படும் உண்மை என்ன? மனிதரல்லாத வெளியுலக அமைப்புகளுடனும், ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் இணைந்தே இருக்கிறான் என்றுதானே அர்த்தம்? பார்வையாளனுக்கும் பார்க்கப்படும் பொருளுக்கும் இடையே ஒன்றிப்பு என்பது எப்படிப்பட்டதாக இருந்தாலும், புலன் சார்ந்த வெளிகளுக்கும் புலன் சாராத வெளிகளுக்கும் இடையே உள்ள உறவுதான் அடிப்படையானது என்பதைத் திருமூலரும் புரிந்துதான் வைத்திருக்க வேண்டும். ஒரு மனிதனின் பார்வைநிலையைப் பொருத்து வேண்டுமானால், பார்வையாளன் - பார்க்கப்படும் பொருள் என்ற வேறுபாடு அவசியமாக இருக்கலாம். ஆனால், ஒரு கல்லுக்கும் மண்ணுக்கும் இது அவசியத் தேவையா என்ன? கல்லும் மண்ணும் வெளியே இல்லையா என்ன? இவை எல்லாம் பார்ப்பவனின் மாயத் தோற்றங்களா என்ன? பார்ப்பவன் என்பவன் இல்லாதபோது எல்லாமே இல்லையாகிவிடுமா என்ன? பார்ப்பவன் என்ற கருத்துருவம், மனிதனின் புலன்சார்ந்த விஷயந்தான் என்று திருமூலருக்குத் தெரியாதா என்ன?

ஆம்! இப்படி எல்லாம் நாம் திருமூலரிடம் கேள்வி கேட்க வேண்டும்! அப்போதுதான் ஐன்ஸ்டீன் மனிதனுக்கு வெளியே உள்ள உலகை ஏன் தனது சோதனைப் பொருளாக ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார்என்ற விஷயத்தை நம்மால் சரியாகப் புரிந்து கொள்ள முடியும். ஐன்ஸ்டீன் தனது பார்வையாளரை கடைசிவரை, தனியாகவே ஏன் வைத்திருந்தார் என்ற காரணமும் புரியும்.

உண்மையில், திருமூலரின் வெற்றிக்குப் பின்னால், ஒரு தோல்வியும், ஐன்ஸ்டீனின் தோல்விக்குப் பின்னால் ஒரு வெற்றியும் ஒளிந்து இருக்கத்தான் செய்கிறது! திருமூலர் தன் சோதனைக்காக மனிதன் அல்லாத வேறு ஒரு பொருளை எடுத்துக் கொள்ள முடியாது என்பது போலவே, ஐன்ஸ்டீனும் தன் பிரபஞ்சத்தை விளக்க மனிதனைச் சோதனைப் பொருளாக்கி வெற்றி பெறவே இயலாது!

www.padippakam.com

நன்றாகச் சிந்தனை செய்து பார்த்தால், இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறையவே இருக்கின்றன! மூலத்தில் இந்த இருவரும் கேட்ட கேள்வி ஒன்றாக இருந்தும், முடிவில் ஏன் வெவ்வேறு விடைகளுக்கு வந்தார்கள்? சோதனைப் பொருளைத் தேர்ந்து கொள்வதிலும், தேர்வு செய்து கொண்டபின் அதை அறிவதற்கு இவர்கள் கையாண்ட முறைகளும் உண்மையில் ஒரே மாதிரியாகவா இருந்தன? இல்லையே ஏன்? புலன்சார்ந்த உலகங்களுக்கும் புலன் சாராத உலகங்களுக்கும் இடையே உள்ள உறவை அளக்கப் புறப்பட்ட இவர்கள், ஏன் ஒரே மாதிரியான சோதனை முறைகளையும் அளவுகோல்களையும் கையாளவில்லை? திருமூலர் தன் சிந்தனையோட்டத்தின் வழித்தடத்தைத் தனக்குள் தானே அடிமேல் அடிவைத்து பின் தொடர்ந்து உள்ளே, உள்ளே என்று@ நுணுக்கத்திற்குள் நுணுக்கம் என்று போய்த் தேடினார்; ஆனால் ஐன்ஸ்டீனின், சிந்தனைச் சோதனையோ, எல்லாம் அண்ட வெளியில், ஆகாயப் பரப்பில், ஒளியின் வேகத்தில், உலாவரும் பார்வையாளனின் கற்பனை வளத்தை நம்பிப் பறந்தது! இந்த இரு சிந்தனை முறைகளில் உள்ள வேறுபாடுகளுக்கும், அவர்கள் எடுத்துக் கொண்ட ஆய்வுப் பொருள்களுக்கும், இடையே ஒரு உறவும் இல்லை என்று சொல்ல முடியாது! எல்லாம் எதேச்சையாக நடந்துவிட்டது என்றும் சொல்வதற்கும் இல்லை! நிச்சயம் ஒரு உறுதியான பார்வையின் மூலந்தான் அவர்கள் இந்த எல்லைக்குள் தங்களை நிலைநிறுத்திக் கொண்டார்கள்! அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மனிதனுக்குள் புலன் சார்ந்த - சாராத உலகங்கள் உண்டு என்பதைத் திருமூலர் நம்பினாலும், இந்த தொடர்புகளை அறிவதற்கு அளவுகோலாக மனிதனுக்குள்ளேயே ஒரு பார்வையாளரை தேர்வு செய்வதற்கு அவர் முன்னுரிமை அளிக்கிறார். இந்த அளவுகோலைத் தவிர்த்து அவர் மனிதனுக்கு வெளியே இதற்காக வேறு ஒரு பொருளைத் தேடி இருக்கலாம். கால - இடப் பரிமாணங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவராய் இருந்திருந்தால், அவரும் நிச்சயம் அப்படித்தான் செய்திருப்பார். ஆனால், செய்யவில்லை. அவர் செய்யாமல் விட்டதை ஐன்ஸ்டீன் செய்தார். அவருக்கு உள்மனப் பயணங்களைவிட, காலவெளிப் பயணங்களில் அதிக நம்பிக்கை இருந்தது. அதனால்தான், ஒளியின் வேகத்தை தன் ஆய்வுலகத்திற்கு அளவுகோலாக அவரால் எடுத்துக் கொள்ள முடிந்தது. ஆனால் திருமூலருக்கு அது தேவைப்படாமலே போய்விட்டது! ஏனென்றால், அவருக்குத் தேவையானது மனிதனுக்குள்ளேயே இருந்தது. அதற்காக அவர் வெளியே தேடிப் போக வேண்டிய அவசியம் எதுவும் ஏற்படவில்லை.

www.padippakam.com

எனவே இந்த இருவரது பிரபஞ்சங்களும், இருவேறு அளவுகோல்களுடன், இருவேறு பார்வையாளர்களின் உலகமாகப் படைக்கப்பட்டுவிட்டதில் வியப்பேதும் இல்லை.

இப்போது இதில் நாம் எதை உண்மை என்று தேர்வு செய்வது என்று ஒரு கேள்வி கேட்டால், பதில் சொல்வது அவ்வளவு எளிதான ஒன்று அல்ல! உண்மையான பிரபஞ்சம் - முழுமையான பிரபஞ்சம் இந்த இரண்டில் எதுவும் இல்லை. ஒன்று சேரமுடியாத பார்வைகளைக் கொண்ட இந்த இரண்டையும் அப்படியே ஒட்ட வைத்தும் ஒரு புதியவகைப் பிரபஞ்சத்தை உருவாக்கிவிடவும் முடியாது! முற்றாக, இவர்கள் கையாண்ட அளவுகோல்களையும், சோதனைப் பொருள்களையும், நாம் மீண்டும் இன்றைய உலகச் சூழலில் வைத்துத் தீவிரமான பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்! அதுமட்டும் அல்ல; இவர்கள் விட்டுச் சென்ற உண்மையான சிக்கல் என்ன, அது இன்றைய உலகில் இன்னும் எந்தெந்த எல்லைகளில் எல்லாம் அறிவியல் சிந்தனையை ஆட்கொண்டு ஆட்டிப் படைக்கிறது என்பதை எல்லாம் ஊன்றி கவனிக்க வேண்டும்!

குறிப்பாக, சின்னஞ்சிறு குட்டி உலகமான அணு உலகத்தை இந்த பார்வையாளர் - அளவுகோல் பற்றிய மிகப்பெரிய சிக்கல் எப்படி பயங்கரமாக ஆட்டி வைக்கிறது என்று சிறிது கவனிப்போம்.

புலன்சார்ந்த வடிவப் பரிமாணங்கள் என்பவை நமது புலன்களின் வரம்புக்கு உட்பட்ட நிலையில், உள்ள புலன்சார்ந்த உலகங்களோடு மட்டும் தொடர்புடைய பௌதீக வடிவப் பரிமாணங்களை மட்டுமே உள்ளடக்குபவை. இவை இரட்டைநிலையில் உள்ள ஓர் உண்மை. அதாவது பரிமாணம் என்ற அளவில், இவை நமக்கு புலன்சாரா நிலையில் எடுத்துக் கொண்டாலும் உண்மையே, புலன் சார்ந்த நிலையில் எடுத்துக் கொண்டாலும் உண்மையே! ஆனால், இந்த இரண்டு வகை உண்மைகளும் ஒரே மாதிரியாக இருக்க முடியுமா? இல்லை இருக்குமா என்பதுதான் பிரச்சினை! புலன்சாரா, வடிவங்கள், எவையும் ஒரு புலன்சார்ந்த அமைப்புடன், தன் இயல்பான வடிவப் பரிமாணத் தன்மையுடன் அப்படியே நூற்றுக்கு நூறு என்ற வீதத்தில் ஒத்துப் போகும் ஒரு முற்றொருமை நிலை உறவை கொண்டிருந்தால் ஒழிய இது சாத்தியமில்லை. அப்படி ஒரு முற்றொருமை நிலை என்பது, இருந்தாலும் கூட, அது புலன்சாரா வெளியுடன் அதே சமயத்தில் அப்படி ஒரு தொடர்பை வைத்துக்கொண்டு தொடர்ந்து நீடிக்கவே முடியாது! ஒரு நொடி, ஒரு கணம், ஒரு தோற்றம் என்ற அளவுடன் இந்த உறவும் அறுந்து போகும்! ஏனென்றால், புலன்சாரா


படிப்பகம்

www.padippakam.com

நிலையில் உள்ள எந்த வடிவப் பரிமாணமுள்ள மூலவெளியும் எப்போதும் வடிவப் பரிமாணமில்லாத மூலவெளியுடன் இடையறாது, ஒரு தொடர்பில் இருந்து கொண்டிருப்பதால், இடையறாது தத்தம் பரிமாணத் தன்மையில் தொடர்ந்து நிலைமாறிக் கொண்டே இருக்கும் பண்புடையவையாக இருப்பதால் இதன் விளைவுகள் இப்படி முடிக்கின்றன! இருக்கின்றன! இந்த பரிமாண மாற்றங்களைச் செய்து கொண்டே இருக்கும் புலன்சார்ந்த அமைப்பாலும் இழுத்துப் பிடித்து நிறுத்தவோ, ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து தனது புலன்சார் அமைப்பின்மூலம் அதன் விதிகளை மாற்றிவிடவோ முடியவே முடியாது!

ஒரு புலன்சார் அமைப்பு புலன்சாரா வெளியுடன் எத்தனையோ முறைகளில், இணைந்து எத்தனையோ வகையில் தன்புலன்சார் வடிவப் பரிமாணத்தில் மாறுவதும், அல்லது மாற்றிக் கொள்ளும் விதியை தனக்குத்தானே படைத்துக் கொள்வதும் இயலும், புலன்சார்ந்த தனது பரிமாணங்களுக்கும், புலன்சாரா பௌதீக வடிவப் பரிமாணங்களுக்கும் இப்படி ஒரு முழுமையாக பொருத்தம், இசைவு, இலயம் கிடைக்கவேண்டும் என்ற நோக்கில் மட்டுமே செயல்படலாம். அதற்குமேல், புலன்சாரா வெளிகளின் வடிவப் பரிமாணங்களை இது எதுவும் செய்வதில்லை.

ஆக, இங்கு புலன்சார்ந்த, வெளிகளுக்குப் புலன்சாரா வெளிகளுக்கும் இடையில் 'மூலவெளி' என்ற அடிப்படையில்தான் வேறுபாடு இல்லையே ஒழிய, தத்தம் இயக்கநிலைகளில், இணக்க நிலைகளில் அதன் புலன்சார்ந்த / சாராத பரிமாண தன்மையில் ஒரு வேறுபாடும் இல்லை என்று சொல்வதற்கு இல்லை.

பொதுவாக, இது புலன்சார் உலகின் வடிவப் பரிமாணங்களுக்கும், புலன்சாரா உலகின் வடிவப் பரிமாணங்களுக்கும் இடையே உள்ள உறவின் மூலம் உருவாகும் உலகம் எப்படிப்பட்டது என்பதைப் பொருத்து அமைகிற விஷயம். விளக்க வேண்டிய விஷயம்!

இந்த உறவின் வழித்தோன்றும் சிக்கல்பற்றி, தமிழ்ச் சிந்தனை வரலாற்றில் தோன்றிய மூத்த அறிவியற் சிந்தனையாளர் திருமூலர் சொல்லியதற்குமேல், இதுவரை எவரும் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை . . . " (திருமந்திரம்)

இந்த இரண்டே இரண்டு வரிகளுக்குள் அடங்கிவிட்டது, அந்த உறவுகளின் அத்தனை முகங்களும்!


படிப்பகம்

www.padippakam.com

இதில் 'மரம்' என்பது புலன்சாரா உலகின் வடிவப் பரிமாணம் 'மாமத யானை' என்பது புலன்சார்ந்த உலகின் வடிவப் பரிமாணம்! ஆனால், மரத்தை மறைத்த மாமத யானையும், மரத்தில் மறைந்த மாமத யானையும்தான் என்ன வகை யானைகள் என்று இதுவரையாரும், திருமூலரைத் தவிர, விளக்கிவிடவில்லை. குறிப்பாக மேற்கத்திய சிந்தனைக்கு - மேற்கத்திய அறிவியல் பார்வைக்கு விடப்பட்ட சவால் இது! ஜார்ஜ் காண்டரின் மூலைவிட்ட உறவுக்கோடும், ஒன்றுக்கொன்று பரிமாற்ற உறவுமுறையும் மெய் எண்களின் தொடர்ச்சியை விளக்க முனைந்து, முடியாமல் நட்டாற்றில் நின்று தவிக்கிற இந்த ஒரு கதையே இதற்குப் போதுமான சான்று. இதுவரை எவரும், எந்தக் கோட்பாடும் இந்த எல்லையைத் தொட்டதும் இல்லை; சந்தித்ததும் இல்லை.!

திருமூலர் இந்த உறவை நன்கு அறிவார்! அவரது பிரபஞ்சத்தில், இந்த உறவின் மையமாக இருந்தது, நாம் சொல்லும், புலன்சாராத அந்த மூன்றாவது வெளிதான்! ஆனால், இந்த மூன்றாவது வெளியை திருமூலர் எப்படிப் பார்த்தார் என்ற அந்தப் பார்வையிலேயே நாமும் பார்த்தால் அதன் விளைவு நம்மோடு உள்ள ஐன்ஸ்டீனின் பிரபஞ்சமும் நம்மைவிட்டு அகலாமல், திருமூலர் பிரபஞ்சமும் நம்மை நெருங்கி வராமல், எப்போதும் ஒரு இடைவெளி விட்டுத் தனித்தனியே தான் இரண்டும் நிற்கும். அதுமட்டும் அல்ல. இன்று, அழையா விருந்தாளியாய், இந்த இடைவெளிக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் கணினியின் நுட்பவேகம், வெகு எளிதில் இனி இந்த இடைவெளியை எல்லையில்லாத தூரத்திற்கு விரித்துக் கொண்டு போய்விடும்.

ஐன்ஸ்டீனை அறிந்து கொண்டவர்கள் திருமூலரையும் அறிய வேண்டும். திருமூலரை அறிந்தவர்கள் ஐன்ஸ்டீனையும் அறியவேண்டும். ஐன்ஸ்டீன் தனது பிரபஞ்சப் பயணத்தில் தவறி விழுகிற இடமும், திருமூலர் தனது பிரபஞ்சப் பயணத்தை முடித்துக் கொண்டு இளைப்பாறுகிற இடமும், இரண்டு ஊசி முனைகள் ஒன்றுக்கொன்று சந்தித்துக் கொள்கிற இடைவெளியில் உள்ள உலகங்கள்தாம்!

இந்த சின்னஞ்சிறு உண்மை ஐன்ஸ்டீனுக்குத் தெரிந்திருந்தால் அவர் எப்போதே திருமூலர் ஆகி இருப்பார்; அதுபோலவே திருமூலருக்குத் தெரிந்திருந்தால் அவரும் ஐன்ஸ்டீன் ஆகி இருப்பார்! ஆனால், என்ன விந்தை? இருவருக்குமே, இந்த மாதிரி ஒரு பயணம் தேவைப்படவில்லை! ஏனென்றால், இரண்டு பேருமே இந்த மாதிரி ஒரு பயணம் செய்தால், அது அவர்களை புறப்பட்ட இடத்திற்கே


படிப்பகம்

www.padippakam.com

மீண்டும் கொண்டு சேர்த்துவிடும் என்று நன்கு அறிந்து வைத்திருந்தார்கள்! அதனால், ஐன்ஸ்டீன் ஐன்ஸ்டீனாகவே இருந்துவிட்டார்; திருமூலர் திருமூலராகவே இருந்து விட்டார்! இந்த இருவருடைய பிரபஞ்சத்திற்கும் இடையில் உள்ள இடைவெளியை அளந்து காணும் ஒரு புதிய வடிவயியல் கோட்பாடு இன்னும் உருவாகவில்லை. அப்படி ஒரு கோட்பாட்டிற்கான வடிவயியல் அடிப்படைகள் இருக்க முடியும் என்ற நம்பிக்கைகூட இன்றுவரை எவருக்கும் எழவும் இல்லை.

சுருக்கமாகச் சொன்னால், மனிதனது புலன்சார்ந்த உலகங்களின், வடிவப் பரிமாணத்திற்குப், புலன் சாரா உலகின் வடிவப் பரிமாணத்திற்கும் இடையில் உள்ள அடிப்படையான வேறுபாடுகள் அனைத்தும் ஒரு அறிவியல் சார்ந்த அடிப்படையில் விளக்க முடியும் என்ற நிலையை எப்போது ஒருவரால் எடுக்க இயலுமோ அப்போது மட்டுமே இது சாத்தியம்! கிழக்கத்திய சிந்தனையின் ஞானமும், மேற்கத்திய சிந்தனையின் இப்போதைய தர்க்கமுறையும் சந்தித்துக் கொள்ள முடியாத ஒரு இடம் அது!

இந்த மாதிரியான எல்லைகளையும், பார்வைகளையும் நன்றாக அறிந்த நிலையிலேயே, இதில் சொல்லப்பட்ட அனைத்துவகையான கருத்துருவங்களையும் உருவாக்கி இருக்கிறேன். இன்னும் செய்ய வேண்டியது என்னைப் பொருத்த அளவில், கோட்பாட்டளவில் பெரிய பணி என்பதையும் நான் நன்கு அறிவேன். அந்த அளவிலும் முடிந்தவரை செய்து முடிக்க எண்ணி இருக்கிறேன். எனது கருத்துருவங்கள் குறித்து எந்த ஒரு விவாதத்தையும், விமர்சனத்தையும் ஆரோக்கியமான முறையில் என்றும் வரவேற்பேன்.

- ***ஜீவஒளி***

("மூன்றாவது வெளி" பக்கம் 203 முதல் - 207 வரை; பக்கம் 337 கடைசி பத்தி முதல் பக்கம் 340 முடிய)

www.padippakam.com

# காற்றாய் புயலாய் . . .

**- விமர்சனம் இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்**

(ஜெர்மனியில் 19.5.2001 ல் நடந்த "பெண்கள் சந்திப்பு" என்ற நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட கட்டுரை)

பெண்கள் எழுத்தென்றால் பெரும்பாலான இலக்கியவாதிகள் பெரிதுபடுத்துவதில்லை. காரணம் காலாதி காலமாக இந்த இலக்கியவாதிகள் என்று சொல்லப்படுபவர்களில் பெரும்பாலோர் பெண்களை இரண்டாம்தர மனிதர்களாய் மதித்தும் நடத்தியும் வந்தவர்களாவர். பெண்களின் எழுத்துக்கள் தொடங்கி நூறு வருடங்களாகி விட்டாலும் ஆண்களின் (ஆண் இலக்கியவாதிகளின்) கவனத்திற்கு வந்தவை மிகக் குறைவானவையே.

இன்று இந்தியாவிலிருந்தும் பல முன்னேற்றமடையும் நாடுகளிலிருநதும் பெண்ணியக் கருத்துக்ளைக் கொண்ட பல எழுத்துக்கள் வெளிவருகின்றன. இவை கதைகள், கவிதைகள், கட்டுரைகளாக இருக்கலாம். பெண்ணியக் கருத்துக்களை முன்வைத்து எழுதப்படுபவை ஏதோ ஒரு விதத்தில் அரசியல் சார்ந்திருப்பதால் அந்த இலக்கியங்களையோ எழுத்துக்களையோ பிற்போக்குச் சிந்தனையுள்ள இலக்கியவாதிகள் இனம் கண்டு கொள்வதில்லை. கலை கலைக்காகவே என்ற பம்மாத்தில் பிரச்சினைகளை மூடி மறைக்கும் எத்தனமே இதுவாகும்.

உலகப் பிரசித்தி பெற்ற இதிகாசங்களும் காப்பியங்களும் பெண்களை மையமாக வைத்து எழுதப்பட்டவை. திரௌபதிக்குத் துகில் உறிபடாமதிருந்தால் மகாபாரதம் எழுதப்பட்டிருக்காது. சீதையை தூக்கிக் கொண்டு போகாமல் இருந்தால் இராமாயணம் வந்திருக்காது. இன்றைய கால கட்டத்திலும் இப்படிப் பிரச்சினை வந்த விடயங்களே ஆண்களின் பார்வையில் பேசக்கூடிய, பிரபலப்படுத்தக் கூடிய இலக்கியங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மடம் போவரி, "அன்னா கதரீனா" கதைகள் சோரம்போன பெண்களை, கணவனை விட்டுக் காதலரை தேடிய பெண்களைப் பற்றி எழுதப்பட்டவை. இவை பிரபலமான இலக்கியங்கள். "அம்மா வந்தாள்", "சிலவேளைகளில் சில மனிதர்கள்" என்பனவும் பெண்கள் தடுமாறிய கதைகளைக் கொண்டவை அல்லது தடுமாற்றத்தை அனுபவித்த சோகங்கள்.

இந்தியாவில் இன்று மனித சிந்தனைகளை மந்தப்படுத்தும் திரைப்படங்களோ ஒரு ஆணுக்காக உயிரையும் கொடுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

பத்தாம்பசலிக் கதைகளைக் கொண்டவை ("முதல் மரியாதை"யிலிருந்து பட்டியல் போடலாம்). இந்தச் சிந்தனையும் எழுத்துச் சரித்திரமும் எங்கள் பரம்பரையின், கலாச்சாரத்தின் சமுதாயக் கோட்பாடுகளின், சமயத் தத்துவங்களின் பிரதிபலிப்புக்கள்.

பெண்களுக்குச் சமத்துவம் கொடுபட வேண்டும் என்ற சட்டங்கள் எத்தனையோ விதத்தில் இந்திய அரசியலமைப்பில் இருந்தாலும், இன்றும் இந்தியாவில் சாதி, சமயம் என்ற பெயர்களில் மிக மிகக் கொடுமைக்குள்ளாவோர் பெண்களே. குடும்பம் ஒரு ஆலயம், குழந்தை ஒரு தெய்வம் என்ற இந்தியாவில்தான் மனைவிகள் எரிக்கப்படுகிறார்கள், பெண் குழந்தைகள் அழிக்கப்படுகிறார்கள். சில ஆண் இலக்கியவாதிகளின் கண்களுக்கு இந்த அநியாயங்கள் படாதவை. இவை பற்றி எழுதும் பெண்கள் சமுதாயத் துரோகிகளாக, குடும்ப எதிர்ப்பாளர்களாக, ஒழுக்கம் கெட்டவர்களாக பகிரங்கப்படுத்தப்படுகிறார்கள்.

"காற்றாய்ப் புயலாய்ச்" சிறுகதைத் தொகுதி 2000-ம் ஆண்டு வெளிவந்த ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் சிறுகதைப் போட்டித் தொடரின் மூன்றாவது தொகுதியாகும். முதல் வருடத் தொகுதிக்கு 45 பெண்களும் இரண்டாம் வருடத் தொகுதிக்கு 55 பெண்களும் மூன்றாம் வருடத் தொகுதிக்கு 77 பெண்களும் தங்கள் படைப்புக்களை இந்தியா, இலங்கை போன்ற பல பகுதிகளிலிருந்து அனுப்பியிருக்கிறார்கள். இந்த உற்சாகத்திலிருந்து எத்தனை பெண்களுக்கு எழுத்து வேகம், விடயம், நேரம் இருக்கிறது என்பது தெளிவாகிறது. இவர்களின் கதைகளில் சோரம்போன செய்திகள் இல்லை. ஆண் வர்க்கத்தால் ரசிக்கக்கூடிய கற்பனையோ கவர்ச்சியோ இல்லை. சோகம், துயரம், பரிதாபம், ஆதங்கம், ஆத்திரம் தோய்ந்து கிடக்கிறது இந்தப் பெண்கள் கதைகளில்.

ஆங்கிலேயன் இந்தியாவுக்குப் போன காலத்தில் இந்தியச் சமுதாயத்தில் பெண்களுக்கு நடக்கும் கொடுமை கண்டு திடுக்கிட்டான். சமயச் சடங்குகள், நம்பிக்கைகள் பாரம்பரியம் என்ற பெயரில் நடக்கும் அநியாயங்களை ஒழிக்க இந்திய ஆண்களிடம் பேசினால் ஒன்றும் நடக்க முடியாது என்று கண்ட பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் சிசுக்கொலைகள் (பெண் குழந்தைகள்), பாலிய விவாகத்தைத் தடுக்கவும், உடன் கட்டை ஏறுவதைத் தடுக்கவும், தேவதாசிகளைப் பொதுச் சொத்தாகப் பாவிப்பதை ஒழிக்கவும், பல தார மணங்களுக்கு முடிவு கட்டவும் சட்டங்களை இயற்றினார்கள். ஆளவந்தவன் செய்த சீர்திருத்தங்கள் ஆங்கிலேயன் பிறப்பித்த சட்ட திட்டங்களிலேயே படிந்துபோக ஆண்களின் மூர்க்கம் இந்தியாவில்


படிப்பகம்

www.padippakam.com

இன்றும் தலைவிரித்தாடுகிறது. இதை எதிர்த்து எழுப்பப்படும் குரல்கள் நசுக்கப்படுகின்றன.

இந்தத் தொகுப்பிலுள்ள கதைகள் இவற்றைத்தான் பிரதிபலிக்கின்றன. இந்தத் தொகுதியில் 15 கதைகள் இருக்கின்றன. பெரும்பாலானவை சாதாரண கதைகளாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை. ஒரு சில, இரண்டு மூன்று தரம் படிக்கப் பண்ணியவை. ஒரு சில கதைகள் நித்திரையையும் குழப்பி இந்த அநியாயங்கள் எப்போது முடியும் என ஆதங்கப்பட வைத்தவை. ஆங்கில ஆண்கள் இந்தியப் பெண்களிடம் கொண்ட பரிதாபம், இந்திய ஆண்கள் பலரிடம் இல்லாதிருப்பது விந்தையே. ஈ.வே.ரா. பெண் அடிமைத்தனத்தை எதிர்த்துப் போட்ட கூச்சல்கள் காற்றிற் பறந்து விட்டதா?

"காற்றாய்ப் புயலாய் சூறாவளியாய்" என்ற கதையை வள்ளி எழுதியிருக்கிறார். மனைவியுடன் உறவு சரிப்படாவிட்டால் எந்தக் காரணத்தையும் சொல்லி (வேறு என்ன காரணம் அவள் நடத்தை கெட்டவள் என்பதுதானே!) அவளை ஒதுக்கிவிட்டு இன்னொரு பெண்ணை மணம் செய்தவனிடம் சரிசமமாக நின்று நீதிக்கு வாதாடும் பெண்ணின் கதை. மனைவியிருக்கும்போது மாற்றானிடம் போவதைக் கண்டும் காணாமலிருக்கும் எங்கள் சமுதாயம் எப்படி இந்த மாதிரியான பெண்களுக்கு நீதி கொடுக்கும் என்பது கேள்வியல்ல. எதையும் சகித்துக் கொண்டு கணவனே கண் கண்ட தெய்வம் என்று வாழ்ந்த காலம் போய்விட்டது என்பதைக் காட்டுகிறது இந்தக் கதை.

இந்த 15 கதைகளையும் மிகவும் இயல்பான நடையில் எழுதியிருக்கிறார்கள் இந்தப் பெண்கள். வெற்று வசனங்களை வைத்தோ அல்லது அங்கு ஒன்று இங்கு ஒன்று மேதாவித் தனமான மேற்கோள்கள் காட்டித் தாங்கள் அறிவாளிகள் என்று காட்டவோ இந்தப் பெண்கள் நேரத்தைச் செலவளிக்கவில்லை. கதை சொல்லிக் கொண்டு போகிறார்கள். கண்ணீர் வரப் பண்ணிய காரணங்களைச் சொல்கிறார்கள். "காற்றாய் புயலாய் சூறாவளியாய்" கொதித்தெழுந்த கொடுமைகளைக் கொட்டுகிறார்கள்.

லத்தீன் அமெரிக்க பெண் எழுத்தாளர் இஸபெல்லா அலெண்டே தன் நாட்டு அரசியல் பிரச்சினையை மிக எளிதான விதத்தில் உலகத்து முற்போக்கு உள்ளங்களுடன் பகிர்ந்து கொள்கிறார். அவர் வசன வித்தை செய்யவில்லை. "நவால் எல் சடாவி" என்ற எகிப்திய பெண் எழுத்தாளர் முஸ்லீம் சமுதாயத்தில் முக்காடு போட்டுக் கொண்டு குமுறியழும் பெண்களின் துயரைப் பகிர்ந்து



படிப்பகம்

www.padippakam.com

கொள்வார். இவர் வசன மாயங்கள் பண்ணுவது கிடையாது. அருந்ததிராயின் எழுத்து வித்தியாசமானது என்றாலும், இந்தியாவில் பெண் கொடுமையை சாதி என்பவற்றைச் சாடியது. விடயத்தைத் தயக்கமின்றி சொல்பவர்களுக்கு இந்த ஜாலங்கள் தேவையில்லை. நேர்மையைப் பகிர்ந்து கொள்பவர்களுக்குத் துணிவு தேவை. அந்தத் துணிவு இருக்கும்போது மூடி மறைத்து உண்மைகளைக் கொட்ட வேண்டும் என்றில்லை என்பதைப் பல பெண் எழுத்தாளர்கள் காட்டியிருக்கிறார்கள்.

இந்தியாவில் திருமணத்தின்பொழுது வரதட்சணை கொடுப்பதையும் வாங்குவதையும் தடைசெய்து 1961-ம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்றும் இந்தியாவில் ஒரு வருடத்திற்கு 5000 க்கு மேலான பெண்கள் வரதட்சணைக் கொடுமையால் இறக்கிறார்கள். வரதட்சணை வாங்கும் கணவனின் மனப்பான்மையைத் தெற்றென விளக்கிக் காட்டுகிறது. "அரைப்பவுனும் ஐந்து பவுனும்" என்ற ஜூலியட் ராஜூவின் கதை.

இந்திய அரசியல் சட்டம் 9 பகுதிகளையும், 395 பிரிவுளையும் கொண்ட இது சாதி, மத, பால், இன வேற்றுமையற்ற சமுதாயத்தைக் கருத்தில் வைத்து எழுதப்பட்டது. இந்தியச் சட்டத்தின் 9 பிரிவுகளில் 5, 6-ம் சட்டப் பிரிவுகள் பெண்களின் உரிமையைப் பாதுகாக்கின்றன. ஆனால் நடப்பதோ வேறு. பல முற்போக்கு இந்திய ஆண்களும் இயக்கங்களும் பெண்களின் துயரங்களை தீர்க்கப் பாடுபட்டார்கள்.

காந்தியடிகளின் பங்கு பெண்களின் வாழ்க்கையில் திருப்பமேற்பட்டதற்கு மிக முக்கியமானதாக இருந்தது. கல்வியின் மூலம், சிந்தனையின் வளர்ச்சி மூலம்தான் பெண்கள் தங்கள் சுயமையை உணரலாம், தங்கள் சுதந்திரத்திற்கும் போராடலாம் என்று உபதேசித்தார். ஆனால் இன்றும் நூறு கோடி மக்கள் உள்ள இந்தியாவில் பெண்களின் கல்வி நிலை மிக மிகத் தாழ்வாகவே இருக்கிறது. அப்படிப் படிக்காத பெண்கள் எப்படிக் கஷ்டப்படுவார்கள் என்பதை மற்றவர்கள் தயவில் வாழும்போது எப்படி ஈவு இரக்கமில்லாமல் நடத்தப்படுவாாகள் என்பதை "முத்தாயி" மூலம் தெரிந்து கொள்ளலாம். "மனிதநேயம்" என்ற கதையை நா. சுப்புலட்சுமி எழுதியிருக்கிறார். இதில் பல விடயங்கள் பேசப்படுகின்றன. முக்கியமான விடயம், பிறர் தயவில் வாழும் இந்தியப் பெண்களின் பரிதாபம். பிறந்தது முதல் இறக்கும் வரை மற்றவர் தயவில் வாழத் தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கும் இந்திய பெண்களின் துயரக் கதையிது.



படிப்பகம்

www.padippakam.com

கணவனை இழந்த பெண்களின் வாழ்க்கையில் எந்த மதிப்பும் கிடையாது. அவள் மற்றவர்களின் தயவை நாடி உழைத்து, ஓடாய்த் தேய்ந்து போகவேண்டும் என்ற கோட்பாட்டைச் சமுதாயம் பழக்கவழக்கம் என்ற பெயரில் இன்னும் தொடர்வதை இந்தக் கதையிற் படிக்கலாம். எப்படி ஒரு ஜீவன் தன் சுயமையற்றுப் போகிறது என்பதை விளக்கும் கதையிது. இந்தக் கதைகளை எழுதிய பெண்கள் தமிழ்ப் பெண்கள். இந்தியாவில் ஓரளவாவது படித்த பெண்களைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் இடம் பெறுகிறது. இந்தப் பெண்களின் வாய்மூலம் 2000-ம் ஆண்டிலும் இந்திய ஆண்கள் எப்படி மூர்க்க குணமுள்ளவர்களாக, தன்னலவாதிகளாக, பெண்கள் தங்களின அடிமைகள் என்று நினைப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பல கதைகள் மூலம் பெண்கள் சொல்கிறார்கள்.

தூரத்திலிருந்து பார்க்கும்போது கொடுமைகள் மிகவும் விரிவாகத் தெரிகின்றன. ஆனால் கொடுமைகளையே வாழ்க்கையின் ஒரு அங்கமாக நினைத்திருந்த பெண்கள் இன்று தங்கள் அடையாளங்களைத் தேடத் துணிவது இந்தக் கதைகளிற் தெரிகிறது.

படித்த பெண்கள் தங்கள் சிந்தனைத் தெளிவால் குடும்ப, சமுதாயக் கொடுமைகளை எதிர்ப்பார்கள் என்பதை "மாயாவின் சினேகிதம்" என்ற ஷீபாவின் சிறுகதை விளக்குகிறது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கப் போனால் இக்கதைகளில் பெரும்பாலானவை ஆண் ஆதிக்கத்திலிருந்து பெண்கள் விடுபட நினைப்பதை, விடுபடுவதைக் காட்டுகின்றன. வாழ்க்கை முழுக்கத் தன் கணவனுக்காகவும் குழந்தைகளுக்காகவும் வாழ்ந்த ஒரு பெண் வாழ்க்கையின் கடைசிப் பகுதியில் தான் நம்பும் வாழ்க்கையைத் தான் முன்னெடுக்க முயற்சிக்கிறாள் என்பதை "முதுமையில் ஒரு சாதனை" என்று சிறுகதை மூலம் சாதனா ராதாகிருஷ்ணன் சொல்கிறார்.

இந்தத் தொகுதியில் இடம்பெறும் சிறுகதைகளை எழுதிய பெண்கள் எல்லாரும் பலவிதமான வாழ்க்கைப் பின்னணிகளிலிருந்து வந்திருக்கிறார்கள் என்று புரிகிறது. எழுத எடுத்துக் கொண்ட விடயங்களில் தீர்க்கமான கண்ணோட்டமும் தெளிவும் புலப்படுகிறது. தாய்மையின் முழுமை என்றால் மற்றவர் பார்த்து பெருமைப்படக் கூடிய குழந்தையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான கண்ணோட்டம். ஆனால் "அவள், அவன், அது" என்ற கதையை எழுதிய இரா. கயல்விழி அலியாக ஒரு குழந்தையைப் பெற்ற தாயை மையமாக வைத்து எழுதியிருக்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு கோணத்திலிருந்து பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு கதைக்குள்ளும் பல விடயங்கள் பேசப்படுகின்றன. மனம் திறந்து எழுத பெண்களால்தான் முடியும் என்று காட்டியிருக்கிறார்கள் இவர்கள்.

விளம்பரத்திற்காகவும் தற்பெருமை பேசவும் மேடைகள் யாவும் இக்கால கட்டத்தில் இந்தப் பெண்களைப் போல் எத்தனையோ பேர் ஓசைப்படாமல் தங்கள் சிந்தனைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.

பெண் அடிமைத்தனத்தை அழித்தொழிக்க முதற்கட்டமாக இருப்பது, தான்அடிமைப்படுத்தப் பட்டிருக்கிறேன் என்பதை ஒரு பெண் உணர்ந்து கொள்வதாகும்.

இவர்களைத் தங்கள் மேடைகளில் ஏற்ற இன்றைய இலக்கிய பிரம்மாக்கள் இடம் கொடுக்கப் போவதில்லை.

வெந்தும் வேகாததுமான 'பெண்ணிய' சமையல்களைச் செய்து அதை ரசிக்கும் ஆண்களுக்குப் படைத்துப் பட்டம் பெற இந்தப் பெண்கள் தங்கள் எழுத்துக்களைப் படைக்கவில்லை என்பது அவர்கள் எடுத்துக் கொண்ட விடயங்கள், படைக்கப்பட்ட பாணி என்பதிலிருந்து தெரிகிறது.

"காற்றாய் புயலாய்" என்ற சிறுகதைத் தொகுதி இன்னும் எத்தனையோ பெண்கள் சிறுகதைத் தொகுதி வெளிவரும் என்பதைப் பறைசாற்றுகிறது. இதைப் படைப்பில் கொண்டுவந்த திரு. கோவை ஞானிக்கு நன்றி.

"காற்றாய் புயலாய்" - பெண் எழுத்தாளர் சிறுகதைத் தொகுதி
வெளியீடு : தமிழ்நேயம் விலை : ரூ. 30/-

RAJESH BALA,
37, NORMAN AVENUE, WOOD GREEN, LONDON, N 22 SES

www.padippakam.com

# நூல் திறனாய்வுகள்

## தடை ஓட்டங்கள்

முனைவர் எம்.ஏ.சுசிலா அவர்கள், பல்வேறு சந்தர்ப்பத்தில் சிறப்பும், பரிசும் பெற்ற தன்னுடைய 13 சிறுகதைகளைத் தொகுப்பாக்கி யுள்ளார்.

கல்வி வட்டாரச் சூழலிலிருந்து வரும் படைப்பாளிகளுக்கே உரித்தான அடையாளங்களிலிருந்து சுசிலா அவர்கள் பெருமளவு விலகியுள்ளார். நம்பிக்கை அளிப்பதாகவே இவரது பெண்ணிய அணுகுமுறை உள்ளது. சட்டாம்பிள்ளைத்தன்மான பேதைமை இவரிடம் தென்படுவதில்லை.

கடலைச் சுற்றிலுமுள்ள பகுதிகளெல்லாம் அலையடித்தும் எழுந்தும் விழுந்த படியும் இருப்பினும் நடுப்பகுதி நிசப்தமாயிருப்பது போன்று சிலசமயம் இலக்கியச் சூழல் அமையும் - இது நாவல்களின் காலம் என்ற வகையில், சாத்தியப்பாடுகள், க்யூபிசம் என்றெல்லாம் பழமை உடைப்புகள் நாவல்களில் தொடரும் அளவு சிறுகதை வடிவத்திற்கு எடுத்துச் செல்லப்படவில்லை. இன்று சிறுகதை, கடலின் நடுப்பதிக்குச் சென்றுவிட்டது.

இத்தொகுப்பின் ஆசிரியரும் புதுமை வடிவத்தையோ, மொழிச் சாதுர்யத்தையோ நம்புவதை விட, கதைக்கருவின் அர்த்தத்தில் நம்பிக்கையைக் கூடுதலாக வைக்கின்றார். இத்தொகுப்பு வாசகனிடம் கோருவதெல்லாம் நேர்மையையும், நேர்கோட்டு வாசிப்பையும்தான். சமூகத்தின் மீது ஆசிரியர் கொண்ட நேயமும், பெண்ணிய ஆதரவும் இடையறாத தொடர் ஒலியாக அனைத்துக் கதைகளையும் தொட்டுச் செல்கிறது.

இத்தொகுப்பாசிரியருக்கு, இயல்பான பெண்ணியப் பாத்திரப்படைப்பு, அற்புதமாக வசப்படுகிறது. கல்விதான் பெண்ணை உயரப்படுத்தும் என்ற தாகிப்பில் வசப்பட்ட ஒரு சிறுமியின் தவிப்பு ஓவியமாய், 'கண்திறந்திட வேண்டும்' கதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இருவேறுலகம் இதுவென்றால் கதையும் சிறப்பாக உள்ளது. கதைப்பாத்திரங்களின் பேச்சு மொழி இயல்பாக அமைந்துள்ளது. துணை நடிகையரின் வாழ்வு காட்டப்படுகிறது. மிகப்பெரிய கலைக்கனவுகளோடு திரைஉலகிற்குள் நுழைந்தவர்கள் தோற்றுப்போய்



படிப்பகம்

www.padippakam.com

திரையின் ஓர் ஓரத்திற்கு சென்று விடும் அவலமும், அவர்களின் அறஉணர்வும், கலைப்பசியும் கதையில் அற்புதமாகச் சுட்டப்படுகின்றன.

பெண்களால்தான் பெண்ணுணர்வு மொழியாடல்களைப் பதிவு செய்ய முடியும் என்பதற்கு இத்தொகுப்பில், நிறைய மின்னல் கீற்றெனப் பளீரிடும், மொழிகளும், வர்ணிப்புகளும் சான்றுகளாகின்றன. தொகுப்பின் தலைப்பான, தடைஓட்டங்கள் கதையில் இது அழகாக வெளிப்பட்டுள்ளது. நாத்தனார் வீட்டுக் கல்யாணப் பரபரப்பில் வீடே திமிலோகப்படுகிறது. சாமான்கள் எடுத்துத் தரும் சாக்கில் உள்ளறையில், ஒளிந்து கொண்டே சிறுகதைப் போட்டிக்கான நாள் நெருங்கியதால் கதை எழுதும் பெண் பாத்திரமும், பெண் உணர்வும் நிச்சயமாய்ப் பெண் எழுத்தாளரின் தனித்துவ அனுபவம். ஆண் எழுத்தாளருக்கு இச்சம்பவம்தரும் உணர்வினின்றும் நிச்சயம் இது வேறுபட்டதே. மொழிலாவகமும், சிறுகதை வடிவ உத்தியில் சற்றே கவனமும் கொள்வாரெனில் இத்தொகுப்பாசிரியரின் படைப்புகள் கவனித்தே தீரவேண்டிய பெண்ணியப் படைப்பாகும் என்ற நம்பிக்கையை இத்தொகுதி தருகிறது.

- *முனைவர் மஞ்சுளாதேவி*

மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 1. விலை ரூ. 30.00

## "தவிப்பு"

தமிழ்நாட்டு மக்களின் விடுதலை புரட்சிக்குழுவினர் (தவிப்பு) தொலைபேசி நிலைய இயக்குனர் பாண்டேயைக் கடத்திக் கொண்டு போய்விட்டனர். பாண்டேவை மீட்பதற்காக தொலைக்காட்சி பணியாளராகிய விஜயனைக் கண்டுபிடிக்கின்றனர் உளவுத் துறையினர். புரட்சிக் குழுவில் இடம் பெற்ற ஆனந்தியும், விஜயனும் கல்லூரியில படிக்கும் பொழுதே காதலர்களாக இருந்தனர். ஆனந்தியை விஜயன் வசப்படுத்துவதன் மூலம் பாண்டேவை விடுவிக்க முடியும் என்பது அவர்கள் திட்டம்.

விஜயனும், ஆனந்தியைச் சந்திக்கிறான். பழைய நினைவுகளோடு பாரதியையும் நினைவுபடுத்திக் கொள்கிறான். புரட்சிக் குழுவினரை காசு கொடுத்து வலைக்க முடியுமா? என்ற முறையில் உள்துறை அமைச்சர் உள்ளே வருகிறார். ஆனந்தி இடம் கொடுக்கவில்லை. இயக்கத்திற்கு ஆயுதங்கள் வாங்கவும், போதை மருந்தை கடத்துவதன் மூலம் பொருள்களைத் திரட்டவும், இயக்கத்தில் ஒரு சிலருக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. இயக்கத்தின் உள் இருந்தே குலைக்கும் வேலையில்


படிப்பகம்

www.padippakam.com

அரசு வெற்றி பெறுகிறது. ஆனந்தி கொல்லப்படுகிறாள். விஜயன் மனம் மாறி பதவியில் இருந்து விலகி சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவது என்று முடிவு செய்கிறான்.

தவிப்பு நாவலின் கதைச் சுருக்கம் இதுதான். பத்திரிகையாளர் ஞாநிக்கு தமிழகத்தில் செயல்பட்ட / செயல்படும் புரட்சிக் குழுக்கள் பற்றிய விவரங்கள் போதியளவேனும் தெரியும் தமிழ்ச் சூழலிலிருந்து ஒரு அசலானக் கதையை அவரால் தரமுடியும்.

காஷ்மீர் மற்றும் அஸ்ஸாம் கதையை தமிழகத்திற்குள் பொருத்தமில்லாமல் நுழைத்திருக்க வேண்டாம். புரட்சி குழுவில் சேர்ந்து பணியாற்றும்போது ஆனந்தி, காதல் நினைவாகவே இருப்பாள் என்ற விஜயனின் கற்பனை அபத்தம். விஜயன் மேட்டுக்குடி சார்ந்தவன். சுயநிர்ணய உரிமைக்காகப் இவனாப் போராடப் போகிறான். பாரதி கவிதைகளை அங்கங்கே அழகாக தெளித்து வைக்கிறார் ஞாநி. விகடனுக்கேற்ற கதையைத் தயாரித்தவர், தமிழ் மக்களின் புரட்சி வரலாற்றை அதன் ஏற்றத்தாழ்வோடு பதிவு செய்வது எழுத்தாளரை உயர்த்தும். ஞாநியிடம் இத்தகைய படைப்புக் களைத்தான் நாம் எதிர்பார்க்கிறோம்.

*- மா. நடராசன்*

அறிவாலயம், அஞ்சல்பெட்டி எண் 667, சென்னை-14. விலை ரூ.60/-

## விதைச்சோளம்

சென்னை கவிதா பப்ளிகேசன் டிசம்பர் 2000ல் பதிப்பித்து ல் ஆனது 'விதைச்சோளம்' என்ற புதினம். சூர்யகாந்தன் எழுதியது. 8 அத்தியாயங்களைக் கொண்ட இந்தப் புதினம் 207 பக்கங்களை உடையது.

கொங்கு நாட்டு மொழி : உரையாடல் கொங்கு நாட்டு விவசாயக் கூலித் தொழிலாளியின் உணர்வு, உழைப்பு, வெள்ளைச் சோளம் என்று சொல்லப்படுகின்ற அவர்களின் மனநிலை ஆகியவற்றின் பதிவுதான் விதைச்சோளம்.

கொங்கு நாட்டு அரிசன மக்களின் வாழ்க்கை அமைப்பு சிந்தனை வெளிப்பாடு, இன்று கால வெள்ளத்தில் நீந்தும்போது மாறிக் கொண்டிருக்கும் நிலை என நீண்ட தொடர் ஓட்டமாக இப்புதினம் செல்கிறது.

www.padippakam.com

# கொங்குச் சிறுகதைகள்

தனிப்பட்ட எழுத்தாளர்களின் தொகுப்பு நூல்கள் அல்லது தேர்ந்த படைப்புகள், அவரின் சாதனைக் கண்ணோட்டத்துடன் அணுகப்படுகின்றன. ஒருவகையில் வாழ்வின் சிக்கல் எவ்விதமெல்லாம் விமர்சனத்திற்குள்ளாகி இருக்கிறது என்பது ஒதுங்கி, படைப்பாளன் முதன்மைப்படுத்தப்படுகிறான். ஆனால் பலதரப்பட்ட ஆசிரியர்களின் தொகுப்பு நூல், படைப்பு வெளிப்படுத்தும் வீரியத்தின் வழி படைப்பாளனுக்கு உரிய மதிப்பை வாசகன் அறிந்து கொள்ள ஏதுவாகிறது.

சிறுகதைகளை விதவிதமாய்த் தொகுத்துப் பார்த்து வாசகனுக்குப் புரிபடாத புள்ளிகளின் துவாரங்களைத் தர்சனமாக்குகிற பணி, தமிழில் நிகழ்கிற அளவு நான் அறிந்தவரை பிற மாநில மொழிகளில் நிகழ்வதில்லை. அரசியல் - இலக்கிய - குழு காரணங்களால் அதனதன் பதுங்குகுழியிலிருந்து தொகுப்பு வந்திருந்தாலும் கூட, அவரவர் காழ்ப்புணர்ச்சிகளைக் கடந்து நம் வாழ்க்கைக்கான சத்தான தாதுப்பொருளாகி விட்டிருக்கின்றன. சண்டையெல்லாம் சமூகத்தின் மீது படைப்பு கொண்டிருக்கும் பார்வை - அதன்பலம் - பலகீனம் என்றடிப்படையில்தான்.

நான் படித்த தொகுப்புச் சிறுகதைகளில் மனநிறைவு கூடிய தொகுப்பு பெருமாள் முருகன் தொகுத்த 'கொங்குச் சிறுகதைகள்' தமிழ்ச் சிறுகதையாளர்களின் படைப்புகளைத் தொகுத்தவர்கள் நட்புக்காக சோடைகளைச் சேர்த்தும் அங்கீகார பிரச்சனையினால் உயிர்துடிப்புள்ள படைப்புகளை மறைத்தும் செயல்பட்டனர். பெயர் இங்கு தேவையில்லை. இந்தத் தந்திரத்தை பெருமாள் முருகன் முற்றாக ஒதுக்கியுள்ளார். தமிழ்ப்பரப்பை உள்ளடக்கிய தொகுப்பு நூல்களில் தெரிந்தே நேரும் விபத்து, நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய கொங்குத் தொகுப்பில் நிகழாததுமட்டுமல்ல. முழுதான தமிழ்ப்பரப்பு தொகுப்பிற்கு நிகரான வலிமை கொண்டவை. இதில் வடிவரீதியாக பலகீனம் கொண்ட பத்துப்பனிரெண்டு கதைகள் சமூகத்தின் மீது கொண்டிருக்கும் பார்வையினால் மேலெழும்புகின்றன.

முப்பத்து மூன்று கதைகளில் - மூன்று தலைமுறை எழுத்தாளர்களில் மூன்றுவித போக்குகளையும் காணமுடிகிறது. புதிய போக்குகள் என அறியாவண்ணம் கதைக்களனோடு உருவாகி இருக்கின்றன. வாழ்வின் சரிவுகள், ஏமாற்றங்கள், முன்னேற்றத்திற்கு வழிவகையற்ற வறண்ட நம்பிக்கைகள் என தத்தளிப்பு மிக்க

www.padippakam.com

மொழிச்சூழலில் உருவாகி இருக்கின்றது புதிய போக்கு. அதிகமும் இளைஞர்களின் கதைகளில் இழையோடியிருக்கின்றது.

தொகுப்பு குறித்து இன்னொன்றும் சொல்லவேண்டும். எழுத்தாளர்களுக்கு நெருங்கிய தொடர்புடைய வாழ்க்கையிலிருந்து எழுந்த கதைகளை இத்தொகுப்பில் தேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அனுமானத்தினாலும், அனுபவ வீச்சாலும் புதிய உலகத்தில் குதித்து சிறந்த படைப்புகளை இவ்வாசிரியர்கள் படைத்திருக்கக்கூடும். அதைவிட கொங்கு பிரதேசத்தின் பிரச்சனைகள் முக்கியத்துவமாகி இருக்கின்றன. உத்தி, ஜாலம், மேலை இறக்குமதி மாதிரிகள் பின்தள்ளப்பட்டு மோசமான புள்ளிகளை (அனுபவ) ஊடறுத்து முரண்களூடே வாழ்கின்ற வாழ்க்கைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. பெருமாள் முருகன் 'தொகுப்பிற்கு' கொண்டிருக்கும் பார்வை இது. இந்த நிலை கதைகளாக அல்லாமல் கொங்கு பிரதேச மக்களின் சமூக வாழ்க்கை எனவும் கொள்ளலாம். அவர்களின் பல்வேறு பிரச்சனைகள் பல்வேறு வடிவங்களில் பல்வேறு கோணங்களில் அலசப்பட்டிருக்கின்றன. ஒரு நல்ல தொகுப்பிற்கு நல்ல கதைகள் அல்ல அரண். மோசமான பிரச்சனைகளே செழுமையான படைப்புக்கு ஆதாரம். அந்தவகையில் காத்திரமான தொகுப்பு. இப்படியொரு தொகுப்பை வெளியிட்டு 'காவ்யா' பதிப்பகம் தன் தோளைத் தட்டிக் கொள்வது பெருமைதான். 'விலை நிர்ணயம்' (விலை ரூபாய் 200) வாசகர்களை மிரள வைக்கும் என நினைக்கிறேன்.

இவருடைய முன்னுரை குறித்து கொஞ்சம் சொல்ல வேண்டும். கதைத் தேர்வில் எப்படி இவரிடம் அரசியல் செயல்படவில்லையோ அதற்கு மாறாக முன்னுரையில் ஒரு அரசியலைக் கொண்டிருக்கிறார்.

'உலகமயமாதல்' குறித்து கவலைப்படும் முருகன், 'ஊர்ப்பற்று' குறித்து அடிமையின் சின்னம் என்கிறார். எது இவரின் முக்கியமான கவலையாக இருக்கிறது என்பதில் தெளிவு வேண்டும். இரண்டும் என்றால் உலகமயமாதல் கிராம பொருளாதாரத்தைச் சிதைத்து நாசமாக்கிக் கொண்டிருக்கிறது.

கிராமங்களை அழித்து நகர்மயமாதல், சாதியத்தை ஒழிக்க ஒரு வழியாக அம்பேத்கார் கூறினார். சாதிபற்று கிராமங்களில் வேர்கொண்டிருப்பதால் அவர் எடுத்த முடிவு. காந்தி வேறு பல காரணங்களுக்காக கிராம முன்னேற்றத்தை வலியுறுத்தினார். பெருமாள் முருகன் அமபேத்கரின் எண்ணத்தைத்தான் 'ஊர்பற்று' குறித்த கருத்தாகக் கூறியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

எழுபதுகளுக்குப் பின் எந்த கிராம சம்சாரி முன்னேறியிருக்கிறான்? அதுவும் கடந்த இருபது ஆண்டுகளில் கிராமங்களின் நிலை என்ன? மூன்று ஏக்கர் நான்கு ஏக்கர் நிலமுள்ள குறுவிவசாயிகள் பட்ட கடனுக்குமேல் கடன்பட்டு நிலங்களைச் சும்மா எப்படி போடுவது என்று மீண்டும் உழுது கடன்படுவது ஏன்? அவர்களுக்கு வேறுகதி உண்டா? வந்தவிலைக்கு நிலங்களை விற்றுவிட்டு நகரங்களில் நிதிநிறுவனங்களைக் கடைகளைத் திறக்கலாமா? விவசாய இடுபொருள்களுக்கு அரசும், தனியார் நிறுவனமும், இடைத்தரகர்களும் விலை நிர்ணயம் செய்கிறார்கள். விவசாயின் விளைபொருளுக்கு அவன் விலை நிாணயம் செய்யமுடிகிறதா? கொள்ளை லாபம் அடிப்பது யார்? காற்றை அசுத்தப்படுத்துவது நகரந்தானா? கிராமந்தானா?அவன் ஏன் இன்னும் ஆடுமாடுகள் மீதும் கோழிகள் மீதும் மண் மீதும் உயிர் வைத்திருக்கிறான். பெ.மு. சொல்வதுபோல 'சொந்த ஊருக்குச் செல்லுதல்' ஆதிக்க சாதி கருத்தியல் என்றால் யார் இன்று கிராமத்தை ஆதிக்கம் செய்கிறார்கள்? உலகமயமாதலா? சாதியா?

கர்நாடகத்தில் பருத்தி கைகழுவியதால், 150 விவசாயிகள் தூக்குப்போட்டு இறந்ததன் காரணம் என்ன? வெங்காய வீழ்ச்சியால் ஹரியானாவில் விவசாயிகள் தற்கொலை செய்தது நினைவில்லையா, கம்பம், கூடலூர் பகுதியில் காய்கறிகளின் விலை வீழ்ச்சியால் நஷ்டப்பட்டு நிலங்களை தரிசாகப் போட்டுவிட்டு கேரளாவிற்குள் கூலி வேலைக்குச் செல்லும் தமிழக விவசாயிகளின் துயரங்களுக்கு வழி என்ன? அரசின் பொருளாதாரக் கொள்கை கிராமங்களை நாசமாக்குவதில் அரசியல்வாதிகளுக்கு மகிழ்ச்சியானசெய்தி. (தமிழக சட்டமன்ற தேர்தலின் மாற்றம் இதன் உள் பிரச்சனை)

இந்த மண், விவசாயம், சூழல், கால்நடைகள் அவனை எழவிடாமல் அடிமையாக்கி இருக்கிறது என்பதுதான் உண்மை. திரைப்படத்தில் வரும் 'நாட்டாமை' அல்ல நிஜத்தில். பதினைந்தாயிரம் இருபதாயிரம் விரிவுரையாளராகச் சம்பளம் வாங்கிக்கொண்டு நகர சொகுசுகள் எப்படியும் பேசலாம்? அவர்களின் குழந்தைகளின் வாழ்வு வாழ்க்கை எங்கே? மண்ணைக் கிளரும் இந்த கிராம பற்றாளர்கள் எங்கே? பெருமாள் முருகன் தனக்குச் சாதகமான ஒற்றைப் பார்வையை கொஞ்சம் விசாலப்படுத்த வேண்டுகிறேன்.

- *சு. வேணுகோபால்*



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நேயம் : அகமும் புறமும்

○ தமிழகத்தில் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தளர்ச்சி இல்லாமல் தமிழ்ப்பணி செய்து வருகிறார். உலகக் கவிஞர் கழகம் என்றும், பன்னாட்டு தமிழ் உறவு மன்றம் என்றும் ஏற்படுத்தி உலகளவில் உள்ள தமிழ்ப் பற்றாளர்களை அவர் இணைக்கிறார். இவரளவுக்கு உலகப் பயணம் செய்து தமிழ் மக்களைச் சந்தித்தவர் வேறு எவரும் இல்லை. உலகப் பயணம் குறித்து ஏராளமாக எழுதுகிறார். உரைநடையில் எழுதுவதைக் காட்டிலும் கவிதையில் மிகுதியாக எழுதுகிறார். கலைஞரோடு இவர் நெருக்கமாக இருப்பதன் காரணமாக இவரை இன்றைய தமிழ்க் கவிஞர்கள் பொருட்படுத்துவது இல்லை என்பது வருத்தம் தருகிறது. தமிழ்தான் இவரை உணர்வெழுச்சியோடு செயல்பட வைக்கிறது.

சாகித்ய அகாதமியும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும் மார்ச் இறுதியில் ஏற்பாடு செய்திருந்த கவியரங்கு மற்றும் கருத்தரங்கிற்கு இவர் அழைக்கப்படவில்லை. தமிழ்க் கவிதையின் ஒரு நூற்றாண்டு வரலாறு சொன்னவர்கள் இவர் பெயரைக் குறிப்பிடவில்லை. இது குறித்து சினத்தோடு கேட்கவும் இவருக்கு உரிமை உண்டு. அப்படியும் இவர் கேட்டிருக்கிறார். ஏனோதானோ என்றுபதில் தந்திருக்கிறார்கள். தமிழ் யாருக்குச் சொந்தம்? புதுக்கவிஞர்களுக்கு மட்டுமா? அல்லது நிறுவனங்களுக்கு மட்டுமா?

அண்மையில் குவைத் சென்று திரும்பியவர் அந்த நாட்டுப் பெருமைகள் பற்றி சொல்வதோடு தமிழர்களின் அவல நிலைபற்றிச் சொல்கிறார். பாலை நிலங்களில் தமிழர்கள் ஒட்டகம், ஆடுகள் மேய்க்கிறார்கள். இங்குள்ளவன் தமிழில், தமிழ் மக்கள் தரும் செல்வத்தில் குளிக்கிறான். கவிதையைக் காட்டிலும் மனிதனுக்கே முதல் பெருமை உண்டு.

○ தமிழகத்தில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் முறையில் ஒரு முனிவர் போல செயல்பட்டு வருபவர் கோ. நம்மாழ்வார். தமிழகம் தவிர இந்தியாவென்றும், வெளிநாடென்றும் அழைந்து வருகிறார். இரவில் பயணம், பகலில் பண்ணைகளைப் பார்வையிடுதல், இன்னும் உயிரோடிருக்கும் மரபு முறை வேளாண்மைத் திறன்களைத் தொகுத்தல். இவரது தூண்டுதல் காரணமாகத் தமிழகத்தில் தொடர்ந்து பண்ணைகள் உருவாகின்றன. இவரோடு மற்றவர்களும் புதிய உத்திகள் கண்டுபிடிக்கின்றனர். இவை அற்புதமான உத்திகள்.

31.5.2001-ல் பொள்ளாச்சியில் தமிழகத்தில் பத்து மாவட்டங்களுக்கு மேற்பட்ட வேளாண் நிபுணர்கள் நம்மாழ்வார்


படிப்பகம்

www.padippakam.com

தலைமையில் ஒன்று கூடினர். வட்டார அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில் திட்டமிடுவது பற்றி சிலவரையறைகளை வகுத்தனர். ஒரு பத்திரிகை வெளியீட்டையும் முடிவு செய்தனர். இவர்களோடு சிலமணி நேரம் தங்கியிருந்த அளவில், என்னால் உறுதியாகச் சொல்லமுடியும். இவர்கள் ஆற்றல் மிக்கவர்கள், அற்புதங்கள் சாதிப்பர். திட்டத்தின் ஒரு பகுதியாக பெரியார் மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முறையில், மரபு முறை வேளாண் நுட்பங்கள் சேகரிக்கும் முறையில், விழிப்புணர்ச்சி பயணம் மேற்கொண்டனர்.

பொள்ளாச்சியில் இந்தச் சந்திப்பை ஏற்படுத்தியவர் பெரியவர் எஸ்.கே. குப்புசாமி அவர்கள். தொடர்ந்து கேள்விகள் எழுப்புகிறார், ஓயாமல் அழைகிறார். சாமை உணவு, சோளக்கழி, தேங்காய் சாதம், தேங்காய் பால், அதிரசம் மற்றும் பழவகைகள். இவற்றை அன்போடு வழங்கினார். கயிற்றுத் தொழிலில் ஈடுபட்ட இவர் தன் வாழ்க்கைத் தத்துவம் சொல்லுகிறார். ஊழியத்தில் ஒரு பகுதியை எனக்கு வைத்துக் கொள்கிறேன். மற்றவை எல்லாம் சமூகத்திற்குத் தருகிறேன் என்று தெளிவாகவும் உறுதியாகவும் சொல்லுகிறார். இந்த இதழின் அட்டைப் படத்தை நம்மாழ்வார் அலங்கரிக்கிறார். நாம் அவருக்கு வாழ்த்துச் சொல்வோம்.

○ மத்திய கிழக்கில் பாலத்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் சிக்கல் தீர்வதற்கு இன்னும் வழி இல்லை. பாலத்தீனியர் தமக்கான நாட்டைப் பெறுவதற்காக இஸ்ரேலியரின் குரூரமான இராணுவ தாக்குதலுக்கு எதிராக துணிச்சலோடு போராடுகின்றனர். கடந்த 6 மாதங்களில் 600 / 700 பொதுமக்கள், இளைஞர்கள், குழந்தைகள் கொல்லப்பட்டனர். அராபத் விட்டுக் கொடுக்க விரும்பினாலும், ஹமாஸ்விட்டுத் தருவதாக இல்லை. அமெரிக்காவின் நீதியை இஸ்ரேலும் ஏற்பதாக இல்லை. அரபு நாடுகள் தலையிடுவதால் சிக்கல் தீர்ந்து விடாது. இஸ்ரேலை மத்திய கிழக்கு நாடுகளுக்கு மத்தியில் தனக்குச் சாதகமாக வைத்திருப்பதன் மூலம், அமெரிக்கா தன் அரசியல் ஆதிக்கத்தைச் செயல்படுத்துகிறது.

○ ஓசாகோவில் பலமாடிக் கட்டிடத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்த்ததற்காக மிக்வே மரண தண்டனை விதிக்கப்பட்டு நச்சு ஊசி செலுத்தி கொல்லப்பட்டார். இறுதிவரை அவர் கலங்கவில்லை. நண்பர்கள் யாரையும் காட்டிக் கொடுக்கவில்லை. உலகளவில் அமெரிக்கா எதையும் செய்யமுடியும். அதேபோல அமெரிக்கர் எங்கிருந்தாலும், அமெரிக்காவின் உள்நாட்டில் எந்த இடத்திலும் அமெரிக்கர்களுக்கு பாதகமாக எதையும் செய்யமுடியும் என்ற எச்சரிக்கைக்காக இந்த வெடிகுண்டு வீச்சு. பழிதீர்க்கவில்லை நியாயம் வென்றது என்கிறார் புஷ். மரண தண்டனை வேண்டாம் என்கின்றனர் அமெரிக்கர். ஐரோப்பியா பயணம் மேற்கொள்கிறார்


படிப்பகம்

www.padippakam.com

புஷ். சியாட்டின் முடிவை ஒப்புக் கொள்ள முடியாது என்கிறார். இன்னும் ஆய்வு தேவை என்கிறார். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் புஷ்ஷின் கருத்தை ஏற்பதாக இல்லை. வடகொரியா, ஈராக் போன்ற நாடுகள் மூலம் எங்கும் அணுகுண்டுத் தாக்குதல் நிகழலாம் என்று சொல்லி ஏவுகணை பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு உலகை அழைக்கிறார். ஏமாளித்தனமாக இந்தியா பாராட்டுகிறது. பாகிஸ்தானுக்கு எதிராக அமெரிக்கா இந்தியாவோடு கூட்டு சேர்ந்து கொள்ள விரும்புகிறது. புஷ் வருகைக்கு எதிராக ஏராளமான ஆர்ப்பாட்டங்களுக்கு ஐரோப்பிய சமூகம் இடம் கொடுக்கிறது. கிளிண்டன் வருகை என்றாலே கோவையிலும் கூட எதிர்ப்பாளர்களைக் கைது செய்து காவலில் பலமாதங்கள் வைத்திருந்தனர். இந்த இந்திய ஜனநாயகம் பெருமைக்குரியது என்று நம்மவர் பேசிக் கொள்கின்றனர்.

○ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை நார்வே நடுவர் எரிச்சோல்ஹைம் - பேசினார் என்பதற்காக, சந்திரிகா அவரோடு இனி உறவு வைத்துக் கொள்ள மாட்டார். யாழ்ப்பாணம் முதலிய பகுதிகளின் மீது பொருளாதாரம் மற்றும் உணவு மருத்துவத் தடையை நீக்குவதற்கும் இல்லை. விமானத் தாக்குதலை இறுதிவரை நிறுத்தவும் முடியாது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதித்த தடையை தற்காலிகமாகவேனும் நீக்க இயலாது. எனினும் பேச்சுவார்த்தைக்கு அவ்வப்பொழுது அழைப்பு விடுக்கிறார் சந்திரிகா. தலைமை அமைச்சர் வேறு குரலில் பேசுவார். அமைச்சர் அவையில் முஸ்லீம் அமைச்சரை நீக்கிவிடலாம். மக்களைக் கொடுமைப் படுத்துவதிலும், சீரழிப்பதிலும் இராணுவத்தைப் பொருத்தவரை தயக்கம் இல்லை. கற்பழிப்பு புதைகுழி சிக்கல் விசாரிக்கப் படுவதில்லை. தமிழ் பகுதிகளில் ஆசிரியர் நியமனம் இல்லை. மாணவர் போராட்டங்கள் அவ்வப்பொழுது நடைபெறலாம். எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லாத தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவர முயற்சி செய்கிறார்கள். சந்திரிகாவுக்கு அதுவும் ஒரு வாய்ப்பாகி விடலாம். தேசம், தேசமாக இல்லை. உலகின் பார்வை மேற்கில் குவிந்திருக்கிறது. கிழக்கு உலகம் அழிந்து போகட்டும். இந்தியா தப்பித்துக் கொண்டால் சரி.

○ டிட்டோ காலத்தில் யூகோஸ்லேவியா ஒரு நாடாக இருந்தது என்பது உண்மைதான். ஒரு பத்தாண்டுகளில் நாடுகள் எவ்வளவு வேகமாக சிதறுண்டன. போர்சீனியா, குரோஷியா போன்ற நாடுகள் தனி நாடாயின. செர்பியா தான் வலுத்த நாடு. கோஸோவாவில் பல்லாண்டுகளாகக் குடியேறிய அல்பேனியர்கள் நாடு தங்களுக்குச் சொந்தம் என்றனர். செர்பியா இராணுவம் கொலைகார இராணுவமாக மாறியது. நேட்டோ நாடுகள் தலையிட்டன. போர் குண்டுகளைப் பொழிந்தன. செர்பியா அதிபர் மிலாசோவிச் மாறினார். காஸ்டனிட்சா பதவிக்கு வந்தார். மாசிடோனியாவில் அல்பேனியர்கள்



படிப்பகம்

www.padippakam.com

மொழித் துறையிலும், ஆட்சியிலும் பங்கு வேண்டும் என்று போர்க்கொடி உயர்த்தினர். அமைதி முயற்சி இதுவரை பலனளிக்கவில்லை. குடியேறியவர் என்றாலும் ஆட்சியிலும், ஆட்சிமொழிச் சிக்கலிலும் கேட்கும் பங்கைக்கூட தரத்தான் விரும்புகின்றனர். அல்பேனியர்கள் ஓய்வதாக இலலை. போர்க் குற்றங்களுக்காக மிலாசோவிச் கைது செய்யப்பட்டு தி ஹேக் நகரில் சிறைப்பட்டுள்ளார். நீதிமன்றம் தன்னை விசாரிக்க உரிமை இல்லை என்று அழுத்தம் திருத்தமாக சொல்கிறார். தமிழ் மக்களாகிய நாம் வரலாற்றின் இந்தச் சிக்கல்களிலிருந்து எல்லாம் பாடம் படித்துக் கொள்ள வேண்டும். மிலாசோவிச் ஒரு பழைய கம்யூனிஸ்டு. கொஞ்சம்கூட உறுதியில் குறைவு இல்லை.

○ கடந்த ஜூன் 30-ம் நாள் தமிழகத்தில் தொடங்கிய சிக்கல், இந்தியாவையும் தனக்குள் இழுத்துக் கொண்டு தொடர்ந்து நடைபெறுகிறது. இப்படி ஒரு அரசியல் கலவரத்தை ஜெயலலிதாவால் தான் செய்யமுடியும். ஆளுநர் செய்த குழப்பம் ஜெயலலிதாவுக்குப் பெரும் வாய்ப்பாகியது. கிராமப்புறத்து மாணவர்களுக்கு உயர்கல்வியில் 25 சதம் என அறிவித்தார். கூட்டுறவுத் துறையில் விவசாயிகள் பெற்ற கடனுக்கான வட்டியையும், தண்ட வட்டியையும் நீக்கினர். பரவாயில்லை என்று பாராட்டும்பொழுது, பரிதி இளம் வழுதி மீது கைவைத்தார். அப்புறம் பரசுராமன், அரங்கநாதன் என இன்னும் சிலர், சுதாகரனையும் விட்டுவைக்கவில்லை. ஒருவருக்கும் ஜாமீன் இல்லை. அரசு அதிகாரிகள் அங்கும் இங்கும் பெருமளவில் மாற்றப்பட்டனர். என்னதான் நல்லாட்சி என்றாலும் இப்படியா செயல்பட முடியும்? அடுத்து என்ன நேருமோ என்று பலரும் கவலைப்பட்ட நிலையில் முதல்வர் நமக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்தார். பகல் 12 மணிக்கு அவசர அவசரமாக தயாரிக்கப்பட்ட ஒரு போலிக் குற்றச்சாட்டை வைத்து நள்ளிரவில் கலைஞர் காட்டுத்தனமாக துன்புறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டார். முரசொலி மாறனும், டி.ஆர். பாலுவும் சிறைக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். எல்லாவற்றையும் மாறிமாறி தொலைக்காட்சியில் பார்த்து நாம் அதிர்ச்சியடைந்தோம்.

தி.மு.க. வினர் ஏராளமானோர் கைது. குருவாயூரிலும் அடிதடி. 356 தேவைப்படுமா என்ற சிக்கல். எச்சரிக்கை விடுத்தால் போதுமா என்ற முறையிலும் ஆய்வு. தலைமைச் செயலர் கொடுத்த அறிக்கையை ஆளுநர் அப்படியே கொடுத்தனுப்பினார். ஜெயலலிதாவின் கெடுபிடிகள் உச்சஅளவில் நடைபெற்றன. பொங்கியதுபோதும் பொறுத்துக் கொள்வதைத் தவிர வழி இல்லை என்ற நிலை.

முதலில் ஆளுநர் வெளியேற வேண்டும் டெல்லி அமைச்சர்களைக் கைது செய்ய முடியாது. முத்துக்கருப்பன் வெளியிட்ட ஒளிப் பேழைகள் சில உண்மை சொல்லுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

கலைஞர் துன்புறுத்தப்பட்டார். வசதியில்லாத சிறையில் பிச்சைக்காரனைப் போல் அமர்ந்திருந்தார். அமர்வு நீதிமன்றத்தின் கேள்விகளுக்கு அதிகாரிகளிடம் பதில் இல்லை. கலைஞருக்கு உடல் நலம் இல்லை. ஈமச்சடங்கு செய்வது குடும்பமா? அரசா? என்று முரசொலி மாறன் கேட்க முடிந்தது. அதிகாரம் ஆறுமாதம் தானே. அசுர வேகத்தில் அரக்கத்தனமாக சிலவற்றைச் செய்து முடிக்கவேண்டும் என்பது இராணியின் ஆசை. 356 - இப்பொழுதைக்கில்லை. இன்னும் சில நடவடிக்கைகளுக்கு இடம் இருக்கிறது. ஜெயலலிதா இறங்கித் தீர வேண்டும் “பேய் அரசு செய்தால்“ என்ற பாரதியின் வாக்கை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

○ தமிழ்நாட்டில் வீரமணி அவர்களைத் தவிர்த்து இயங்கிய மூன்று திராவிட இயக்கங்கள் தந்தை பெரியார் திராவிட இயக்கம் என்ற பெயரில் அண்மையில் ஓர் அமைப்பில் இணைந்துள்ளனர். கொளத்தூர் மணி - இதன் தலைவர். கு. இராமகிருட்டினன், விடுதலை இராசேந்திரன் - பொதுச் செயலர்கள். ஆனூர் ஜெகதீஷின் முதலியவர்களும் உள்ளனர். இந்துத்துவத்திற்கு எதிராக செயல்படுவது இவர்கள் நோக்கம். வீரமணிக்கு எதிராக இல்லை இந்த இயக்கம். திராவிடம் என்ற சொல்லே தமிழ் இயக்கங்களின் கூர்மையான கேள்விக்கு உள்ளாகி இருக்கிறது. திராவிடமும் தமிழியமும் இப்பொழுது எதிர் எதிர் நிலையில் நிறுத்தப்படுகின்றன. பெரியாரியத்தை தற்கால உலகச் சூழலுக்கு ஒத்தமுறையில் திராவிட இயக்கங்கள் வளர்த்தெடுக்கவில்லை. பெரியாரியத்தின் மையம் என சமதர்மத்தை கண்டறியாமல் வெறும் சாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு ஆகியவற்றில் முனைந்து செயல்படுவது இந்துத்துவத்திற்கே ஆக்கம் தரும். கடவுள், ஆன்மா, பாவங்கள், புண்ணியங்கள், மேலுலகம், நரகம் என்பனவெல்லாம் வரலாற்றுச் சூழலில் தோன்றிய கருத்தாக்கங்கள். பெரியாரியத்தை அழுத்திச் சொன்னால் புத்தரும் கூட மதமாகிவிடுவார். அம்பேத்கர் இப்படிப் பார்க்கவில்லை. கடவுள் / பக்தியை ஒதுக்கினால் தமிழ் இலக்கியத்தில் பெரும்பகுதியை இழந்துவிடுவோம்.

சடங்குகள் / புராணம் இல்லாமல் வரலாற்றில் எந்தச் சமூகமும் வாழ்ந்ததில்லை. பொருளியல் ஆதிக்கம் முதலியவை தான் மக்களிடம் துயரங்களை தோற்றுவித்து, அவர்களை கோவில்களில், புரோகிதர் இடத்தில் குவிக்கின்றன. இடது சாரி, வலது சாரி என்ற போக்குகள் மார்க்சியம் உட்பட எல்லாத் தத்துவங்களிலும் உண்டு. பார்ப்பனியத்தினுள்ளும் பாரதி முதலியவர்களை இடது சாரி போக்கில் வைத்து கணிக்க முடியும். சாதி, மதம், பார்ப்பனியம் ஆகியவற்றில் மட்டுமே முனைந்திருந்தால் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு திராவிட இயக்கமும் இருக்கும், இந்துத்துவமும் இருக்கும். வரலாற்றில் நமக்கு சமதர்மம் தேவை. மக்கள் துயரங்கள் தீர்வது தேவை. மார்க்சியத்தோடு பெரியாரும் நமக்கும் தேவை.


படிப்பகம்

www.padippakam.com

○ இந்தியாவில் தொடர்ந்து நடைபெறும் சில நிகழ்ச்சிகள் குறித்து நாம் கவனம் கொள்வது தேவைப்படுகிறது. விண்வெளி ஆய்வில் இந்தியாவின் சாதனைகளை பாராட்டுவதில் நமக்கு உற்சாகம் இல்லை, வறுமை தொடர்ந்து அதிகரிக்கிற சூழலில் இராணுவப் பெருக்கம் முதலியவற்றை எப்படி நம்மால் ஏற்கமுடியும். மணிப்பூரின் சில பகுதிகளைப் பறித்து அகண்ட நாகலாந்தை மைய அரசு உருவாக்க முனைவதில் உள்ள ஆபத்தை உணர்ந்து மணிப்பூர் மாணவர்களும், மக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கடுமையாகவும், தொடர்ந்தும் போராடுவதன் நியாயத்தை நம்மால் புரிந்து கொள்ளமுடியும். இந்தியா, பாகிஸ்தான் நல்லுறவுக்கு காஷ்மீர் சிக்கல் பெரும் தடையாக இருக்கிறது என்பதில் ஐயமில்லை. அண்மையில் ஏதாவது ஒரு வகையில் உடன்பாடு ஏற்படும் என்றால் நாம் வரவேற்கமுடியும். பாபர் மசூதி தகர்ப்பை ஒட்டி தொடர்ந்து நடைபெறும் லிபரான் ஆணைக்குழுவின் முன்னிலையில் அத்வானியின் வாக்குமூலங்கள் நமக்கு அதிர்ச்சி தருகின்றன. தாலி கட்டாமலும் ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழலாம் என்று அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை நாம வரவேற்க முடியும். குஜராத்தின் கடற்கரையிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் கடலுக்கடியில் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ள நகரம் சிந்துவெளி நாகரிகத்தின் தொடர்ச்சி என்று அறியும்பொழுது நமக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

○ புதுமைப்பித்தனை உரிமைப்படுத்திக் கொள்வது யார் என்ற முறையில் நடைபெறுகிற சர்ச்சைகள் சற்று அருவருப்பாக உள்ளன. புதுமைப்பித்தனை வைத்து வணிகம் செய்ய இவர்கள் முனைந்துள்ளனர். இலக்கியவாதிகளுக்குள்ளும் நடைபெறும் வம்பும் வழக்குகளும் இவர்கள் மீது நமக்கு மரியாதை ஏற்படுத்துவதாக இல்லை. புதுமைப்பித்தனை வைத்து நடைபெறும் இலக்கிய சர்ச்சைகளும் இத்தகையவை. கணையாழி வெளியிடும் விவாதங்களும் இதே தரத்தில் இருக்கின்றன. பாரதிக்குப் பிறகு புதுமைப்பித்தனையும், புதுமைப்பித்தனுக்குப் பிறகு சுந்தர இராமசாமியையும் நவீன தமிழ் இலக்கியத்தின் உச்சங்கள் என்று தீர்ப்பு சொல்வதன்மூலம் இடையில் உள்ள எத்தனையோ கலைஞர்களை இவர்கள் அவமானத்திற்கு உள்ளாக்குகின்றனர். முன்னதன் தொடர்ச்சி இல்லாமல் பாய்ச்சல்கள் எங்கும் நிகழ்வது இல்லை. இலக்கிய வரலாற்றில் இத்தகைய தீர்ப்புகளைத் தருபவர்களுக்குள் செயல்படும் அரசியலை நம்மால் புரிந்து கொள்ளமுடியும். வாழ்வின் அர்த்தங்களைச் செழுமைப்படுத்துகிற இலக்கியங்களை வைத்து இப்படி அதிகாரத்தை நிறுவுவது ஒரு வகையில் அநாகரிகம். சூரியனோ, சந்திரனோ, இமயமலையோ, கங்கையோ இப்படி எல்லாம் திமிர்த்தனம் கொள்வதில்லை. எளிமை, உழைப்பு, பகிர்வு, படைப்பு இவைதான் வாழ்வுக்கு அழகும் ஆற்றலும் சேர்க்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com

# மடல்களும், அறிக்கைகளும்

## "தமிழ்நேயத்தின் தமிழ்ப்பணி வாழ்க"

தமிழ்நேயம் - 2 கருத்துக் கருவூலமாய் மலர்ந்துள்ளது. மகிழ்கிறேன்.

மேதா பட்கரின் பேருரை, உலகமயமாதலின் கோரமுகங்களை வெளிப்படுத்துகிறது. நர்மதாவில் தொடங்கி நமது ஊர் எல்லைவரைப் பரவியுள்ள சூழல் அழிவுகளை மிகுந்த வேதனையோடு எடுத்துரைக்கிறார். மாற்று அரசியலின் தேவையை படுதீவிரமாய் முன்னெடுத்துச் செல்லுகிறார். உலக அரக்கர்களால் இந்தியா தீப்பற்றியெரிகிற வேளையிலும்கூட, மேடையை விட்டுக் கீழிறங்காத அரசியலாளரையும், மக்கள் நலன் மறந்த அயோக்கியர்களையும் சாடிச் சாய்க்கிறார். நீங்கள் குறிப்பிடுவது போன்று, இது கண்ணகியின் எரிமலை ஆவேசம். தீயர்களைத் தீயிலிட்டுப் பொசுக்காமல் தணியாது.

தமிழ்க்கவிதை பற்றியும், கவித்துவம் பற்றியும் விரிவாகவும், ஆழமாகவும் எழுதியுள்ளீர்கள். பிரபஞ்சத்தின் உயிரியக்கத்தையே கவிதையாகக் காண்கின்றீர்கள். ஆதிமனிதனை மறுபடியும் உயிர்ப்பித்துக் கொள்கிறபோது, நவீன மனிதன் கவிஞனாகிறான் என்கிறீர்கள். கவிதைகள் மட்டுமல்ல, கவிதை பற்றிய தேடலும் தங்களின் திறனாய்வுகளும்கூட மனிதவாழ்விற்கு அழகு சேர்க்கின்றன. நம்பிக்கையூட்டுகின்றன.

தமிழ்வானின் விடிவெள்ளி : மயிலை சீனி. வேங்கடசாமியின் தமிழ்ப்பணி நம்மை வியக்க வைக்கிறது. தமிழக வரலாற்றின் சிதைவுகளையும், புதைவுகளையும் மிகவும் அருமையாக அகழ்ந்தாய்ந்துள்ளார். வேதியப் பண்பாட்டினை ஏற்றதால் தமிழ்க்குலத்திற்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சியிலிருந்து விடுபட நமக்கு வேங்கடசாமிகள் பெரிதும் தேவைப்படுகின்றனர்.

நுண் கவிதை குறித்த தமிழ்நாடனின் கட்டுரை நவீன கவிதையின் போக்குகளை அலசுகிறது. உண்மையும், எளிமையும் கவிதையின் வடிவங்களே என்கிறது.

சித்தர்களின் கடும் முயற்சிகளை நாம் இழந்துவிடலாகாது. மேனாட்டில் இன்று கண்டறியப்படுபவை பலவும் சித்தர்களால் மிக எளிய முறையில் கண்டறியப்பட்டுள்ளதை மருத்துவர் கோபி நுட்பமாய் விளக்குகிறார். பாம்பாட்டிச் சித்தன் மனிதனின் பாரிய வடிவம். வியக்கவைக்கும் வடிவம்.

பெண் விடுதலை, தமிழ் ஆன்மா, திருப்பூர் சூழல் கெடல், மார்க்சியத்தை ஆழமாகக் கற்றல், தமிழ் இலக்கியம் குறித்த ஒரு தொடர் தேடல், நூல் அறிமுகம், தமிழி கவிதைகள் - இவை யாவுமே தமிழின மேம்பாடு, விடுதலை குறித்து நம்மை ஈர்க்கின்றன. பன்முகப் பார்வையை துறைதோறும் வலியுறுத்துகின்றன.

தமிழ்நேயம் இத்தகைய பொலிவுகளோடு வருவது மிகவும் மகிழ்ச்சியேற்படுத்துவதாயுள்ளது. நண்பர்களின் ஒத்துழைப்போடு நீங்கள் இந்நன் முயற்சியை மேன்மேலும் விரிவுபடுத்திக் கொள்ளத்தான் வேண்டும். எளிமையும், ஆழமும் தமிழ்நேயத்தின் இயல்பான நடையாக அமைந்துள்ளன. ஏராளமானோரைச் சென்றடையும் பாணியாக இதனைக் கருதுகிறேன்.


படிப்பகம்

www.padippakam.com

களப்பணிக்காகத் தாங்கள் ஏற்கெனவே கூறியிருந்தவாறு, மாணவர் தமிழ்ப் படைப்பாற்றல் போட்டிகள் நடத்துவது மிகவும் வரவேற்கத்தக்கது. இதில் கவனமாய்ச் செயல்பட்டால், தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கு வெளியிலும், தமிழார்வத்தை வளர்த்தெடுக்க முடியும்.

தமிழாசிரியர்கள் தமிழ்ப் பள்ளிகளுக்கு உதவ வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு நிறைவேறுமா என்பது கேள்விக்குறியே.

நம்மிடையே நல்ல கருத்துக்கள் உள்ளன. மக்களைச் சென்றடைவதில்தான் சிரமங்கள் உள்ளன. ஒருவர் ஒரு ரூபாய் தமிழுக்கென்று ஒதுக்கும் பழக்கத்தை உருவாக்கினால்கூட, அரும்பெரும் செயல்கள் பல செய்திட ஏதுவாகும்.

'புத்தக ஆண்டில்' நமது கவனம் சற்றுக் கூடுதலாகவே நூல்கள் பக்கம் திருப்ப முடியும். மக்களிடம் நல்ல நூற்களை எடுத்துச் செல்லக்கூடிய விதத்திலும் 'நூல் திறனாய்வுகள்' விரிவுபடுத்தப்படலாம். பேருந்துகளில் ஏறியிறங்கி மகஇக தோழர்கள் செய்துவதும் கருத்துப் புரட்சி, மக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்து வருவதும நாம் அறிந்ததே.

தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் நம்மால் தொடர்ந்து பாடுபட முடியும் என்ற நம்பிக்கையைத் தமிழ்நேயம் இடையறாது வலியுறுத்தி வருகிறது. இது கடலில் கரைக்கப்படும் பெருங்காயம் அல்ல. தமிழ் உடலுக்குத் தேவையான சரியான மருந்து.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் பற்றிய சித்தரிப்புகள் இன்னும் அதிகமாக இடம்பெற முடியும் என்று எண்ணுகிறேன்.

எவ்வகை "இசங்களுக்குள்ளும்" தன்னை குறுக்கிக் கொள்ளாமல், கட்சி சார் கருத்துகளுக்கு இடம் தராமல், கொள்கைவழிப்பட்டு, தமிழ் மக்களின் விடுதலையை மனதெங்கும் நிறைத்துக் கொண்டு, வெளிவந்து கொண்டுள்ள தமிழ்நேயம் தமிழ் மக்களின் ஆன்மாவாகவும், மனக்குரலாகவும் தொடர்ந்து ஒலித்து வருகின்றன. தங்களின் இடையறாத, சலிப்புறாத உற்சாகமான தமிழ்ப் பணியில் எனது சிறுமுயற்சிகளையும் சேர்த்துக் கொள்வதில் மகிழ்கிறேன்!

தமிழ்நேயத்தின் தமிழ்ப்பணி
தழைத்தோங்கட்டும்!
தமிழ்கூறு நல்லுலகில்
யுகப் புரட்சி நடத்தட்டும் !

*- தமிழாகரன், 25.5.2001*

# தமிழ்நேயம் 2, மே 2001 - ஒரு பார்வை

ஆசிரியர் பக்கம் :

தமிழ்நேயம் இதழ் அட்டைப் படத்தில் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, கொடுமைப்படுத்தப்பட்ட மக்களுக்காக வெடிகுண்டு வார்த்தைகளை வீசும் மேதாபட்கரின் படம், மனிதம் என்ற பெருமை சதா மார்பில் துடிக்க வைக்கின்றது. "உலகமயமாதலும் தமிழ் இலக்கியமும்" என்ற தலைப்பு வாசகனை நிதானத்துடன் இதழின் உள்ளே அழைத்துச்சென்று, வாழ்வையும், வரலாற்றையும் தக்கவைக்க புதிய நோக்கில் தமிழ் படைப்புக்களை பயிலவேண்டும், படைக்க வேண்டும் என்பதை பறைசாற்றுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

*கோரமுகத்தோடு உலகமயம் :*

வளர்ந்த நாடுகள் ஐம்பது ஆண்டுகளாகத் திட்டமிட்டு, வளர்முக நாடான இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள உலகமயமாதல், இந்திய இறையாண்மையின் சுவடுகளை அழித்தல், சுய ஆதிக்க உரிமையை இழத்தல், மனிதநேயமும் இயற்கை நேயமும் மாண்டு போதல், பசுமைப்புரட்சிக்குப் பிறகும் சரியான பகிர்மானமின்மையால் பட்டினி தொடர்தல், கவர்ச்சி விளம்பரங்களினால் நுகர்ச்சி வெறியை வளர்த்தல்; பொதுத்துறையை அழித்தல், ஊழலை வளர்த்தல், அழுகல் நாற்றமெடுக்கும் அரசியல் போக்கு அனைத்தையும் விழியின் வழியாக இதயத்தில் இரக்கி அங்கு எண்ண ஊற்றுகளைச் சுரக்க வைக்கின்றது.

*இருபத்தொன்றை தமிழ்க்கவிதை எப்படி எதிர்கொள்ளும் :*

1. வள்ளுவனையும் இளங்கோவையும் கம்பனையும் தனக்குள் செரித்து அமரத்துவம் கொண்ட தமிழன், இன்று பணமே வாழ்வு என்ற நோக்கில் தன் மரபு வேர்களை அறுத்துக்கொண்டு தமிழுக்கும் தன் வாழ்வுக்கும் எதிரியாய் நிற்கின்றான்.
2. மேலை நாடுகளில் தொழிற்சாலைகளுக்கு 12 மணிநேர உயர் அழுத்தமின்சாரமும், ஆறு சதவீதம் வட்டியில் கடனும் கிடைப்பதால் தரமானப் பொருள்களை குறைந்த விலையில் மற்ற நாடுகளுக்கு தருவதால் ஏழை நாடுகள் இனி போட்டியிடுவது வினாக்குறியாய் நிற்கின்றது.
3. நம்மையும் அறியாமல் மேம்பட்ட நாடுகளுக்கு நம் இளைஞர்கள் அறிவையும் மூளை உழைப்பையும் தாரை வார்க்கின்றனர்.
4. எல்லைக் கோடுகளுக்கு இனி அர்த்தமில்லை. இறையாண்மையும் இனி முழுமை பெறாது என்பதை இதழ் ஆசிரியர் பதிவு செய்துள்ள பாங்கு பாராட்டும் வகையில் அமைந்துள்ளது.

*தமிழ்வானின் விடிவெள்ளி - மயிலை சீனி. வேங்கடசாமி :*

இரணியன் கருத்துக்களைக் கொஞ்சமும் தடங்கலோ, தடுமாற்றமோ இல்லாமல் முழுமையாகவும் திட்டமாகவும் தருகின்றார். வளாகம் சாராத ஆய்வறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமியின் எழுத்துக்களை உள்வாங்கி இருட்டடிப்புக்களை வெளிக் கொணர்கின்றார்.

- நந்திமலை களப்பிரர் மலை!
- களப்பிரரும் முத்தரையரும் ஒருவரே !
- களப்பிரர் காலத்தில்தான் தமிழ இலக்கிய இலக்கணங்கள் - செழித்தன !
- களப்பிரர் தமிழுக்கு அனுக்கமான பழங்கன்னடரே !
- தீபாவளி மகாவீரர் வீடுபேறு எய்திய நாளே !
- அறிவு மதங்களாகிய சமண பௌத்தத்திலிருந்தே சைவ வைணவ மதங்கள் கருத்துக்களை எல்லாம் கடன் பெற்றன.

என்ற செய்திகளை எல்லாம் இளைய தலைமுறையினரை நோக்கி பட்டாசு கிடங்கில் பெட்ரோல் மழையாகப் பொழிகின்றார்.

*சித்தர் இலக்கியங்களே தமிழாய்வின் அடித்தளம் :*

தமிழாய்வு எங்கிருந்து எந்த நோக்கத்தோடு தொடங்க வேண்டும் என்ற எழுச்சியோடு கட்டுரையைத் தரும் மருத்துவர் கோபி சில இடங்களில் தொய்வடைகின்றார். எய்ட்ஸ் நோயால் உலகம் முழுவதும் இரண்டு கோடியே இருபது இலட்சம் பேர் இறந்து விட்டதாகவும், கடந்த இருபது ஆண்டுகளில் ஐந்து கோடியே எண்பது இலட்சம் பேர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் உலக சுகாதார நிறுவனம் புள்ளி விபரங்களை அள்ளித் தருகின்றது. 2005 ஆம் ஆண்டில் பத்துக் கோடிப் பேருக்கு மேல் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சத்தையும் ஊட்டுகின்ற வேலையில் எய்ட்ஸ்


படிப்பகம்

www.padippakam.com

நோய்க்கு சித்தர்கள் மருந்து கண்டறிந்து வெற்றியும் பெற்றார்கள் எனக் கூறுவது கட்டுரையின் தொய்வாகக் கருதுகின்றேன்.

***புது உலகப் பெண்கள் :***

வளர்ச்சியற்ற நாடுகளில் பெண்களின் உடம்பு, மேற்கு நாடுகளில் மூலதனமாக்கப்படுவதையும் தாய்மையின் புனிதமான பரிமாணங்கள் சின்னாபின்னமாக்கப்படுவதையும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பேணிவந்த மதநம்பிக்கைகளும் கலாச்சாரங்களும் கிழிக்கப்படுவதையும் அற்புதமான குழந்தைத்தனம் ஆயாவால் (Baby Minders) சிதைக்கப்படுவதையும் இராஜமுத்திரையாகப் பதிக்கின்றார் இராஜேஸ்வரி பாலசுப்ரம்ணியம்.

***பெண்ணியப் பார்வையில் விவிலியம் :***

விவிலியத்தில் தந்தை, மகன், தூய ஆவி என்று கூறும்போது குறைந்தது தூய ஆவியையேனும் பெண்ணின் வடிவாய் சித்திரித்திருக்கலாம். விவிலியம் எங்கும் தேடிப் பார்த்தாலும் கடவுள் ஒரு அடிமைப்பெண்ணின் சார்பாக பேசுவதை கேட்க முடியவில்லையே என்ற கருத்துக்களின் ஏக்கப் பெருமூச்சை சுதாகரின் எழுத்தில் நுகரமுடிகின்றது.

***தமிழி கவிதைகள் :***

எப்படித் தொடர்வது? இரு கவிதைகளும் சாதாரண சொற்களாக இருந்தாலும் எழிலும் புதுமையும் உயிரும் உணர்ச்சியும் ஊட்டக்கூடிய ஆற்றல்மிக்க கவிதையாகும்!

***நூல் திறனாய்வுகள் :***

தமிழாகரன் தன் திறனாய்வில் சிவசங்கரியின் நேர்மைத் தனமின்மையை ஆதாரத்துடன் காட்டுகின்றார். கட்டடங்களின் கலைநயத்தை வியப்பவர், உழைப்பாளிகளின் வியர்வையை, வேதனையை, குருதி சிந்தலை அங்கு காண மறுப்பதை கந்தக வார்த்தைகளினால் கவனத்தை ஈர்க்கின்றார்.

கூளமாதாரியை கூர்ந்து நோக்கிய பேரா.ம. நடராசன் - நாவலின் நடை, நூல்பகுப்புமுறை, உவமைநயம், தொழில் நேசிப்பு, ஆடு மேய்ப்பதில் கூட தொழில் நுட்பம் ஆகியவற்றில் எல்லாம் கவனம் செலுத்திய பெருமாள் முருகன் அட்டைப்படத்தில் கோட்டை விட்டதையும் சுட்டிச் செல்கின்றார்.

புத்தாயிரமாண்டில் பெண் எழுத்தாளர்களால் படைக்கப்பட்ட படைப்பில்கூட புதுமைப்பித்தனின் (பொன்னகரம்) எழுத்து நேர்மையில்லையே என்று மஞ்சுளாதேவி மல்லுக்கு நிற்கின்றார். வெறும் தமிழ்ப் புலவனாக நின்று இலக்கியத்தைப் பார்ப்பது பிழை. இருபதாம் நூற்றாண்டின் விடுதலை பெற்ற ஆனால் வேரறுந்து போகாத தமிழனாக நின்று பார்த்தல் இன்றியமையாதது. அதற்கு எடுத்துக்காட்டு கோவை ஞானி என்று ம.இல. தங்கப்பா தமிழ்நேயம் தொடற நல்லவழி காட்டுகின்றார்.

- ***ஜெ. இராமதாஸ், அன்னூர்***

## என் வாழ்வுப் பணி

என் தமிழ்ப்பணி பற்றிக் குறித்திருந்தீர்கள். இதிலும் என்னால் நிறைவு கொள்ள முடியவில்லை. பல தமிழ்ப் போராட்டங்கள் வெறுஞ் சடங்காகவும் - அடையாளங்களாகவும் - அலலது அரைகுறையாகவும் நின்றுபோவதால் அவற்றிலும் என்னால் முழு மூச்சுடன் ஈடுபட முடியவில்லை. நடைமுறைப் பயன் விளைக்குமளவில் நம் இயக்கங்களை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

www.padippakam.com

எடுத்துக்காட்டாக கூறினால் இன்று தமிழ் தொடக்க முதல் மேற்கல்வி வரை பயிற்றுமொழியாவதும் முழுமையான அதிகார வலிமையுடைய ஆட்சி மொழியாவதும் மிக மிக அடிப்படைச் சீர்திருத்தங்கள். இவற்றை நிறைவேற்றாத அரசே தமிழரின் முதற்பகை என்பேன். மக்களும் அவர்களை வழிநடத்துவோரும் ஒருமுகமாகச் சீறி எழுந்து, அரசு இவ்விரண்டையும் நிறைவேற்றும் வரை ஓயுதல் கூடாது. தமிழ் பயிற்றுமொழியாவதும், ஆட்சிமொழியாவதும் நம் கோரிக்கைகளாக இருந்தால் அவை நிறைவேறுமட்டும் நம் போராட்டம் தொடர வேண்டுமன்றோ? அதுதானே சரியான போராட்டமாக இருக்கும். இத்தகைய போராட்டம் நடத்துதற்குரிய அடிப்படை மனவியல் தமிழரிடம் இல்லையே; நடத்திச் செல்லும் தலைமைப் பாங்கும் நடத்துவோரிடம் இல்லையே என்பதுதான் மிக வருத்தந் தருகின்றது.

என்னைப் பொறுத்தவரை நான் உணர்வால் மிக எளியவன். ஆளுமை என்பது சிறிதும் இல்லாதவன். வாழ்வில் அடையாளமின்றிக் கரைந்து போதலே என் உண்மையான - உள்முகமான - வாழவியக்கமாக இருக்கின்றது. எதிலும் பங்கு பெறுதல் என்னால் இயலுமேயன்றி எதையும் நடத்திச் செல்லும் தலைமைப் பண்பு என்னிடம் இல்லாதிருக்கின்றது. ஆயினும், எனக்கென வேறு பணிகள் உள ஆதலால் என் இயல்போடு பொருந்திய அப்பணிகளை நோக்கியதாகவே என் இயக்கம் அமைகின்றது.

மாந்தர் வாழ்விற் பலநூறு சிக்கல்கள் உள்ளன ஒவ்வொரு சிக்கலையும் தனித்தனியாகப பார்த்துத் தனித்தனி விடை தேடுகின்றோம். இச்சிக்கல்கள் எல்லாவற்றையும் அடிவரை நோக்கிப் பார்க்கையில், அவையாவும் ஒரே சிக்கலின் பலவேறு வடிவங்களே - நிறப்பிரிகைகளே - என்று எனக்குத் தோன்றுகின்றது. தனிமாந்தனோ, ஒரு குடும்பமோ, ஒரு குமுகாயமோ, இனமோ, ஒரு நாடோ - எவராக, எதுவாக இருந்தாலும் சரி, - இவர்கள் அல்லது இவை - தன்னலத்தினால் ஒழுங்கை மீறுகின்றனர் அல்லது மீதுகின்றன. சாதிச் சிக்கலாயினும் மதவெறுப்பாயினும், இன நிறப்பகை ஆயினும், நாடுகளிடையே போட்டிகள் ஆயினும் எல்லாரிடையும் மோதல் ஏற்படக் காரணம், தன்னலம், தன்னலம், தன்னலமேயன்றோ? தன்னலத்தினால் ஒழுங்கு மீறப்படுகின்றது. பிறர்க்குத் தீங்கு விளைக்கப்படுகின்றது. மாந்தன் தன்னலமுடையவனாக இருக்கும் வரை, அவனிடமிருந்தும் அவனால் உருவாக்கப்படும் அமைப்புகளிடமிருந்தும் ஒழுங்கின்மையை அல்லது தீங்கை எப்படி அகற்ற முடியும்?

"மாந்தன் தன்னலமுடையவனாகத்தான் இருப்பான் அது அவன் பிறவியியல்பு... தன்னலத்தை முற்றும் ஒழிக்க முடியாது" என்போமானால், சரி, அப்படியே ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் தீமைகளையும் முற்றும் ஒழிக்க முடியாதன்றோ? இப்படி நாம் இருந்து விடுவதில்லையே.

குமுகாயத்தில ஒழுங்கு நிலவ விரும்புகிறோம். ஏற்றத்தாழ்வற்ற, சுரண்டலற்ற மக்களமைப்பை உருவாக்க முயல்கிறோம். சாதியால் மதத்தால் அடித்துக் கொள்ளாமல் மாந்தர் இணக்கமுடன் இருக்க விழைகின்றோம். எல்லாம் நல்லனவாக இருக்கவும் நடக்கவும் விரும்புகின்றோம். தன்னலம் மாந்த இயல்பில் ஊடுருவி இருக்கும் வரை இவை எவற்றையும் உருவாக்குதல் இயலாது என்பதை மட்டும் ஏன் உணர மறுக்கின்றோம்? இப்படியெல்லாம் எண்ணிப் பார்க்கின்றேன்.

மற்றும், பல்வேறு அமைப்புகளையும், தொண்டர்களையும் அவர்களின் இயக்கங்களையும் பார்க்கின்றேன். எடுத்துக்காட்டாக நம்


படிப்பகம்

www.padippakam.com

தமிழுணர்வாளர்களையும் அவர்களின் தமிழ்ப்பணிகளையும் பார்ப்போம். மாந்தர் என்ற நிலையில் அவர்களின் கோணல் மாணல்கள், விருப்பு வெறுப்புகள் - மாந்தக் குறைபாடுகள் அவர்களின் பணிகளில் எதிரொலிக்கக் காண்கின்றோம். வழி நடத்துவோர் அவர்கட்குத் துணைநிற்போர் ஆகியோரின் சொந்தக் குறைகள் கோணல் மாணல்களால் அவர்கள் மேற்கொள்ளும் பணிகள் தரம் குறைந்து தாழ்நது போகின்றன; இல்லையா?

ஒருவன் எக்கொள்கைக்காகவும் உழைக்கும் எவ்வகைத் தொண்டனாயினும் - மொழிப்போராளியாயினும், சாதி எதிர்ப்பாளனாயினும், மத எதிர்ப்பாளனாயினும், பொதுவுடைமை வாணனாயினும், இன விடுதலைக்கு உழைப்போன் ஆயினும், அவன்பால் மாந்தத் தன்மை தன்னலமின்மை எந்த அளவு உயர்ந்து நிற்கின்றதோ அந்த அளவு அவன் தொண்டு உயர்வதும், அவன் மாந்தத் தன்மையில் தாழ்ந்து தன்னலப் போக்கினனாக இருப்பின் அந்த அளவு அவன் தொண்டு தாழ்வதும் நாம் அன்றாடம் காணும் உண்மைகள் அல்லவோ?

எனவே எல்லாத் திருத்தங்கட்கும் அடிப்படை மாந்தனின் உள்ளத் திருத்தமே என்பதை எங்ஙனம் மறுக்கவியலும்? மாந்தனின் உள்ளத் திருத்தத்துக்குப் பாடுபட்டால், மாந்த இயல்பின் கோணல் மாணல்களினின்று - தன்னலப் போக்கினின்று அவனை விடுவித்தால், பிற எல்லாக் குறைகளிலிருந்தும் அவனை விடுவிக்க முடியுமே.

இவ்வாறெல்லாம் எண்ணுகின்றேன். எனவே தான் மாந்தனின் புறவிடுதலைக்குப் பாடுபடுவேன். ஒரு புறம் அவரவர் தங்கள் பணியைச் செய்யட்டும் - ஆனால், என்னைப் பொறுத்தவரை மாந்தனின் அகவிடுதலைக்காகப் பாடுபடுவது உடனடிப் பயன் விளைக்காவிடினும் அடிப்படைத் திருத்தத்தை உண்டாக்குமே. அத்துறையில் நான் ஏன் ஈடுபடுதல் கூடாது என்று எண்ணுகின்றேன்.

எனவேதான் இன்று என் எழுத்துக்கள் பெரும்பாலும் மாந்தனின் அகவிடுதலை பற்றியும், வாழ்வியல் ஒழுங்கு பற்றியும், தன்னலமற்றிருப்பது அல்லது அன்புடன் இருப்பது பற்றியும் அமைகின்றன.

இவற்றை நடைமுறைக்குப் பொருந்தாத மீமிசை மெய்யியல் என்றோ, சமயச் சார்பான எண்ணங்கள் என்றோ ஒதுக்கிவிட முடியாது. Pure Science of Living தூய வாழ்க்கை அறிவியல் ஆகவே என் எண்ணங்களைப் பார்க்கின்றேன். ஏனெனில் நான் வற்புறுத்துவது ஒழுங்கு ஒன்றையே. இன்றைய உலகம் ஒழுங்கு மீறலில் தலைதெறிக்க ஓடுகின்றது. சாதி, மத வெறிகள், மொழிப் பகைமைகள் இன நிறப் பிளவுகள். பொருளியல் ஏற்றத்தாழ்வுகள், பேரினச் செருக்குகள் யாவும் ஒழுங்கு மீறலின் பல்வேறு வடிவங்கள் அன்றி வேறு என்ன? ஒழுங்கு மீறலைத் தவிர்த்து ஒழுங்கில் கால்கொண்டாலன்றி இத்தீமைகளை எங்ஙனம் அகற்ற முடியும்?

தனித்தனித் துறைகளில் துண்டுதுண்டாக ஒழுங்கை வற்புறுத்துவோர், மொத்த ஒழுங்கை, அல்லது அடிப்படை ஒழுங்குணர்வை வற்புறுத்தும் என்னைக் குறைகூற முடியாது. தனித்தனிச் சிக்கல்கட்குத் தனித்தனித் தீர்வு காண முயன்று இதுவரை முழுவெற்றி காணமுடியவில்லை. சாண் ஏறினால் முழம் வழுக்குகின்றது. எல்லாச் சிக்கல்கட்கும் ஒரேவிடை ஒழுங்கு அல்லது தன்னலமின்மை அல்லது அன்பு என்று நான் கூறுகிறேன். இதை ஏன் முயன்று பார்க்கக் கூடாது? இந்த வகையில் என் எண்ணங்கள் செல்வதாலும் தமிழ்ப்பணி என்ற அளவில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முடியவில்லை.

www.padippakam.com

இவ்வகையில் நான் செய்ய விரும்புபவை இரண்டு. அவற்றுள் ஒன்று என் எழுத்து. அத்னை நான் செய்து வருகின்றேன். மற்றொன்று நேருக்கு நேரான அணுகுமுறை வாயிலாகக் குழந்தைகட்கு நான் விரும்பும் கல்வியையும் வாழ்க்கைப் பயிற்சியையும் அளித்தல். இதற்கான களத்தினை அமைக்கத்தான் சரியான வழி எனக்குத் தென்படவில்லை. வீட்டிலே வாழ்வரங்கம் என ஒன்று தொடங்கி, விடுமுறை நாட்களில் பள்ளிச் சிறுவர் சிறுமியரை அழைத்தேன். பத்துப்பேர் அளவில் நான்கைந்து வாரங்கள் வந்தனர். பின்பு சிறிதுசிறிதாகக் கூட்டம் தேய்ந்தது. காரணம் பள்ளியின் வேலைச் சுமை விடுமுறை நாட்களையும் பிடித்து இழுத்து கொண்டமையே. தற்பொழுது இங்கொரு தமிழ்ப்பள்ளி தொடங்கியிருக்கின்றோம். முன்மழலை, பின்மழலை, முதல் இரண்டாம் வகுப்புகள். மொத்தமே பிள்ளைகளின் எண்ணிக்கை முப்பதுக்கு உள்தான். சுற்றியுள்ள ஆங்கிலப் பள்ளிகளின் கவர்ச்சியைப் பெற்றோர்களால் வெல்ல முடியவில்லை. இப்பள்ளி நன்கு நடந்து, பிள்ளைகள் மூன்றாம் வகுப்பு வருவராயின் அவர்கட்கு வழக்கமான கல்வியோடு என் வாழ்வியற் கல்வியையும் கற்றுக் கொடுக்கலாம் என்றெண்ணியுள்ளேன்.

நிலையான, வலுவான களம் அமைந்தாற் போதும் நல்ல முறையில் நான் விரும்பும் கல்வியைச் சுவையாகவும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், ஏட்டுக் கல்வியாக இல்லாமல் வாழ்க்கைப் பயிற்சியாக ஊட்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. களத்தை அமைப்பதுதான் என் அளவில் கடிய செயலாக இருக்கின்றது.

- *ம.இலெ. தங்கப்பா,* 25.10.2000

## தமிழக வரலாற்றில் மன்னர்
## தமிழ் இயக்கத்தினருக்கு ஒரு வேண்டுகோள்

தமிழியம், தமிழ் தேசியம் என்பது தமிழ், தமிழர் மற்றும் தமிழ் நாட்டை முன்னிறுத்தி இங்கு இவை முதன்மைபெற வேண்டும் எனும் குறிக்கோளையும் அதற்கான கோட்பாடுகளையும் செயல் திட்டங்களையும் சொல்லுவது ஆகும். இதன் முக்கிய அம்சங்கள்

1. தமிழ் நாட்டின் வரலாற்றை தமிழர் வரலாறாகக் கூறுவது.
2. தமிழர் என்பதற்கான இலக்கணத்தை சரியாக வரையறுத்தல்
3. தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழ்நாட்டுக்கும் உழைத்த தமிழ்க்குடிகளை சரியாக அடையாளப்படுத்துதல்.
4. தமிழர், தமிழரல்லாதார், தமிழ்ப் பகைவர் என்பதில் தெளிவு பெறுவதால்.
5. தமிழின் பெருமை, தமிழரின் பெருமை, தமிழ்நாட்டின் பெருமைகளை முன்னிறுத்துதல்.
6. தமிழ்ப் பகைவர்களை அடையாளம் காட்டி அகற்றுதல்.
7. தமிழர்களின் திறனை, ஆற்றலை, அறிவை, தாளாண்மையை, ஊக்கத்தை நினைவூட்டி அவைகள் அனைத்தும் தமிழரின் முன்னேற்றத்திற்கு பயன்படச் செய்தல்.
8. தமிழ்நாட்டில் தமிழின் ஆதிக்கமும், தமிழரின் ஆதிக்கமும் ஏற்பட வகை செய்தல்.
9. அனைத்துத் தமிழ்க் குடிகளும் சமம் என்கிற நிலையை ஏற்படுத்தி தமிழரின் ஒற்றுமைக்கும் தமிழ் இன எழுச்சிக்கும் வகை செய்தல் முதலியன ஆகும்.


படிப்பகம்

www.padippakam.com

தமிழரின் வரலாற்றில் ஏற்பட்ட இரண்டு பெரும் வீழ்ச்சிகளையும் அதனால் தமிழர்க்கு ஏற்பட்ட இடையூறுகளையும் நினைவில் கொள்ள வேண்டும். முதல் வீழ்ச்சி வேள்விக்குடிச் செப்பேடு கூறுகின்ற கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வீழ்ச்சி. இதில் களப்பிரர் என்னும் வடுகர் தமிழ் வேந்தர் ஆட்சியை வீழ்த்தி முன்னூறு ஆண்டுக்காலம் தமிழ்நாட்டை ஆண்டது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கடுங்கோன் மள்ளர் என்னும் பாண்டியன் தோன்றி களப்பிரர் என்னும் கலியரசனை வீழ்த்தி மீண்டும் தமிழராட்சியை நிறுவியது.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய இரண்டாவது தமிழரின் வீழ்ச்சியில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகம் முழுவதும் வடுகரின் ஆட்சியின் கீழ் வந்தது ஆகும். இந்த இரண்டாம் வீழ்ச்சியிலிருந்து 500 ஆண்டுகளுக்குப் பிறகும் தமிழர் எழுச்சி பெற்று தமிழ்நாட்டின் ஆட்சியை, ஆதிக்கத்தைப் பெறவில்லை. இந்த இரண்டாவது தமிழரின் வீழ்ச்சியில்தான் அருந்திறல் வீரர்க்கும் பெருந்திறல் உழவர்க்கும் வருந்தகைத்தாகும் மள்ளர் எனும் பெயர் என்று திவகரனாரும் செருமலை வீரருந் திண்ணியோரும் மருதநில மக்களும் மள்ளரென்ப என்று பிங்கலந்தையாரும் இலக்கணப்படுத்தும் தமிழ் மூவேந்தர் மரபினரும் மருதநிலத் தலைமக்களுமான மள்ளர் எனும் தேவேந்திர குல வேளாளர் பள்ளர் எனப்பெயர் மாற்றப் பெற்றனர். தமிழ் அரசர்களின் வரலாறுகளையும் அடையாளங்களையும் அழிக்க வேண்டும் என்ற வடுக ஆட்சியாளர்களின் சூழ்ச்சியால் தமிழர் வீழ்ச்சியுற்றனர். சென்ற நூற்றாண்டில் பிறமொழி ஆட்சியாளரின் சூழ்ச்சிக்குப் பலியான தமிழ் அறிஞர்களும் வரலாற்று அறிஞர்களும் தமிழ் மூவேந்தர் மரபினர் பூண்டோடு அழிந்து விட்டனா என்ற கதையைக் கட்டினர். மள்ளர், குடுமி (குடும்பன்), தெய்வேந்திரர் என்ற சொற்களையே இருட்டடிப்புச் செய்தனர்.

இகன் மதிற் குடுமி (குடும்பன்) கொண்ட மண்ணுமங்கலம் என்று தொல்காப்பியம் (புறத்திணையியல், 68) மண்ணு மங்கலம் என்ற துறைக்கும், நெடுமதில் கொண்டு நிலமிசையோர் ஏத்தக் குடுமி (குடும்பனை) களைந்தான் எங்கோ என்று புறப்பொருள் வெண்பாமாலை குடுமி களைந்தபுகழ் சாற்றுநிலை என்ற துறைக்கும் இலக்கணம் கூறும். தகைமாண் குடுமி (புறம் 6:11), விறன்மாண் குடுமி (புறம் 12:3), குடுமிக் கோமான் (புறம் 64:6) என்று பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் குடும்பன் என்று கூறும். மருதநிலத் தலைமகனான தொல்காப்பிய வேந்தனும் சேர வேந்தர், சோழ வேந்தர் மற்றும் பாண்டிய வேந்தர்களும் மள்ளர் குலத்தவர் என்று தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. மள்ளனார் என்ற பெயர் கொண்ட சங்கப் புலவர்கள் பலர் இருப்பதும், கம்பன் முதற்கொண்டு பள்ளுநூல் ஆசிரியர்கள் பலரும் மள்ளர் குலம், மள்ளர் இனம் பற்றிப் பேசுவதையும் வரலாற்று ஆய்வாளர்கள் கணக்கில் கொள்ள வேண்டும். குடும்பன், பண்ணாடி, தேவேந்திர குலத்தார் என்பது அரசின் பட்டியல் சாதிகளில் உள்ளன.

கல்வெட்டுகளில் 2000 ஆண்டு பழமையான தமிழி எழுத்தில் எழுதப்பட்ட திருப்பரங்குன்றம் கல்வெட்டு குடும்பிகன் போலாலயன் பற்றியும் கேரள மாநிலம் எடக்கல் குகைக் கல்வெட்டு சேர மன்னன் விஷ்ணுவர்மனின் குடும்பிய குலம் பற்றியும் கூறுகின்றன. பல நூறு கல்வெட்டுகள் மல்லர் குலம் பற்றியும் மல்ல அதிகாரிகள் பற்றியும் மலலி வளாகம், மல்லி நந்தவனம், மல்லசதுர்வேதி மங்கலங்கள் பற்றியும் மல்ல வாய்க்கால்கள் பற்றியும் தேவேந்திர வல்லப சதுர்வேதி மங்கலங்கள் பற்றியும், மல்லர் ஊர்கள் பற்றியும் கூறுகின்றன. தென்காசிக் கல்வெட்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் கல்வெட்டு, பழனிச் செப்புப் பட்டயம், சிவகங்கை


படிப்பகம்

www.padippakam.com

குடும்பர்கள் செப்பேடு, வையாபுரிப் பள்ளு முதலியன குடும்பன், மள்ளர் எனும் தேவேந்திர வம்சததார் நெல், கரும்பு, வாழை வித்துக்களை பூமிக்குக் கொண்டு வந்து பயிரிட்டு வேளாண்மை செய்து நாட்டு மக்களின் உணவுப் பஞ்சத்தைப் போக்கினர், நெல் நாகரிகத்தைத் தோற்றுவித்தனர் என்று கூறுகின்றன.

இரண்டாவது வீழ்ச்சிக்குப் பிறகு பிறமொழி வேற்றுநாட்டு வடுகர்களை தமிழ் நாட்டின் ஆட்சி பீடத்திலிருந்து விரட்ட தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பவர்கள் மள்ளர்கள் ஆகும். இவர்களது போராட்டங்கள் பாண்டியர் கலகங்கள், பள்ளர் கலகங்கள் என்று அடக்கப்பட்டு வந்துள்ளன. மள்ளர், மல்லர், குடும்பர், குடுமி எனும் தேவேந்திர குல வேளாளர்களின் வரலாறு மற்றும் பண்பாடுகள் பற்றி இருபதுக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களும் நூற்றுக்கும் மேற்பட்ட மள்ளர் மலர் இதழ் கட்டுரைகளும் வந்துள்ளன. பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் துணை வேந்தர்களும் கல்வெட்டாய்வாளர்களும் நாட்டுப்புறவியல் அறிஞர்களும் இவாகளின் வரலாறுகளை ஏற்றுப் பேசியும் எழுதியும் உள்ளனர்.

தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், நாட்டுப்புற வழக்காறுகள், கதைப்பாடல்கள் இம்மள்ளர் எனும் தேவேந்திர குல வேளாளர்களை ஊர், பேரூர், நகரம், நாடுகளைத் தோற்றுவித்து ஆட்சி முறையை முதன்முதலில் ஏற்படுத்தியவர்கள் என்றும் மருதநிலத் தலைமக்களாக நெல் நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் என்றும் மன்னர்களாக, அரசர்களாக, வேந்தர்களாக வேளிர்களாக, சேர, சோழ, பாண்டியர்களாக, படைத்தலைவர்களாக, படை மறவர்களாகத் தமிழ் மக்களை ஆண்டவர்கள், பகைவர்களிடமிருந்து பாதுகாத்தவர்கள் என்றும் காடு கொன்று நாடாக்கி குளம் வெட்டி ஆற்று நீரை வாய்க்கால்களில் பாய்ச்சி நீராணிக்கர்களாக, வாரியர்களாக, வாய்க்காரார்களாக நீரைக் கட்டுப்படுத்தி வேளாண்மைக்குப் பயன்படுத்தி உழவர்களாக, வேளாளர்களாக நாட்டு மக்களுக்கு உணவளித்துச் செழிப்பாக்கியவர்கள் என்றும் புலவர்களாக, அறிஞர்களாக, ஆசான்களாக நாட்டு மக்களுக்கு தமிழையும் கல்வியையும் நல்ல பண்பாடுகளையும் கற்றுத் தந்தவர்கள் என்றும் அகத்தியர்களாக சித்தர்களாக நாட்டு மக்களின் உடல் நோய், உள்ள நோய் தீர்ந்தவர்கள் என்றும் குடும்பனர்களாக, மூப்பனார்களாக, பண்ணாடிளாக, அதிகாரிகளாக, நாட்டாமைகளாக, ஊரன்களாக, கிழவர்களாக, பேரூர் நகர, நாட்டு உள்ளாட்சி நிர்வாகங்களை நடத்தி வந்தவர்கள் என்றும் கடவுளர்களாக சிவனாக, திருமாலாக, முருகனாக, விநாயகனாக பார்வதியாக, காளியாக, தேவேந்திரராக அனைவரும் வழிபடும் இறைவர்களாகப் போற்றி வணங்கப்பட்டார்கள் என்றும் கூறுகின்றன.

***இத்தனை பெருமைகளும் சிறப்புகளும் மிக்க மூத்த தமிழ்க் குடியாகிய மள்ளர் எனும் தேவேந்திரர்களை முன்னிறுத்தாமல் தமிழியம், தமிழ் தேசியம் பேசுவோர் தமது இயக்கங்களை மேல் எடுத்துச் செல்ல இயலாது.*** பார்ப்பனர் எதிர்ப்பு, சாதி மத எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு என்பனவற்றைத் தமது கொள்கைகளாக வைத்துக் கொண்டு தமிழ்க்குடிமகனின் வரலாறுகளையும், பண்பாடுகளையும், படிப்பதை, ஆராய்வதை, சாதியம் என்று கூறித் தவிர்க்கின்றனர். இந்த வரலாறுகளையும் பண்பாடுகளையும் படித்துத் தமிழ்க் குடிகளின் பெருமைகளையும் சிறப்புகளையும் எடுத்துக் கூறும் அறிவைப் பெறுவதில்லை. மாறாகத் தமிழர்களை தாழ்த்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், உயர்ந்தவர் என்றுகூறி பார்ப்பனரின் நால்வகைக் கோட்பாட்டை புதிய விதத்தில் செயல்படுத்துகின்றனர். தமிழ் முதுகுடியாகிய மள்ளர் எனும் தேவேந்திரரின் அடையாளத்தை அடியோடு அழித்து அவர்களை அநாதையாக்கி தமிழ் தேசியத்தை ஏற்படுத்த முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

இன்று தமிழகத்தில் தமிழியத்தையும், தமிழ் தேசியத்தையும் பேசும் திருவாளர்கள் நெடுமாறன், மணியரசன், சுப.வீ. தியாகு மற்றும் தமிழ்க்குடிகளின் தலைவர்கள் தமிழகத்தின் அனைத்துப பகுதிகளிலும் வாழ்ந்தவரும், தற்போது உள்ள 29 மாவட்டங்களில் 24 மாவட்டங்களில் பரவலாக வாழும் மூத்த தமிழ்குடியும் மூவேந்தர் மரபினருமான மள்ளர் எனும் தேவேந்திரரையும் மற்ற தமிழ்க் குடிகளையும் முன்னிறுத்தாமல், வடுகப் பகைவர்களையும் தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழியத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதை உணர வேண்டும். தமிழியம், தமிழ் தேசியத்தின் ஆதரவாளர் (குடிகள்) பகைவர் (குடிகள்) யார் என்று குறிப்பிட்டு அடையாளப்படுத்த வேண்டும்.

தமிழ்க் குடிகளில் இன்று வன்னியர்கள் டாக்டர் இராமதாசு அவர்கள் தலைமையில் ஒன்று சேர்ந்து வலுவாக உள்ளார்கள். மற்ற தமிழ்க்குடிகளும் தங்களுக்குள் அரசியல் ரீதியாக ஒற்றுமையடைய முயன்று வருகின்றனர். திராவிட அரசியல் தமிழர்களுக்கு எதிரானது என்பதை உணர்ந்து வருகின்றனர். இந்தக் காலகட்டத்தில் தமிழ் இயக்கவாதிகள் தமிழ்க் குடிகளின் தமிழிய அரசியல் தலைவர்களை ஒன்று கூட்டி தமிழியம், தமிழ் தேசியம் பற்றிப் பேசி விவாதித்துத் தெளிவு பெறலாம். ஒத்த கருத்துடையவர்களை ஒரு கூட்டமைப்பாக அமைத்து அரசியல் ரீதியான விழிப்புணர்வை, ஒருங்கிணைந்த அமைப்பை ஏற்படுத்தலாம். குறைகள் இல்லாதவர்கள் இல்லை. குறைகளை மட்டுமே சுட்டிக்காட்டி அவர் மோசம், இவர் மோசம் என்று பேசிக் கொண்டு சும்மாயிருப்பதில் பயன் இல்லை.

22.6.2001 - *குருசாமி சித்தர்*

தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றம், 10/2 நால்வர் நகர்,
பாரதியார் பல்கலைக் கழக அஞ்சல், கோயமுத்தூர் - 641 046.

குறிப்பு :

மள்ளர்கள் எனப்படுவோர் தமிழக வரலாற்றில் மூத்தத் தமிழ்க்குடிகள் என்ற முறையில் மரியாதைக்குரிய குருசாமி சித்தர் அவர்கள் தொடர்ந்து இயங்கி வருகிறார். மள்ளர் சமூகத் தமிழ்ச் சமுதாயத்தில் தனக்குரிய தகுதியையும், மேன்மையையும் பெற வேண்டும் என்பதற்காகக் கடுமையாக உழைத்து வருகிறார். இவரது நோக்கத்தையும், செயல் ஊக்கத்தையும் நாம் பெரிதும் மதிக்கிறோம். மூவேந்தர்கள் முதலிய பலரையும் மள்ளர்கள் தான் என்று, இவர் மெய்ப்பிக்க விரும்புகிறார். இடைக்காலத்தில் தெலுங்கினத்தார் படையெடுப்பின் மூலம் தமிழகம் பெற்ற தாழ்வை இவர் பலபடியாக விரித்துரைக்கிறார். ஓர் இனம் வரலாற்றில் தன்னை முன்னுக்கு கொண்டுவரும் முறையில், வரலாற்றாய்வில் ஈடுபடுவதையும், வரலாற்றை மறுவார்ப்பு செய்வதிலும் ஈடுபடும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள இயலும். சித்தர் அவர்களின் ஆய்வு முடிவுகளில் கருத்து வேறுபாடுகளுக்கு இடம் உண்டு எனினும் இத்தகைய ஆய்வுகளை நம்மால் வரவேற்க முடியும். தமிழ்இனம் என்ற உணர்வோடு இவர்முன் வைக்கும் வேண்டுகோள் குறித்து தமிழ் இயக்க ஆர்வலர்கள் தம் சிந்தனையைச் செலுத்துவது நல்லது. தமிழ்க் குடிகள் சாதி என்ற உணர்வை விடுத்து தமிழர்கள் என்ற ஒன்றுபடுவது காலத்தின் கட்டாயம்.

- *ஞானி*



படிப்பகம்

www.padippakam.com

## தமிழ்த் தேசியர் கவனத்திற்கு ...

தமிழ்த்தேசிய இயக்கங்கள் தங்களுக்குள் பேசி ஒரு தமிழ்த்தேசிய ஆதரவாளர் கூட்டமைப்பை உடனடியாக உருவாக்க வேண்டும். காவிரி, பெரியாறு, தமிழ்க்கல்வி, தமிழ் மீனவர்கள் பிரச்சினைகளுக்கு ஒரு ஒருங்கிணைந்த போராட்டத்தை நடத்தத் தூண்டுகோலாக அமைய வேண்டும்.

கர்நாடகாவில் மஞ்சள், சிவப்பு நிறக் கொடியினை தங்கள் கன்னட இன உணர்வுக்கான நிறமாக வெளிப்படுத்துகின்றனர். அரசுப் பேருந்துகள், உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள், கன்னட உணர்வாளர்களின் வீடுகள், கடைகள் எங்கும் அந்தக் கொடியும், நிறமுமே தென்படும். கர்நாடக அரசு பச்சை நிறக் கொடியில் கர்நாடகாவின் வரைபடத்தோடு கூடிய ஒரு கொடியை உருவாக்கி அதனை அனைத்து விழாக்களிலும் பயன்படுத்தி வருகிறது. இது அரசாங்கத்துக்கானது. அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாபெரும் பரம்பரை எனப் பெருமை பேசிக் கொள்ளும் நம் தமிழகத்தில் நமக்கான அடையாளக் கொடி உண்டா? நிறம் உண்டா? தமிழ்நாடு அரசுக்கென்று தமிழ்க்கொடி உண்டா? இதுபற்றி எப்போதாவது நாம் பேசியிருக்கிறோமா? அல்லது அதை உருவாக்க முயற்சி எடுத்திருக்கிறோமா? தமிழறிஞர்களும், ஆர்வலர்களும் ஒன்றுகூடி தமிழுக்கொரு புதிய நிறத்தை உருவாக்க வேண்டும். பிறகு தமிழ்நாட்டு அரசுக்கென்று தனிக் கொடியை (அ) சின்னத்தை உருவாக்க வேண்டும். அதனை அரசு ஏற்று நடைமுறைபடுத்த வற்புறுத்த வேண்டும். இதனைத் தமிழ்த் தேசிய ஆர்வலர் கூட்டமைப்பின் முதற் கடமையாகக் கொண்டு செயல்பட வேண்டும். நிச்சயம் இதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

தமிழுக்கெதிரானவர்கள் சற்று பலத்தோடுதான் இருக்கிறார்கள். எனவே அதை எதிர்கொள்ள தயாராக வேண்டும். நிச்சயம் நம்மால் ஒன்றுபட முடியும் என்ற நமபிக்கை கொண்ட சிறு அமைப்புகள் தமிழகம் தழுவிய பெரு அமைப்பாக மாற்றம் பெற வேண்டும். எல்லாப் பொருத்தங்களும், இராசி நிலைகளும் சரியாக இருந்தால் மட்டுமே திருமணம் என்றால் எத்தனை மனங்கள் இணைய முடியும். மனப்பொருத்தமும், விட்டுத்தரும் இயல்பும் இருந்தால் அதுவே வளமான வாழ்க்கைக்கு கட்டியங் கூறும். இதற்கான முன் முயற்சியை தமிழறிஞர்கள் மேற்கொள்வார்களா?

பலநூறு அமைப்புகள் இருப்பினும் பலமான ஒரு அமைப்பு வேண்டாவா? பல ஊர்களிலும் தமிழ் இளைஞர்களிடையே இந்த எண்ணம் மேலோங்கி வருகிறது. இருக்கிறது. நான் சந்திக்க முடிந்த பல்வேறு அமைப்பிலுள்ளவர்கள் கூட இது குறித்து பேசுகிறார்கள். அப்படி ஒரு கூட்டமைப்பு உருவாகும் பட்சத்தில் இதுவரை எந்தவொரு அமைப்பிலும் இல்லாமல், செயல்படாமல் இருப்பவர்கள் கூட தங்களை உறுப்பினர்களாய் பதிவு செய்து கொள்வார்கள்.

தமிழகச் சூழல் வேறு. அதை நம் எழுச்சிக்கு உதாரணப்படுத்திக் கொள்ளலாமே தவிர அதையே நம்பியிருக்கத் தேவையில்லை. அங்கே முடிந்தால் இங்கே தொடங்கும் என்பதெல்லாம் வேண்டாத பேச்சு. நம் சூழலை நம் மக்களுக்குப் புரிய வைத்து அவர்களோடு இணைந்து போராடுவதுதான் நமக்கு சரியாக இருக்க முடியும். தமிழ்த்தேசியம் என்பது மொழி மட்டுமல்ல. கல்வி, பொருளாதாரம், கலை, அறிவியல், பண்பாடு, வேளாண்மை, சுற்றுச்சூழல் எனப் பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியது. இவையெல்லாம் பற்றி நாம் பேசியாக வேண்டும்.

இந்திய அரசியல் நடைமுறையும், தமிழ்த் தேசியக் கருத்தும் புரிந்தும், புரிபடாமலும் இருக்கிறது. தமிழ்த்தேசியம் தனது அகச் சூழலையும், புறச்சூழலையும் தெளிவாக வெளிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

தேசம், தேசிய இனம் என்பதும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதும் முதலாளியத்திலிருந்து புறப்பட்டவை எனினும், அவைகளை நாம்



படிப்பகம்

www.padippakam.com

உழைக்கும் வர்க்கத்தின் விடுதலைக் குரலாக மறுபதிப்பு செய்ய முடியும். தமிழ்த்தேசியம் என்பது ஒடுக்கப்படும் தமிழினத்தின் விடுதலைக் குரல். எனவே, தமிழினத்தின் மீது நம்பிக்கை கொண்டு தொலைநோக்குப் பார்வையுடன், சிந்தித்துச் செயல்படுவோமானால் நம்மால் நிச்சயம் சாதிக்க முடியும். தமிழினத்தை மீட்சியடையச் செய்ய முடியும்.. சிந்திப்பார்களா? செயல்படுவார்களா? நம் தமிழ்த் தலைவர்களும் அறிஞர்களும்? இதைத் தனிமனிதக் கருத்தாக மட்டுமின்றி, பன்னூறு தமிழ் இளைஞர்களின் எதிர்பார்ப்பாகவும், வேண்டுகோளாகவும் உங்கள் முன் வைக்கிறேன்.

- ***இள. கதிர்வேல்***, ஒசூர்

## பெங்களூர் தனித்தமிழர் சேனை நிறைவேற்றிய தீர்மானங்களில் சில

தங்கவயல் மண்ணின் மைந்தர்களான ஐந்து இலக்கம் தொல்தமிழர்களை வீடற்ற நாடோடிகளாக்கும் நோக்கத்துடன், நூற்றி இருபது ஆண்டுப் பழமை வாய்ந்த தங்கச் சுரங்க நிறுவனத்தை வலுக்கட்டாயமாக மூடிவிட இடைவிடாத சதி நடக்கிறது. இச்சதியை முறியடிக்கவும், தங்வயல் தொழிலை நிலைநிறுத்தவும் கோலார்த் தங்கவயலை ஒன்றியப் பைதிரமாக (யூனியன் பிரதேசமாக) ஆக்கவேண்டும் என்னும் வலுவான கோரிக்கையுடன் களமிறங்கிய "போராட்ட அமைப்பு" தான் "மண்ணின் மக்கள் தன்னுரிமை முன்னணி." உருவாக்கப்பட்ட ஒரே கிழமையில் தங்கவயல் நகராட்சித் தேர்தலிலும் போட்டியிட்டு ஐந்து இடங்களில் வெற்றியும் பெற்றுள்ள இந்த முன்னணியின் மண்ணுரிமைப் போராட்டத்திற்கு எல்லா வகையிலும் உறுதுணை புரியுமாறு உலகத் தமிழர் ஒவ்வொருவரையும் இச்செயற்குழு அறைகூவி அழைக்கிறது.

கருநாடகத்தில் வாழும் ஒரு கோடித் தமிழர்களின் தாய்மொழி உரிமைக்கு மதிப்பளித்துக் கருநாடகத்தின் பல்கலைக் கழகங்களில் தமிழுக்கு விசிகை தருமாறு கருநாடக அரசினரை இச்செயற்குழு வலியுறுத்துகிறது. கருநாடக அரசுத் துறைகளில் கன்னடர்களை மட்டுமே (100%) பணியில் அமர்த்த வேண்டும்; தனியார் துறைகளில் 80% கன்னடர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும் என்றும் அச்சுறுத்தல்களுக்கிடையே தமிழர் குழந்தைகள் கன்னடம் படிப்பதால் ஆகப்போவது ஏதுமில்லை. எனவே, தாய்மொழியைப் புறக்கணித்துவிட்டுக் "கன்னடம்" கற்பிக்கும் போக்கை அறவே கைவிட்டுவிட்டுத் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்த்தமிழைக் கற்பிக்க முன்வருமாறு கருநாடகத் தமிழர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

"தமிழக முதல்வரும் கருநாடக முதல்வரும் இணைந்து நின்று விழா நடத்தித் திருவள்ளுவர் சிலையைத் திறப்பார்கள்" - என்று அப்போது அளித்த உறுதிமொழிகளைக் காற்றிலே பறக்கவிட்டு விட்டு, இப்போது.

"திருவள்ளுவர் சிலையைத் தகர்த்தெறிந்துவிட்டு அந்த
இடத்திலே
சர்வக்ஞரின் சிலையை நிறுவுவோம்"

என்று கன்னட வெறி அமைப்புகள் தீர்மானம் நிறைவேற்றிய பிறகும்கூட "வாய்மூடி" மகிழ்ந்து கொண்டிருக்கும் கருநாடக ஆட்சியாளர்களையும், அவர்களைத் தட்டிக் கேட்க விரும்பாத தமிழக ஆட்சியாளர்களையும் இச்செயற்குழு மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது.

## ஊழலும் இலஞ்சமும்

தற்போது ஊழல் என்றாலே முதல்வர் அல்லது அவரை ஒட்டி இருப்பவர்கள் செய்வதுதான் ஊழல் என்று மக்கள் நினைக்கும் அளவு பிரச்சாரம் செய்யப்படுகிறது. அந்த பரப்புரையின் வீச்சில் இதர அனைத்து ஊழல்களையும் இலஞ்சங்களையும் மக்கள் மறந்து விடும்படி செய்யப்படுகிறது. அரசு ஊழியர்களின், அதிகாரிகளின் இலஞ்சத்தின் அளவை கணக்கிட்டால் தலைமையிட



படிப்பகம்

www.padippakam.com

இலஞ்ச அளவைவிட பலமடங்கு கூடுதலாகவே வரும். அரசு இயந்திரத்தை சாமான்ய மக்கள் கைக்கு எட்டும் படி செய்ய போவதாகவும், அப்போது இருந்த அரசு இயந்திரம், வெள்ளையனின் காலனி ஆதிபத்திய நோக்கங்களுக்கு இசைய இருப்பதாகவும், எனவே, அதை சுதந்திரம் வந்தவுடன் மாற்றிவிட போவதாகவும் நேரு, காந்தி முதலானோர் பேசி வந்தனர்.

சுதந்திரம் வந்தபின் நிர்வாக சீர்திருத்த ஆணையம் என்று ஒருமுறை மொராஜி தேசாய் தலைமையிலும், இன்னொரு முறை அனுமந்தையா தலைமையிலும் இரண்டு ஆணையகங்கள் நியமிக்கப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டன. ஆனால், அந்த அறிக்கைகள் செயல்படுத்தப்படவே இல்லை. மக்களுக்கு அன்றாட வாழ்வில் நிர்வாக இயந்திரம் தரும் தொல்லைகளும், பெறும் இலஞ்சமும் சொல்லில் அடங்கா. காவல் நிலையம், வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரசு மருத்துவமனைகள், வணிகவரி, வருமான வரி அலுவலகங்கள் போன்ற அனைத்து துறைகளிலும், இலஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. சாதாரண கிராம நிர்வாக அதிகாரி நிலவரி வசூலின்போது பெறும் இலஞ்சத்திற்கு பெயர் செலவு வரிப்பணம்.

கூட்டுறவுத்துறை ஊழல், கையாடல் ஆகியவை ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும். கூட்டுறவு சங்கங்களின் தேர்தல்களில் போட்டி கடுமையாக இருப்பதற்கு இந்த தேட்டை ஒரு காரணம். என்றைக்கும் வெளியில் தெரியாமல் இருக்கும் ஊழல் இராணுவத்தில் உள்ள ஊழலாகும். 1958-ல் இராணுவத்திலிருந்து என் நண்பர் ஒருவர் அவருடைய முகாமில் நடக்கும் ஊழல்பற்றி எழுதி இருந்தார். அந்த கடிதத்தை கம்யூனிஸ்ட் தலைவர் திரு. பி. இராமமூர்த்தியிடம் காட்டினேன். அவர் "இப்படியெல்லாம் எழுத கூடாதப்பா, கோர்ட் மார்சல் செய்து விடுவார்கள்" என்று கூறினார். இப்போது பெரிய அளவில் இராணுவ ஊழல் டெகல்காம்மூலம் வெளிப்பட்டுள்ளது.

கோவில் சொத்துக்கள் மடாலயத்தின் சொத்துக்கள் இவற்றில் நடக்கும் ஊழலும் அதிகம். வெளியில் தெரிவதுயில்லை. ஒருமுறை தொல்லியல் துறை இயக்குநர் டாக்டர் நாகசாமி, ஆகமங்களிலிருந்து மேற்கோள் காட்டி பழைய கோவில்களை பழுதுபார்க்க இயலாத நிலையில் புதிய கோவில்கள் கட்டக் கூடாது என இந்து பத்திரிக்கையில் எழுதினார். அதற்கு பெரிய எதிர்ப்பு வந்தது. கோவில் கட்டுதல் புணர்வுதாரணம் செய்தல் போன்றவற்றுக்கு மக்களிடம் தாராளமாக நிதி கிடைக்கும். அதைவைத்து ஒரு வசூல் கொள்ளை நடத்துவது எளிதாகிறது.

கல்வி பெரிய வணிகமாகிவிட்டது. கல்வி வணிகத்தின் ஆழமும் பரப்பும் பற்றி அண்மையில் துக்ளக் இதழில் மூன்று வாரம் தொடர்ந்து கட்டுரை வந்தது. ஊழல் செய்வதில கீழ்மட்ட ஊழல், மேல் மட்ட ஊழல் என இருவகைப்படும். வயிற்று பிழைப்புக்கு என்று செய்யப்படும் சிறிதளவிலான ஊழல். வசதி வாய்ப்பை பெருக்கிக் கொள்ள என செய்யப்படும் பெரிய ஊழல் ஒரு இன்னொரு வகை. வணிக உலகில் நடக்கும் ஊழல்களுக்கு கணக்கே இல்லை. நடக்காத இதழ்கள் பேரால் காகித உரிமம் வாங்கி, அதை கறுப்புச் சந்தையில் விற்று கொள்ளை அடிக்கிறார்கள். அந்த ஊழலகளை பயன்படுத்தி அரசியல்வாதிகள் ஆதாயம் திரட்டுவது சுருக்கமாக "பர்மிட், லைசன்ஸ், கோட்டா ராஜ்" என்று இராசாசி அழைப்பார்.

"பொதுப்பணித்துறை என்னுடைய எதிரி எண் ஒன்று" என்றார் இராசாசி. அதில் நடக்கும் ஊழலை, இலஞ்சத்தையும் வைத்து அப்படி சொன்னார். ஆனால், இன்று ஊழலில் முதலிடம் வகிப்பது "மாசு கட்டுப்பாட்டு வாரியம்" என்றுதான் சொல்லவேண்டும்.

இன்று சுற்றுச் சூழலை பாதுகாப்பது, இயற்கை செல்வங்களை பாதுகாப்பது என்பது ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. வனத்துறை ஊழல் காரணமாக காடுகள் அழிக்கப்படுகின்றன.

மதுவிலக்கு ஊழலின் உறைவிடமாக ஆகிவிட்டது. காவல்துறை, கள் இறக்குவோர், சாராயம் காய்ச்சுவோர், சாராயம் விற்போர் கூட்டணி பலமாக



படிப்பகம்

www.padippakam.com

உள்ளது. இதில் ஈடுபட்டுள்ள லட்சக் கணக்கானோர் சட்ட மீறுதல் என்பதை வாழ்க்கை முறையாகக் கொண்டுள்ளார்கள்.

நகராட்சிகள் ஊழலின் உறைவிடமாக உள்ளன.

வர்த்தக உலக சூதாட்டங்களில் மக்கள் எந்த அளவு பாதிக்கப்படுகிறார்கள் என்பது சொல்லும் தரமன்று. உணவுப் பொருள்களை பதுக்கி வைத்து விலையேற்றி கொள்ளையடிப்பது அதில் ஒருவகை.

ஆலை முதலாளிகள் தொழிலாளர்களுடைய சேமிப்பு நிதிகள் தராமல் நூற்றுக்கணக்கான கோடி ரூபாயை அமுத்தி வைத்துக் கொண்டு, அந்தப் பணத்தைக் கொண்டு புதிய தொழில்களை ஆரம்பித்து விடுகிறார்கள். அதேப்போன்று தமிழ்நாட்டில் உள்ள கரும்பு ஆலைகள், 33 விவசாயிகள் தந்த கரும்புக்கு ரூபாய் 300 கோடி வரை கொடாமல் அந்தப் பணத்தை வேறு வகையில் ஈடுபடுத்துகின்றனர். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் நடக்கும் மோசடிகள் ஏராளம். ஓவர் 'இன்வாய்ஸ் அண்டர் இன்வாய்ஸ்' என்பது அவற்றில் ஒன்று. பெரிய அளவு நடந்த பங்கு சந்தை ஊழல் விசாரணை மிக மெதுவாக நடக்கிறது. மெகா ஊழல், விசாரணை எல்லாமே அப்படித்தான்.

நாட்டின் பொருளாதார முன்னேற்றச் செயல்கள்அனைத்தையும் முடக்கி போடும் வலிமை கறுப்பு பணத்துக்கு உண்டு. கறுப்பு பணத்தை உற்பத்தி செய்வதில் ஊழலுக்கும், இலஞ்சத்துக்கும் பெரும் பங்கு உண்டு. நாட்டின் மக்களுக்கான முன்னேற்ற திட்டங்கள் முழுவதும் கறுப்புப் பணத்தால் பாழாகிவிடுகிறது என்று நேரு கூறினார்.

கறுப்புப் பணத்தைப்பற்றி ஆராய வான்ஞ்சு ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அது அப்போது நாட்டில் 60,000 கோடி கறுப்பு பணம் இருப்பதாகக் கூறிற்று. தற்போது 31/2 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் கறுப்பு பணம் இருப்பதாகக் கணக்கிடப்படுகிறது. 60,000 கோடி இருக்கும்போது நேரு "அது ஒரு போட்டி அரசாங்கம் நடத்துகிறது" என்றார். இன்று கறுப்பு பணத்தைப பற்றி பேசுவோர் யாருமில்லை.

மைய மாநில அமைச்சர்கள், தலைவர்கள் பற்றிய மெகா ஊழல்கள் ஆகஸ்ட் 47-க்குப்பிறகு ஒரு ஆயிரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் இதில் யாரும் தண்டனை அடைந்து சிறையில் இருப்பதாகத் தெரியவில்லை. 20 ஆண்டுகளுக்கு முன்னால் திரு. A.G. நூராணி MINISTERS MISCONDUCT என்ற ஒரு பெரிய நூலை, பெரிய இடத்து ஊழல் பற்றி எழுதினார். அதில் சொல்லப்பட்ட ஊழலில் ஒன்றுக்கு கூட யாரும் தண்டனை பெற்றதாகத் தெரியவில்லை. சித்ரா கிருஷ்ணசாமி பத்தாண்டுகளுக்கு முன்னரே போஃபார்ஸ் ஊழல்பற்றி விளாவாரியாக ஒரு நூல் எழுதியிருந்தார். ஆனால் இன்றுவரை ஊழல் பணத்தை கையில் வாங்கியது யார் என்ற ஆராய்ச்சி நடந்து கொண்டே இருக்கிறது.

முகம்மதுர் கடாபியின் "இஸ்லாமிக் சோஷலிச லிபியாவில்" கடை வைக்கக்கூட தனி நபருக்கு அனுமதி இல்லை. அரசு கடைகளே அத்தனையும் குறிப்பிட்ட சதவீதம் லாபம் வைத்து விற்கிறார்கள். திடீர் விலையேற்றம், திடீர் விலை வீழச்சி வர்த்தக சூதாட்டம் முதலியவற்றுக்கு அங்கு இடம் இல்லை. ஊழல் அதிகாரிகள் உடனுக்குடன் தண்டிக்கப்படுகிறார்கள். ஒரு அறிவார்ந்த மக்கள் கொண்ட சமதர்ம சமுதாயத்தில் மட்டுமே இலஞ்சத்தையும், ஊழலையும் ஒழிக்க முடியும்.

*- பூ.அர. குப்புசாமி*

## வீணடிக்கப்படும் எரிபொருள் வளம்

"என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்" என்ற பொதுவுடைமை கவி "பட்டுக்கோட்டை" கல்யாணசுந்தரம் அவர்களின் வரிகள் மிகவும் சிந்திக்க வேண்டியவை.

நம் நாட்டில் நிறைய எரிபொருள் வளம் இருந்தும் அதை அரசு நன்கு



படிப்பகம்

www.padippakam.com

பயன்படுத்துவதே இல்லை. குறிப்பாக எண்ணெய்வள நாடுகள் எண்ணெய் உற்பத்தியை பெருக்காமல் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலையை உயர்த்திவிட்டன. இதன் விளைவால் நம் நாட்டில் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்ந்துவிட்டது என்று அரசு அறிவித்தது. ஆனால் நம் நாட்டில் கிடைக்கும் இயற்கை எரிவாயு "ONGC" ஆல் கண்டுபிடிக்கப்பட்டு அதை பயன்படுத்த முடியாமல் இருக்கும் நிலை மிகவும் வருந்தத்தக்கது. ஒரு மாதத்திற்கு முன்னால் ஒரு செய்தி அதாவது வங்க தேசத்தில் உபரி இயற்கை எரிவாயுவை இந்தியா வாங்கி பயன்படுத்த ஆயத்தமாகியது. இதற்கு அமெரிக்க நிறுவனம் ஒன்று வங்க தேசத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே குழாய் பதித்து எரிவாயு வழங்க ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. 20 ஆண்டுகளுக்கு வங்க தேசம் இந்தியாவிற்கு ஒப்பந்தப்படி கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளது. தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அபரிமிதமான இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகாலமாக மூடப்பட்டு கிடக்கிறது. இதனால் ஓர் ஆண்டுக்கு 100 கோடி கன மீட்டர் நிலவாயு வீணடிக்கப்படுகிறது. இந்த நிலவாயுவை இதன் அருகில் ஒரு அனல் மின்நிலையம் அமைத்து இயற்கை நிலவாயுவை பயன்படுத்த வேண்டும். அதை விடுத்து தமிழக அரசு ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி அனல்மின் திட்டத்தை செயல்படுத்த முயல்கிறது. இலாப நோக்கில் பார்த்தால் நிலக்கரியை சுரங்கத்தில் இருந்து எடுத்து அதை தூய்மைப்படுத்தி பிறகு உலர்த்தி பயன்படுத்த வேண்டும். ஆனால் நிலவாயு மூலம் தயாரிக்கப்படும் மின்சாரம் சிக்கனமானது. நிலவாயு எடுக்க நிலக்கரியை போன்று சிரமப்பட தேவையில்லை. மேலும் நிலக்கரி நம் நாட்டில் தரம் குறைந்ததாகவே கிடைக்கிறது. இதன் எரிதிறன் மிகவும் குறைவு, இயற்கை நிலவாயு 47% எரிதிறன் உடையது. மேலும் நிலவாயுவை எங்கு வேண்டுமானாலும் குழாயின் மூலம் கொண்டு சென்று மின்நிலைமோ அல்லது வேறு ஏதாவது தொழிற்சாலையோ அமைக்கலாம். மேலும் இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மற்றும் சாதிச்சண்டைகள் மிகுதியாக நடைபெறக்கூடிய பகுதி இங்கு ஒரு மின் நிலையமோ, தொழிற்சாலையோ அமைத்து வேலையில்லாத மக்கள் பயன்பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கு தயாரிக்கப்படும் மின்சாரத்தை தூத்துக்குடி பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தலாம். இதைவிடுத்து நடுவன் அரசு ஆபத்து நிறைந்த கூடங்குளம் அணுமின் நிலையத்தை அமைக்க ஆயத்தமாகிறது. இதற்கு ரஷ்யாவின் தொழில்நுட்பத்தை பெற முனைகிறது. ரஷ்யாவின் சொர்நேபில் அணுமின் நிலைய விபத்து நடந்து அங்கு ஏராளமானவர்கள் இறந்தார்கள் இருந்தாலும் ரஷ்யாவிடம் தொழில்நுட்பம் வாங்க இந்தியா முயல்கிறது. நாம் மாற்று எரிபொருள் பயன்படுத்த முயலவேண்டும். பிரேசில், கியூபா போன்ற இலத்தீன், அமெரிக்க நாடுகளில் எரிசாராயம் (ஸ்பிரிட்) மூலம் கார் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் இயக்கப்படுகின்றன. இதற்கு தகுந்தாற்போல் அந்நாட்டு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சட்டம் இயற்றியுள்ளது. நம் நாட்டில் நிறைய கரும்பு கழிவு (மொலசஸ்) மூலம் நாம் நிறைய எரிசாராயம் தயாரித்து அதை எரிபொருளாக பயன்படுத்தலாம். (நாம் எரிசாராயத்தை குடிசாராயமாகதானே பயன்படுத்துகிறோம்) பிரேசில், கியூபா போன்ற நாடுகளைப் போல் நாமும் கார் மற்றும் இரண்டு சக்கர வாகனங்களை இயக்க எரிசாராயத்தை பயன்படுத்த வேண்டும். இதனால் ஏராளமான அன்னியசெலாவணி மிச்சப்படுத்தப்படுகிறது.

***சாண எரிவாயு :***

நம் நாட்டில் ஏராளமான கால்நடை பண்ணைகள் உள்ளன. இதன்மூலம் அரசு சிறப்பு ஆணை பிறப்பித்து கால்நடைப் பண்ணைகளிலிருந்து எடுக்கப்படும் சாண எரிவாயுவை மரபு சாரா எரிபொருளாக தயாரித்து அதை சிலிண்டரில் அடைத்து வீடுகளுக்கோ மற்றும் வேறு பயன்பாட்டுக்கோ பயன்படுத்தலாம். சீன நாட்டில் கழிவுத் தொட்டியிலிருந்து எடுக்கப்பட்ட மீத்தேன் வாயுவை சமையல் எரிபொருளாக பயன்படுத்தவேண்டும் என்று சீனஅரசு கட்டாய ஆணை பிறப்பித்து உள்ளது. (கழிவு தொட்டியில் இருந்து எடுக்கப்படும் மீத்தேன் வாயு நன்கு எரியகூடியது) இதை நாமும் பின்பற்றலாம்.

- **G. *சிவசங்கரன்***, புதுக்கோட்டை



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு வேண்டுகோள்!

# "தமிழ்நேயம் வளர்ச்சி நிதிக் குழு"

1180, சத்தி நெடுஞ்சாலை, கணபதி, கோவை - 6

வணக்கத்துக்குரிய தமிழ் நெஞ்சங்களே,

காலம் விரைந்து செல்கிறது. பயன்படுத்தாமல் நாம் பின்தங்கிவிட்டோம்! சமுதாயத்தை முன்னழைத்துச் செல்வதற்கு அரசியல் கட்சிகளும், வாழ்வை நெறிப்படுத்தி இயக்குவதற்கு சமயங்களும் தோற்றுவிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. எனினும் அரசியல்வாதிகளின் பிடியில் சிக்கி மனிதர்களிடையே பகைமையை வளர்க்கும் பணியில்தான் அவைகள் இன்று செயல்படுகின்றன.

அரசியல்வாதிகளின் நோக்கம் ஆதிக்க நாற்காலி. அன்று அரசர்கள். இன்று அரசியல் குழுக்கள். இருவரது குறிக்கோளும் தங்கள் இன்ப வாழ்வே! இவர்களின் தமிழ்நேயம் தமிழினம் என்பதெல்லாம் ஆதிக்க வெறிக்கு தீனி தேடும் ஏணிகள்தாம்! இந்தப் போக்கை அனுமதித்தால் நமது முகவரிக்கே மோசம் வந்துவிடும். குக்கிராமங்களிலிருந்து வரும் மம்மி - டாடி என்ற நாராசம் நமக்கு விடுக்கும் அபாய அறிவிப்பல்லவா?

இருப்பினும் தமிழறிஞர்களும், ஆர்வலர்களும் வேற்றுமைகளை மறந்து விழிப்புடன் செயலாற்றினால் மொழி பகைமைச் செயல்களைக் கட்டுக்குள்வைத்து, செவ்வியழ் தமிழைச் செங்கோலோச்சும்படி செய்வதை எந்த சக்தியாலும் தடுத்துவிட முடியாது !

முதற்படியாக, புதிய தலைமுறையான மாணவர் சமுதாயத்துக்கு, ஆசிரியப் பெருமக்களின் ஒத்துழைப்புடன் தமிழ் நேயத்தை ஊட்டுவது இப்போதைய முழு முதல் தேவையாகும். கட்டுரை, சொற்பொழிவு, கருத்தரங்கம், கவிதை முதலியவற்றை ஊக்குவித்து மறைந்து வரும் தமிழுணர்வைத் தட்டி எழுப்ப வேண்டும். வெற்றியீட்டியவர்களுக்கு சிறப்புப் பரிசுகளை வழங்க வேண்டும்.

அத்துடன் தமிழ் இலக்கியங்களைப் புதிய கண்கொண்டு ஆய்வு செய்வதும், மறைந்து கிடப்பவற்றையெல்லாம் தூசு தட்டி வெளிக் கொணருவதும் இன்றைய முக்கியத் தேவைகளில் ஒன்றாகும். அதற்கென திரு. ஞானி முதலிய நண்பர்களின் முயற்சியில் தமிழ் ஆய்வு மையம் ஒன்று கோவையில் துவக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் அதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

இந்த ஆக்கப் பணிகளுக்கு நிதி வேண்டும்! இதற்காகக் குறைந்த அளவு ஒரு இலட்சம் ரூபாய் சேமிப்பு நிதியாகத் திரட்ட முடிவு செய்தோம். புலவர் ஆதி அவர்கள் தலைமையில், திருவாளர்கள் ஞானி, முனைவர், நடராசன், கண. குறிஞ்சி, இரணியன் போன்ற நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழறிஞர்களும், ஆர்வலர்களும் பங்கு கொண்ட ஆலோசனைக் கூட்டம், கணபதி, ரூபி பள்ளியில் நடைபெற்றது தாங்களே முன்வந்து ஆயிரம், இரண்டாயிரம் என வாக்குறுதி அளித்ததில், ஏறத்தாழ 25 ஆயிரங்கள் சேர்ந்தன. நண்பர்கள் தங்கள் கொடைகளை மனமுவந்து அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்!

இனிய தமிழன்பர்களே,

நமது வாழ்வோடியைந்த தாய்த்தமிழைத், தாழவிட மாட்டோம் ! நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு காசும் தமிழுணர்வை மேம்படுத்தும் ! ஆங்கில மோகத்தை மாய்த்தொழிக்கும் ! சங்ககாலப் பெருமைகளை மீட்டெடுக்கும். அள்ளித் தாருங்கள் நன்கொடைகளை ! வணக்கம் !

இவண்,

| | | |
|---|---|---|
| ***மருத்துவர் கோபி*** | ***கவிஞர் இரவீந்திரன்*** | ***புலவர் ஆதி*** |
| (தலைவர்) | (செயலாளர்) | (அமைப்பாளர்) |



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



நண்பர்களுக்கு :

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை என்று முடிவு செய்திருந்தாலும், தமிழ்நேயம் - 3 இரண்டாவது மாத இறுதியிலேயே வெளிவருகிறது. கட்டுரைகளும் மடல்களும் அறிக்கைகளும் என இந்த இதழில் தொகுத்து வெளியிட்ட பிறகும் கைவசம் இன்னும் கட்டுரைகள் உள்ளன.

இந்த ஏட்டில் வெளிவரும் கட்டுரைகள் வரலாற்றில் அன்றும் இன்றும் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் நேர்ந்த நெருக்கடிகளைச் சொல்லுகின்றன. உலகமயமாதலின் விளைவாக நமக்கு நெருக்கடிகள் மிகுந்து வரும் இன்றைய சூழலில் இலக்கியமென்று மட்டும் நம்மால் பேசிக் கொண்டிருக்க இயலாது. வரலாறென்றும் மெய்யியலென்றும் அறிவியல் என்றும் ஆன்மீகம் என்றும் புதிய தேடல்களுக்குள் நாம் பயணம் செய்தாக வேண்டும். இவற்றுக்குள் செயல்படும் அதிகாரங்களை களைந்து கொண்டால் ஒழிய நமக்கு எதிர்காலம் இல்லை.

இவை பற்றி எல்லாம் கட்டுரைகளும் மடல்களும் இங்கு வெளியாகின்றன. நண்பர்கள் மனம் திறந்து இவற்றை வாசிப்பாகள் என்று நம்புகிறேன். தமிழ்மக்கள் என்ற முறையில் நமக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை நாம் எதிர்கொள்வதற்கு என்ன வழி என்று நாம் சிந்திக்க வேண்டும். இவை குறித்து, உங்கள் அனுபவங்களோடு தமிழ் நேயத்திற்கு எழுதுங்கள். மாற்றுக் கருத்துக்களையும் அன்போடு தமிழ் நேயம் வரவேற்கிறது. சந்தா மற்றும் நன்கொடைகள் அனுப்புவதில் தாமதமோ, தயக்கமோ கொள்ளாதீர்கள்.

- ஞானி

ஆசிரியரும் வெளியிடுபவரும் :
**கி.பழனிச்சாமி (ஞானி)**
123, காளீசுவரர் நகர், கோயமுத்தூர் 641 009 தொலைபேசி : 235040

அச்சாக்கம் :
**விஷ்ணு அச்சகம்,**
10வது வீதி, காந்திபுரம், கோயமுத்தூர் - 641 012 தொலைபேசி : 493093

படிப்பகம்